நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 190 பெப். 10 - பெப். 23, 2000 விலை ரூபா 10. 00.





சூத்திரதாரி யாரோ?



அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டும்

## மாணவர் போராட்டம்!





முஸ்லிம் காங்கிரஸின் புலி எதிர்ப்பு:

## ஆதாரமில்லாத தளம்?

## வாலிபர் காங்கிரஸ் விட்டுச்சென்ற விழுமியங்கள்

நன்றி - நூலகத்திட்டம்



# வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்!

ஊடகங்களை நோக்கியிருந்த அரசின் அச்சுறுத்தல் பார்வை அவ்வூடகங்களிற்குத் தகவல் சென்றடையும் வழிகளின் மீது



பேராசிரியர் கா. சிவத்தம்பி

திரும்பியுள்ளது. இதனடிப்படையில் அரச நிர்வாகத்தின் தலைவர்களும், அதிகாரிகளும் சில தகவல்களை வெளியிடுவதில் பேண வேண்டிய விதிமுறைகளை உபயோகித்து ஊடகங்களுக்குத் தகவல் சென்றடையும் வழிகளில் ஒன்றை அடைக்க முயல்கின்றது.

அரச திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தகவல் வழங்குவதைக் கட்டுப்படுத்திச் சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

அரசு இதன் மூலம் சாதிப்பது.

1. மக்களுக்குத் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை மறுப்பு.
2. அரசின், நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை மீதான அச்சுறுத்தல்.
3. நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும், ஏனைய அரச அதிகாரிகளும் தகவல் வெளியிடுவதற்கான உரிமை மறுப்பு.
4. ஒரேயொரு தகவல் மூலமாகத் தகவல் திணைக்களத்தை மாற்றுவது
5. வடக்கு, கிழக்கு நிலமைகளை வெளிக் கொணர்வதில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்.

மேற்சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக, மனித உரிமையாளர்கள், அரசியல் கட்சிகள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்புக் கீழே தரப்பட்டுள்ளது.

"இதன் மூலம், அரசு தன் நிர்வாகத்தின் தன்மையை உணர்ந்திருக்கிறது என்பதையே வெளிக்காட்டியுள்ளது. அவ்வாறான தனது நிர்வாகச் சீர்கேடுகள் மக்களுக்குத் தெரிய வருமானால், அது தனக்கு அச்சுறுத்தலாக அமையும் என அரசு அச்சமடைந்துள்ளது.

எவ்வாறெனினும் வடக்குக் கிழக்கு மக்களையே இது அதிகளவில் பாதிக்கும். வன்னிக் குடிசன மதிப்பீடு போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களையே அமுக்கப்படுவதற்கு இது பயன்படும்."

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
(ஈ. பீ. ஆர். எல். எவ்.).


"இது எந்த மட்டத்திலான அரச உத்தியோகத்தர்களைப் பாதிக்கும் எனவும், நிர்வாகத்தை எப்படிப் பாதிக்கும் எனவும் கவனிக்க வேண்டும்.

உயர்மட்டத் தலைவர்கள், அதிகாரிகள் போன்றோர், அரச நிர்வாகம் தொடர்பான தகவல்களை வெளிக்கொணர்பவர்களாக இருக்கின்றார்கள். வடக்குக் கிழக்கில் அரச அதிபர்களே ஒரே ஒரு தகவல் மூலமாகச் செயற்படுகின்றனர். அது அவர்களின், நிர்வாகப் பொறுப்பின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது. எனவே இத்தகைய சுற்று நிருபம் அவ்வாறான நிர்வாகப் பொறுப்பிற்கும் அச்சுறுத்தலாகவே அமையும்."

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

அரச நிர்வாகம் தொடர்பான சில தகவல்களை வெளிப்படையாக்க முடியாது என்ற விதியினை உபயோகித்து, அனைத்துத் தகவல்களையும் முடக்க முற்படுவது தவறானது.

குறிப்பாக, இந்தச் சுற்று நிருபம், மக்களுடைய தகவல்



சுரேஷ் பிரேமச்சந்திரன்

அறிந்து கொள்ளும் உரிமையை மறுக்கிறது. அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது தான் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்த வெளிப்படைத் தன்மைக்கு எதிராகவே இந்த அறிவிப்பு இருக்கிறது. குறிப்பாக வடக்கு கிழக்கின் மக்களுடைய பிரச்சினை பற்றி பேசி வந்த அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் பேச முடியாத அங்குள்ள உண்மை நிலைமைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்படும். கருத்து வெளிப்பாட்டுக்கு விடுக்கப்பட்ட ஒரு அச்சுறுத்தலே.

**- பூ. சீவகன்**
(செயலாளர், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்).

" பொதுத் தேர்தலுக்கான ஒரு நகர்வாகவே இதைக் கொள்ள வேண்டும். அது அனைத்துத் தகவல்களையும் மூடி மறைப்பதன் மூலம் இதையே மேற்கொள்கிறது. மக்கள் தமக்குக் கிடைக்கும் தகவல் அடிப்படையிலேயே, தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். தகவல்கள் சென்றடையும் வழிகளை அடைக்க முற்படுவதன் மூலம், மக்களின் தீர்மானம் எடுக்கும் உரிமையும் மீறப்படுகிறது".

**- செ. மனோரஞ்சன்**
செயலாளர் 'மன்று'

# கமாலிட்டா பாலியல் வல்லுறவும் கொலையும்

## நிரூபணமாகிவரும் உண்மைகள்!

மன்னார் பள்ளிமுனை யுவதி ஐடா கமலிற்றா மீதான துப்பாக்கிப் பிரயோகம்,சம்பவ தினத்தன்று பள்ளிமுனை படைமுகாமில் கடமையில் இருந்ததாகக் கூறப்படும் படையினர் வைத்திருந்த துப்பாக்கி ஒன்றில் இருந்தே மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று அரச இரசாயன பகுப்பாய்வாளரின் ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.


அத்துடன், நீதிமன்றத்தினால் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் குடிமக்கள் சாட்சியங்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட, இந்த இராணுவ முகாமைச் சேர்ந்த இரண்டு சிப்பாய்கள் வைத்திருந்த ஒரு துப்பாக்கியில் இருந்தே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதும், நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, மேல் விசாரணைக்காக இந்த வழக்கு மார்ச் மாதம் 14 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஏழு மாதங்களாக் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களாகிய ராஜசோமரத்ன, உப்புல் குருசிங்க ஆகிய இரண்டு சிப்பாய்களும் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த ஐடா கமலிற்றா என்ற யுவதி கடந்த 12.7.1999 ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதன் பின்னர், சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார் என மன்னார் பொலிசார் மன்னார் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, இந்த வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை நடத்துமாறு பொலிசாருக்கு மன்னார் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

கொலையுண்டவரின் பிறப்புறுப்பில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டிருந்தது என்று வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த வழக்கு விசாரணைகளை நடத்திய விசேட புலனாய்வு பொலிசாரின் வேண்டுகோளுக்கிணங்க, புதைகக்கப்பட்டிருந்த கமலிற்றாவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதேவேளையில் குற்றச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு

➲19



பாடசாலைக்குச் செல்கின்ற நாட்களில் படித்த ஒரு நகைச் சுவைத் துணுக்கு ஞாபகம் வருகிறது.

வகுப்பறையில் கற்பிக்க முடியவில்லை என்பதற்காக, ஆசிரியர் ஒருவர் தனது விரிவுரையை ஒலி நாடாவில் பதிவு செய்து கொண்டு வந்து தனது மேசையில் வைத்து விட்டு, " நான் சொல்வதெல்லாவற்றையும் இதில் பதிவு செய்துள்ளேன், கேட்டுக் கொள்ளுங்கள் " என்று கூறிவிட்டுப் போனாராம்.

மறு நாளும், இவ்வாறே செய்த ஆசிரியர், சிறிது நேரம் கழித்து வகுப்பறைக்கு வந்து பார்த்த போது அங்கு ஒரு மாணவர்களையும் காணவில்லை.

பதிலாக எல்லா மாணவர்களது மேசையிலும் ஒரு ஒலிப் பதிவுக் கருவி வைக்கப்பட்டிருந்ததாம் !

இந்தத் துணுக்கு இப்போது ஞாபகம் வந்ததற்குக் காரணம், எங்கள் நாட்டின் " மகத்தான 52 ஆவது சுதந்திர தின விழாக் " கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள, ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள கோட்டே பாராளுமன்றத்திற்கு முன்னாள் உள்ள, விழா மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள், ஜனாதிபதியின் பேச்சைத் தொலைக் காட்சியில் பார்க்க வேண்டி ஏற்பட்டதுதான்.

அலரி மாளிகையில் இருந்து அம்மா ஆற்றிய உரையைக் கோட்டேயில் போயிருந்து தொலைக் காட்சியில் பார்க்க வேண்டிய தலை விதி அவர்களுக்கு.

அடுத்த ஆண்டு அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடி இதனைப் பார்த்துக் களிப்பார்கள் !

மிலேனியப் புரட்சிச் சுதந்திர தின விழா அது !

இலங்கை எவ்வளவு பெருமையுடன் தன் சுதந்திர தின விழாவைக் கொண்டாடினாலும் தகும் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆனாலும், ஒரு சிலர் விசனப்பட்டுக் கொண்டார்கள் இப்படி,

" அம்மா அங்கே போக மாட்டா என்றால் எங்களை நிம்மதியாக விட்டிருக்கலாம் தானே. தேவையில்லாமல் சுதந்திர தின விழா அன்று காலி வீதியில் இறங்கி நடக்கக் கூட விட மாட்டேன் என்று மறுத்து விட்டார்கள். இது என்ன சுதந்திர தினமா அல்லது சுதந்திரம் மறுக்கப்பட்ட தினமா என்று புரியவில்லை. " - கொள்ளுப்பிட்டி றேணுகா ஹொட்டேலில் தங்கியிருந்த, வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் இவ்வாறு ஆதங்கப்பட்டார்.

சுதந்திர நாள் அல்ல : இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்களின் சுதந்திரம் மறுக்கப்பட்ட நாள் அது என்பது ஒரு 52 வருடப் பழைய கதை.

ஆனால், அதை இப்போதுதான் தென்னிலங்கை உணர்கிறது. அவ்வளவு தான்!

யாழ். மாணவர்கள் நடாத்திய பகிஸ்கரிப்பு பேராட்டம், கைது செய்யப்பட்ட வசாவிளான் மத்திய மகா வித்யாலய மாணவி பிரியா ஸ்ரீஸ்கந்தரசா, சந்திரோதயா மகா வித்தியாலய மாணவன் வினோத் ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் விடுவிக்கப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்களும் அவர்களின் தாயாரும் தற்கொலைக் குண்டுதாரியை அடையாளம் காண்பதற்கான விசாரணைக்காகவே கைது செய்யப்பட்டனர் என்று பின்னர் அரச படைகளின் தரப்பில் விளக்கம் தரப்பட்டது.

இதுதான் உண்மையான நோக்கம் என்றால், இதனை வெளிப்படையாகவே, சாதாரண சட்ட நடைமுறைகளுக்குக் கீழேயே செய்திருக்க முடியும்.

ஆனால், படையினர் அவ்வாறு செய்யாதததுடன் முழு மாணவ சமூகத்தையும், பெற்றோரையும் அச்சத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட்டிருக்கும் விதத்தைப் பார்க்கையில் இம்மாணவர்களது கைது எவ்வளவு பொறுப்பற்ற தனமாகவும் அதிகாரமமதையுடனும் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

பாடசாலை மாணவர்களின் ஒருமித்த போராட்டம் ஒன்று நடைபெறாவிட்டால், இந்தக் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இன்று விடுவிக்கப்பட்டிருப்பார்களோ என்பது சந்தேகமே. புலிக்குடும்பம் என்ற குற்றச் சாட்டின் பேரில் கேள்வி முறையோ விசாரணை அற்று வருடக்கணக்காக அவர்கள் கூடுகளுக்குள் கிடந்திருப்பார்கள்.

அப்படி இராணுவம் நடந்து கொள்ளவிடாமல் தமது சக்தியைக் காட்டிய மாணவர்களையும், ஆசிரியர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை என்று சொன்னார்கள்.

நல்ல விஷயம், நடக்கட்டும், நடக்க வேண்டும் என்று எல்லோரும் ஆமோதித்தோம்.

ஆனால், எந்தப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளும் ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவதைப் பாதிப்பதாக அமையக் கூடாது என்கிறார்கள் படையினர்.

15,000 பேரைத் திரட்டுவது மிகவும் அவசர, அவசரமாகச் செய்யப்பட வேண்டிய ஒரு பணி. அதை எக் காரணம் கொண்டும் நிறுத்தக் கூடாது என்று சொல்கிறார்கள் சிரேஷ்ட படைத் தலைமைகள்.

புலிகளை, இராணுவ ரீதியில் நொருக்காமல், சமாதானத்தைக் காண முடியாது என்று திரும்பத் திரும்பக் கொமாண்டர் லெப்ரினன்ற் ஜெனரல் ஸ்ரீ லால் வீரசூரிய சொல்லி வருகிறார்.

ஆக, அரசாங்கமும், ஜனாதிபதியும் பேச நினைத்தால் கூட இவர்கள் விடமாட்டார்கள் என்று தெரிகிறது.

சுதந்திர தின விழாவுக்குக் கூட, கொடியேற்ற ஜனாதிபதியைப் போக அனுமதிக்காதவர்கள், சமாதானத்தைக் காணவா விடப் போகிறார்கள். சபாநாயகர் கிழவர் தானே, போனாலும் பரவாயில்லை என்று யோசித்தார்களோ என்னவோ, அவரை மட்டும் கொடியேற்ற அனுப்பி விட்டார்கள்.

ஸ்ரீ மாவோவும் வயதானவர் தான். ஆனாலும் அவர் அம்மாவின் அம்மா அல்லவா ?

சபாநாயகர் செத்தாலும் பரவாயில்லை என்று படையினர் யோசிக்காவிட்டால், அவரைப் புலிகளின் நண்பர் என்று யோசித்தார்களோ என்னவோ ?

எப்படியோ, இனிமேல் பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டியது ஜனாதிபதியுடனோ, அவர் நியமிக்கும் சிவில் அதிகாரிகளுடனோ அல்ல, ஸ்ரீ லால் வீரசூரியவுடன் தான் என்பது இப்போது தெரிகிறது.

என்ன பாஷையில் என்று தான் தெரியவில்லை. யுத்த பாஷையில் தான் அவரால் பேச முடியும் என்பதால், யுத்தத்தைத் தொடர, அவர் தீவிரமாக " விரும்புகிறார் போலத் தெரிகிறது.

சமாதானமாவது, கத்தரிக்காயாவது ?

யாருக்கு வேண்டும் அது ?


# மர்மக் கொலைகள்

மட்டக்களப்பு வந்தாறுமூலை பலாச்சோலை என்ற இடத்தில் யோகராசா தனலெட்சுமி என்ற 23வயதுப் பெண் கொல்லப்பட்டு தூக்கிலிடப்பட்டுள்ளாள்.

சம்பவ தினமான கடந்த நவம்பர் மாதம் நான்காம் திகதி கௌரி விரதத்துக்கு காப்பெடுக்க கோயிலுக்கு போய்விட்டு வந்து சாப்பிட்டு விட்டு வீட்டுமுற்றத்தில் இருந்திருக்கிறார் தனலெட்சுமி. மாலை 6.30 மணியளவில் வேலியோரத்தில் நின்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கவே தனலெட்சுமி எழும்பிப் போயிருக்கின்றார். லெட்சுமியைப் பின் தொடர்ந்து அவரது தம்பி போகவும் தம்பியை வீட்டுக்கு போகச் சொல்லி விட்டு தனியாகவே போயிருக்கின்றார். லெட்சுமியின் வளவு வேலியிலிருந்து 50 மீற்றர் முன்னால் காயான்காடுகள். அதைத் தாண்டினால் ரயில்வே தண்டவாளம். அதையும் தாண்டினால் காயான் காட்டுடன் சேர்ந்த முந்திரிகை மரங்கள். அந்தப் பக்கம் தான் லெட்சுமி சென்றிருக்கின்றார். கூப்பிட்டவரை லெட்சுமிக்கு நன்றாகத் தெரிந்தபடியினாலேயே நம்பிக்கையுடன் தம்பியையும் வரவேண்டாம் என்று தடுத்து விட்டு அந்தப் பகுதிக்கு தனியச் சென்றிருக்கின்றார் என்று அயலிலுள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

லெட்சுமி கோயிலுக்குப் போகும் போது பக்கத்து வீட்டாரின் நகைகளையும் வேண்டிப் போட்டுக் கொண்டு தான் போயிருக்கின்றார். அந்த நகையுடனேயே கூப்பிட்டவருக்குப் பின்னாலும் போயிருக்கின்றார். கொலையாளி லெட்சுமியைக் கொலை செய்து விட்டு நகைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு சென்றிருக்கின்றார். லெட்சுமியின் கொலை இன்னும் மர்மமாகவே உள்ளது. இவர் தூக்கிலிடப்பட்ட முந்திரிகை மரத்துக்கு முன்னால் பதினைந்து யார் தூரத்தில் வைத்தே இவர் கொலை செய்யப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த இடத்தில் அந்திரப்பட்டு உளத்திய தடங்களும் அந்த இடத்திலிருந்து ஆளை முந்திரிகை மரம் வரை இழுத்து வந்த தடமும் இருந்திருக்கின்றது.

அதேவேளை முழங்கால் நிலத்தில் தட்டும் வகையிலேயே லெட்சுமி மரத்தில் தொங்கவிடப் பட்டிருந்தாள். லெட்சுமி தொங்க விடப்பட்டதற்கு அருகில் அவளது



கொல்லப்பட்டபின் தூக்கிலிடப்பட்ட லெட்சுமி

உடுப்புக்கள் சுற்றப்பட்ட சொப்பிங்பேக்கும் இருந்துள்ளது. லெட்சுமி வீட்டை விட்டு வெளியே போகும் போது எந்தவித உடுப்பும் கொண்டு போகவில்லை என அவரது தம்பி கூறுகின்றார். லெட்சுமியின் தகப்பன் வேலைதேடி வெளியூருக்குச் சென்று விட்டார். பிரேதம் அடக்கம் பண்ணி ஆறுநாட்களுக்குப் பிறகு தான் வந்திருக்கின்றார். வீட்டில் சுகயீனமுற்ற தாயும் தம்பியும் தான் இருந்திருக்கிறார்கள்.

இவற்றை வைத்துக் கொண்டு லெட்சுமி கொலைசெய்யப்பட்டுத் தான் தூக்கிலிடப்பட்டிருக்கின்றாள் என்று ஊர்ஜிதப்படுத்தினாலும் கூட கொலைக்கான காரணம் தான் என்னவென்று தெரியாமல் மர்மமாக உள்ளது. லெட்சுமியைப் பொறுத்தவரையில் அவருக்கு எவருடனும் பகைமை இருந்ததாகவும் தெரியவரவில்லை. இதேவேளை மருத்துவ அறிக்கையின்படி லெட்சுமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்படவில்லை. அதற்கான தடயங்கள் எதுவும் இல்லை என வைத்தியர் கூறுகின்றார். அப்படியாயின், மூன்றரைப் பவுண் நகைக்காகவா லெட்சுமி கொலை கொலை செய்யப்பட்டாள் என்பது தான் அனைவரதும் கேள்வியாக உள்ளது.

லெட்சுமி கடந்த ஒரு வருடத்திற்கு முன் விஜயகுமார் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். திருமணம் முடித்து சிறிதுகாலத்தில் அவர் லெட்சுமியை விட்டுப பிரிந்து சென்று விட்டார் என்றும் அயலவர்கள் கூறுகின்றனர். ஆனால் இவரின் வீட்டில் இதுபற்றி எதுவும் கூறவில்லை.

**தந்திரதாரி யாரோ?**

இது இவ்வாறிருக்க லெட்சுமி கொலை செய்யப்பட்ட அடுத்த மாதம் 27ம் திகதி கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த வாழைச்சேனை பண்டிமடுவைச் சேர்ந்த நாகராசா விஜய லெட்சுமி என்ற பத்தொன்பது வயதுப் பெண் பட்டப் பகலில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டிருக்கிறாள். பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இடத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய வந்தாறுமூலையைச் சேர்ந்த தங்கராசாவைக்(23) கைது செய்து அப்பகுதி கிராமசேவகர் நாகநாதனிடம் கொடுத்து விசாரித்த போது நானும் கிண்ணயடியைச் சேர்ந்த குமாரும் சேர்ந்து தான் அதனைச் செய்தோம். அவர் சலம் கழித்து விட்டுவாறன் என்று சொல்லி விட்டுப் போனவர் திரும்ப வரவில்லை எனத் தெரிவித்தார்.

கிராமசேவகரின் விசாரணையில் தாங்கள் ஆறு பேர் இவ்வாறான வேலைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் அதில், இரண்டு பேர் ஏற்கெனவே இறந்து விட்டார்கள் என்றும் பூபாலபிள்ளை கிருபா என்பவரும், பெரியதம்பி மோகனதாஸ் என்பவரும் பறங்கியாமடுவில் இருக்கின்றார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார். கிருபா என்பவரின் தலைமையின் கீழ் தான் தாங்கள் செயற் படுவதாகவும் தங்களிடம் இரண்டு கைத்துப்பாக்கிகளும்,நான்கு கிறனைட்டுக்களும், ஒருவாளும் கத்தியும் இருக்கின்றன எனவும் கூறியிருக்கின்றார். கிராமசேவகர் இவரை விசாரணை செய்து கொண்டிருக்கும் போது இருவாலிபர்கள் வந்து இவரைக் கொடுங்கள் விசாரித்து விட்டு விடுகின்றோம் எனக் கூட்டிச் சென்றிருக்கின்றனர். அதன்பின் தங்கராசா தலையில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் பிணமாகத் தான் மீட்கப்பட்டார் எனக் கிராம சேவகரின் அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. தங்கராசா வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரல்ல. இவரது சொந்த இடம் பொத்துவில். வந்தாறுமூலையில் திருமணம் முடித்து ஒருபிள்ளையும் இருக்கின்றது. வந்தாறுமூலையில் தங்கராசா திருமணம் முடித்திருந்தது தூக்கிலிட்டு கொலை செய்யப்பட்ட தனலெட்சுமியின் ஒன்றுவிட்ட சகோதரியை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் தனலெட்சுமி, விஜயலெட்சுமி இருவரின் கொலை தொடர்பாக பொலீசார் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது தொடர்பாக தங்கராசா குறிப்பிட்ட எவரையும் பொலிஸார் கைது செய்ததாகவும். தெரியவில்லை. இக்கொலைகள் நடந்த இருகிராமமும் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள பகுதி என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் ஏன் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தங்கராசா பெயர் குறிப்பிட்ட இருவரும் ஏன் இன்னமும் விசாரிக்கப்படவில்லை.

அவ்வாறானால் இக்கொலைக்கும்பல்களுக்கும் பொலிஸாருக்கும் ஏதாவது உறவுகள் உள்ளனவா?

இவை கேள்விகள்.

பதில்கள் ? ? ?

# அரச சிறைக் கூடங்களில் தாக்குதல்களுக்குள்ளாகும் தமிழ்ப் பெண்கள்!

மீண்டும் ஒரு நாடகம் அரங்கேறியிருக்கின்றது. இப்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில்.

மிகச் சமீபத்தில் களுத்துறையில் இடம்பெற்ற சம்பவத்தைப் போன்று ஜனவரி 28ம் திகதி மூன்று மணியளவில் தமிழ்ப் பெண் சிறைக்கைதிகள் தாக்குதலுக்குள்ளாகினர். இச்சசம்பவத்தினால் 10 தமிழ்ப் பெண் கைதிகள் காயமடைந்தனர்.

கடந்த 24ம் திகதி மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தேவகி எனும் பெண் 25ம் திகதி அங்கிருந்து வெலிக்கடைக்கு மாற்றப்பட்டுள்ளார். காலையில் அவர் முகம் கழுவி உடைமாற்றிக் கொள்ளும் முகமாக தண்ணீர்க் குழாய்க்கருகில் சென்ற வேளை அரசியல் கைதிகளல்லாத பிற சிங்களப் பெண் கைதிகள் அவரை தண்ணீரைப் பாவிக்க விடாது தடுத்துள்ளனர். அதனை மறுத்து தேவகி தண்ணீர் எடுக்க முயன்றிருக்கிறார். இதன் காரணமாக தர்க்கம்ஒன்று ஏற்பட்டிருக்கிறது. தர்க்கம் குறித்து சிறைச்சாலை அதிகாரியொருவர், சிங்களத்தில் சரளமாக உரையாடக் கூடிய தேவகியை தனியே அழைத்து விசாரித்துள்ளார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிங்களப் பெண் கைதியொருவர் உனக்கென்ன அதிகாரியுடன் தனியே கதை என்ன கதைத்தாய் எனக் கூறு இல்லாவிட்டால் அடிப்பேன் என மிரட்டியுள்ளார். தேவிகி கூற மறுக்கவே இம்மிரட்டல் பின்னர் தாக்குதலாக மாறியுள்ளது. அதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, இச்சம்பவத்தை அவதானித்துக் கொண்டிருந்த ஏனைய தமிழ்ப் பெண் கைதிகளையும், தேவகியையும் சிறை அதிகாரிகள் விசாரிப்பதற்கென்று அலுவலகத்திற்குள் அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பெண்கள் உட்காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என கூறப்படுகின்றது. கைகள், கால்கள் என்பன வீக்கமுற்ற நிலையில் உள்ளன.

பெரியான் விமலா -கைதி இலக்கம் 448, ஈஸ்வரி - கைதி இலக்கம் 27, சம்பந்தர் ரஞ்சிதமலர் - கைதி இலக்கம் 1265, பரிதை இதயராணி- கைதி இலக்கம் 59, எஸ்.சாந்தினி - கைதி இலக்கம் 1586, எஸ். வசந்தினி- கைதி இலக்கம் 1846, யோகராணி- கைதி இலக்கம் 2872, ராமையா ஹேமகாந்தி - கைதி இலக்கம் 33, மாணிக்கவாசகம் கார்த்திகா- கைதி இலக்கம் 1991 ஆகியோரே தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்தவர்கள் ஆவர்.

தொடர்ச்சியாக தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சம்பவங்களுடன் இச்சம்பவத்தையும் தொடர்பு படுத்தியே நோக்க வேண்டியுள்ளதெனலாம். பரவலாக தமிழர்கள் கைது செய்யப்படுதலும் பின்னர் பல மாதங்கள், ஆண்டுகள் விசாரணைகளின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்படுதலும் இவற்றுக்கு எதிராக ஒரு கல்லைத் தானும் தூக்கிப் போட முடியாதவாறு சட்ட நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புகளும் மௌனித்திருப்பதும் புதிய விடயங்கள் அல்ல.

இந்தச் சம்பவத்துடன் இது போன்ற சம்பவங்கள் முற்றுப் பெற்று விடும் என்பதற்குமில்லை.

பல வருடக்கணக்கில் மாற்று உடையின்றியும் சுகாதார வசதிகளின்றியும், உறவினர்களின் போதிய கவனிப்பின்றியும் சூழலின் விரக்தி நிலையின் காரணமாகவும் சோர்வுற்று இருக்கும் இப்பெண்கள் மீதான தாக்குதலின் தாற்பரியம் தான் என்ன?

போதைப்பொருள் விற்பனை குற்றத்திற்கு, பாலியல் தொழில் புரிந்த குற்றத்திற்கு ஏனைய கிரிமினல் குற்றத்திற்கு என தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுடன் அரசியல் கைதிகள் சேர்த்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது பற்றி பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவிக்காமலுமில்லை. அத்துடன் அரசியல் கைதிகள் என்றவுடன் அவர்கள் அனைவரும் புலிகள் என்ற சந்தேகப் பார்வையும், கிண்டலும் சக சிங்களக் கைதிகளிடையே காணப்படுகின்றது. இச்சூழல் ஒரு சிறு சம்பவத்தைக் கூட தமிழ்க் கைதிகளுக்கெதிரான திட்டமிட்ட பாரிய வன்முறையாக மாற்றி விடக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டது.

பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண் சிறைக்கைதிகள் அனைவரும் தம்மை குற்றவியல் கைதிகளிலி ருந்து பிரித்து தனியான சிறைகளில் வைக்குமாறு கோரிக்கை விடுத்தி ருக்கிறார்கள் தம்மை தாக்கியவர் களை தாம் அடையாளம் காட்டத் தயங்கப் போவதில்லை என்றும் எனவே நீதியான விசாரணை ஒன்று வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட இப்பெண் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை தான். ஆனால் யார் காதில் இவை விழப் போகின்றன?


ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# பேரினவாத அரசும் அதற்கான முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவும் புலி எதிர்ப்பும்

எதிர்பார்க்கப்பட்டது போலவே இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சந்திரிகா அம்மையார் தெரிவுசெய்யப்பட்டு வெகு- நாட்களாகி விட்டது. சமாதான தேவதையாக, மாயை காட்டி மனித உடல்களை சவப்- பெட்டிகளில் ஏற்றி சமாதானத்துக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் அம்மையாரை மீண்டும் அரியணை ஏற்றுவதில் தமிழ், முஸ்லிம் மக்களை பிரநிதித்துவப்- படுத்தும் அரசியல் கட்சிகள் தமது அரசியல் பணிகளை மறந்து அதிக சிரத்தைக் காட்டின. அம்மையாரின் வெற்றிக்காக உழைத்த கட்சிகளில் முக்கியமானதும் முஸ்லிம்களின் வாக்குவங்கியினை தக்கவைத்துக் கொண்டி- ருப்பதுமான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் கைக்கொண்ட அணுகுமுறை அதாவது குறுகிய அரசியல் நோக்கில் புலிகள் இயக்கத்துடன் குரோதப் போக்கொன்றை கடைபிடித்தது தொடர்பாக தேர்தலின் பின்னரேனும் சற்று சீர்தூக்கிப் பார்ப்பது இனப்பிரச்சினையின் அகப்பாடு- களுக்குள் சிக்கிக்கொண்டு தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கும் வட, கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஒவ்வொரு- வரினதும் கடமையாகும்.



இந்த நாட்டில் நீண்ட காலமாக புரையோடிப்போய் இத்தீவின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்திகளை அரித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை காணுதல். சர்வாதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழித்தல் ஆகிய இரண்டு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து ஆட்சி பீடமேறி, அக்கோரிக்கையில் எதனையும் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றாமல் காற்றில் கலக்கவிட்டு மீண்டும் மக்களை ஏமாற்று- வதற்கான அங்கீகாரத்தை கோரி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சந்திரிகா முன்வந்தார் என்பது உலகறிந்த விடயம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் பங்காளியாய் அமர்ந்து



பேரினவாத ஒடுக்குமுறைக்கு துணைநின்று- வரும் முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமைத்துவமும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு சில தினங்களுக்குப் பின்னர் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி ஜனாதிபதி சந்திரிகாவை ஆதரிக்கும் முகமாக, ஜனாதிபதி பாராளு- மன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டும். தேர்தல் ஊழல் இன்றி நேர்மையாக நடைபெற வேண்டும் போன்ற கோரிக்கைகளை சந்திரிகா முன் வைப்பதாகக் கூறினார். இந் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு சில வாரங்களின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா இந்நாட்டில் உயிர்பெற்ற இனவாதமற்ற ஒப்பற்ற தலைவி என வர்ணித்து ஜனாதிபதிக்கு அதிக சிரமம் கொடுக்கக்கூடாது என்ற அக்கறையின் காரணமாக அந்நிபந்- தனைகளை வாபஸ் வாங்கிக் கொள்வதாகவும் மு. கா. தலைவர் தாருஸலாத்திலிருந்து விரலசைத்தால் 03 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் வாக்குப் பெட்டிகளை நிரப்பும் எனவும் சூளுரைத்து முஸ்லிம்களின் பெறுமதிமிக்க வாக்குகளை செல்லாக்காசுக்கு ஒப்பிட்டுக்காட்டி இந்நாட்டு முஸ்லிம்களை பாரிய அரசியல்அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார்.

இலங்கையின் இரண்டாவது சிறுபான்மை இனமாகிய முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகின்றது. பொதுத்தேர்தலைப் பொறுத்த வரை வடகிழக்கில் தனித்த முஸ்லிம் வாக்குகளின் மூலம் தமது பிரதிநிதிகளைப் பெறக்கூடிய நிலையும் ஏனைய பிரதேசங்களில் சிதறுண்டு வாழ்வதால் தனித்த தமது பிரநிதிகளை பெற முடியாத நிலையும் காணப்படுகின்றது. இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் தமது வாக்குகளின் பெறுமதியை உணரத்தக்கதாகவும் இலங்கை முஸ்லிம்கள் எல்லோருக்கும் பொதுவான ஏகோபித்த ஆதரவினை பெறத்தக்க அரசியல் கோரிக்கையினை முன்வைப்பதற்கான சாத்தியங்கள் காணப்- படுகின்றது என்றிருக்கின்றபோது இச்சந்தர்ப்- பத்தினைத் தக்க முறையில் பயன்படுத்தி முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் எண்ணற்ற பிரச்சினைகளுள் எதனையும் தீர்ப்பதற்கான நிபந்தனைகள் எதனையும் முன்வைக்காமல் தமது பிழைப்புவாத அரசியல் வழிமுறை- களை காப்பாற்றிக் கொள்வதற்காக எவ்விதத்திலும் அரசியல் முக்கியத்துவமற்ற உப்புச்சப்பற்ற நிபந்தனைகளை முன்வைத்து வாபஸ் வாங்கிக் கொண்டதானது முஸ்லிம் சமூகத்தை மடமைச் சமுதாயமாக வெளியுல- கிற்குக் காட்டும் அரசியல் பிற்போக்குத்தன மொன்றின் உச்சக்கட்ட செயற்பாடென்பதை முஸ்லிம்கள் அனைவரும் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

உண்மையாகவும், நேர்மையாகவும் தமது சமூகம் மீது அக்கறை இருந்திருந்தால் மு.காவும் அதன் தலைமைத்துவமும் வடக்- கிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதி முகாம்களில் பரிதாபத்துக்குரிய வாழ்வை மேற்கொள்ளும் முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் எதனையேனும் தீர்ப்பதற்கான கோரிக்கையினையாவது முன்வைத்திருக்க- லாம்.

தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள நாற்பதுகோடி பட்டாளத்தினதும் சுகபோக வாழ்வை மட்டும் கருத்திற்கொண்டு பேரினவாதிகளின் முன் சரணடைந்து எந்நிபந்தனையும் அற்ற ஆதரவினை வழங்கியதானது முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் வேதனைக்குரிய அத்தியாயமாகும்.

அடுத்து மு.கா. ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார மேடைகளில் தீவிர புலி எதிர்ப்பு பீரங்கியாக செயற்பட்டு சந்திரிகா அம்மையாருக்கு ஆதரவு திரட்ட முயன்ற- மையை வட கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் நன்கறிவர். இவ்வாறு புலி எதிர்ப்பாளர்களாகவும் பேரினவாத அரசாங்கத்தின் நண்பனாகவும் தமது அரசியல் ஆணையினை பெற்ற அரசியல் கட்சி செயற்பட்டது தொடர்பாக முஸ்லிம் சமூகம் ஆழமாக சிந்திக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் கடந்த காலமிருந்து இன்றுவரை முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்துவரும் புலிகள் இயக்க எதிர்ப்பு நடவடிக்கைகளை மீட்டிப்பார்ப்பது அவசியம்.

• இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இடம்பெற்ற வட கிழக்கு மாகாண சபைத்- தேர்தலில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாது- விட்டால் தாம் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்து விட்டு திடீரென தேர்தலில் போட்டியிட்டது மட்டுமல்லாமல் புலிகளுடன் போராடுவதற்காக அமைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்களை ஒன்றிணைத்தமை.

• பிரேமதாச தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம் முதல் இன்றைய பொ.ஐ.மு அரசாங்கம் வரை தமிழ் மக்களுக்கு (அதாவது புலிகள் உள்ளிட்ட) எதிராக மேற்கொண்டுவரும் யுத்தத்துக்கு ஆதர- வளித்து அவசரகால சட்டத்தை ஆதரித்து வருகின்றமை.

• புலிகள் மிருகங்கள் அவர்- களுடன் பேச முடி- யாது. புலிகள் அழிக் கப்பட வேண்டும். பயங்கரவாதம் துடைத்தெறியப்பட வேண்டும் என்பன போன்ற ஆவே- சமான பேச்சுக்கள்.

• ரிவிரச நடவடிக்கையின் போது படையினரை பாராட்டி தலை- நகரில் பதாதைகள் தொங்கவிட்டமை.

இதன தொடர்ச்சியாக நடந்து முடிந்த ஜனாபதித் தேர்- தலின் போது மு.காவின் தலை- மைத்துவம் முதல் அரசியல் உயர் பீட உறுப்பினர்கள் வரை ரணில் ஆட்சியை பிடித்- தால் முஸ்லிம்- களின் பாதுகாப்பு பிரபாகரனிடம் ஒப்படைக்கப்படும் எனப் பிரச்சாரம் செய்தது.

இனப்பிரச்- சினையின் கோர- வடுக்களே முஸ்- லிம்கள் மு.காவை தமது அரசியல் சக்தியாக அங்கீகரித்து இனப்பிரச்சினையின் ஒவ்வொரு அணுகுமுறையின் போதும் மு.கா நேர்மையாகவும், தீர்க்க தரிசனமாகவும் செயற்பட வேண்டும் என்பதற்காகவே மு.காவின் பக்கம் அணிதிரண்டார்கள் அல்லாமல் ஆட்சியில் பங்காளிகளாக அமர்ந்து சுகபோக வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்கின்ற நப்பாசையினால் அல்ல. இதனை நன்கு புரிந்துகொண்டும் மு.காவும் அதன் தலைமைத்துவமும் குறுகிய அரசியல் நலனுக்காக முஸ்லிம்களை பேரினவாதிகளிடம் அடகு வைத்து புலிகள் இயக்க எதிர்பாளர்- களாகச் செயற்படுவது முஸ்லிம் சமூகத்தை சவக்குழிக்குள் தள்ளுவதற்கு ஒப்பானதான வன்மையாக கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் புலிகள் தவிர்க்க முடியாத சக்தியினர் அவர்கள் பங்குபற்றாத எத்தகைய தீர்வும் நிரந்தர தீர்வாகப் போவதில்லை என்ற நிதர்சனமான உண்மையினை அறிந்து கொண்டும் மு.கா இரு சமூகங்களிடையேயும் விரிசலை ஏற்படுத்தும் விதத்தில் புலிகளுக்கு எதிராக முஸ்லிம்களை வழிநடத்த முனைவது பாரிய சமூகத் துரோகமாகும்.

(கடந்தகால கசப்பான அனுபவங்களுக்கு பின் மீண்டும் துளிர்விடத் தொடங்கியிருக்கும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கு வேட்டு வைப்பது போல மு.காவும் அதன் தலைமைத்துவமும் நடந்து கொள்வது மன்னிக்க முடியாத குற்றமுமாகும்.)

விடுதலைப் புலிகள் வடக்கு முஸ்லிம்களை விரட்டியத்த போது அஷ்ரஃப் இருக்கிறார், அவரிடம் போய்ச் சேருங்கள் என எச்சரித்தே அனுப்பினார்கள். மு.கா தலை- மைத்துவத்தின் தவறான அணுகு- முறை வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றத்தில் கணிசமான அளவு பங்களிப்புச் செய்திருக்கிறது.

ஆகவே, இதுபோன்று பொறுப்பற்ற விதத்தில் அரசியல் தவறுகளை விடுவது மீண்டும் புலிகள் முஸ்லிம்கள் மீது வன்முறைகளைப் பிரயோகிப்பதற்கு காரணமாக அமைந்து விடலாம். முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை தெளிவான பாதையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய மு.காங்கிஸ், பேரின- வாத அரசினை திருப்திப் படுத்து- வதற்காக தேர்தலில் சராசரி வாக்காளர்களை கவரும் தந்தி- ரோபாயமாக உணர்வுகளை தூண்டும் விசமத்தனமான புலி எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்- கொண்டது முட்டாள்தனமானது. இனிமேலும் மு.காவும் அதன் தலைமைத்துவமும் தூரநோக்- கில்லாமல் அரசியல் சாணக்கியம் அற்ற விதத்தில் பேரினவாதிகளுடன் இணைந்து கொண்டு புலிகளியக்க எதிர்பாளர்களாக செயற்படாது புலிகளுடன் இராஜதந்திர ரீதியான அரசியல் நகர்வுகளை ஏற்படுத்த முன்வர வேண்டும். அதுவே எதிர்காலத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை இனம் கண்டு நியாயமான தீர்வுகளை எய்துவதற்கான வழிமுறையாக அமையும்.

அல்லாமல் புலிகளின் எதிர்ப்பாளர்களாக இனம் காட்டுவதனூடாக பேரினவாத அரசுடன் இணைந்து தமிழ் மக்களுடைய உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதனால் எதனையும் சாதித்து விட முடியாது என்பதை மு.காவும் அதன் தலைமைத்துவமும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

- ஸிபான்ஷரா

நன்றி - நூலகத்திட்டம்



பேச்சுவார்த்தை:

# நிதானமும் அக்கறையும் வேண்டும் ஜனாதிபதிக்கு!

"தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு ஒன்றே தீர்வு. - புலிகள் இயக்கத்திற்கு ஜனாதிபதி அழைப்பு!"

தினகரன் பத்திரிகையில் கொட்டை எழுத்தில் பிரசுரமாகியிருந்த செய்தியின் தலைப்பு இது. கிட்டத்தட்ட இதே செய்தியை ஏனைய இரு தமிழ்ப் பத்திரிகைகளான தினக்குரலும், வீரகேசரியும் வெளியிட்டிருந்தன.

சிங்களப் பத்திரிகைகள் புலிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தது பற்றி முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கவில்லை. ஐலன்ட் பத்திரிகையிலும் இவ்விடயம் தலைப்புச் செய்தியாக வரவில்லை.

52வது சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்திற்கான சகல தயாரிப்புகளும் கோட்டே பாராளுமன்றத்தின் முன்பாக நடப்பதற்காக தடல்புடலாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதி மைதானத்திற்கு வரும் நேரம், கொடியேற்றும் நேரம் எல்லாம் கூட லேக்ஹவுஸ் பத்திரிகைகளால் விலாவாரியாக தெரிவிக்கப்பட்டிருந்தன.

கொழும்பில் 3ம் திகதி அன்றும், சுதந்திர தினத்தன்றும் பல வீதிகள் குறிப்பாக காலிவீதிப் பகுதிகள் பொதுமக்களின் 'சுதந்திர' நடமாட்டத்திற்கு இறுக்கமாக தடைவிதிக்கப்பட்டிருந்தது. நடந்து செல்பவர்களுக்கு கூட சில இடங்களில் கண்டிப்பாக அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

சுதந்திர தின விழா நடவடிக்கைகள் நடந்து கொண்டிருப்பதை ஒளிபரப்பிக் கொண்டிருந்த ரூபவாஹினி, ஐ.ரி.என் தொலைக்காட்சி சேவைகள் மிகவும் கனகச்சிதமான முறையில் மரியாதை அணிவகுப்பையும், அன்றைய விழாவில் சபாநாயகர் ரத்னாயக்கா கொடியேற்றியதையும் காட்டாமல் விட்டுவிட்டு, முப்படைத் தளபதிகள் பின்னால் நிற்க ஜனாதிபதி உரையாற்றியதைக் காட்டியதன் மூலம், ஜனாதிபதி விழாத் திடலில் நின்று பேசுவதான ஒரு பிரமையை ஏற்படுத்தின. தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பலர் ஜனாதிபதி அங்கிருந்து தான் பேசுவதாக எண்ணிக் கொண்டிருந்தனர்.

நாட்டின் மிகவும் முக்கியமான அரச விழா ஒன்றிற்கு அரசுத் தலைவர் போகாதிருக்கும் ஒரு சூழலை நாட்டு மக்கள் அறிந்து கொள்ளக் கூடாது என்பதில் தகவல் தொடர்புசாதனத்துறை அமைச்சு மிகவும் கவனமாக இருந்திருக்கிறது.

ஆயினும் இது பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்த ஒரு வெட்கக்கேடான விடயமாகப் போய்விட்டது.

இரகசியப் பொலிசாரின் 'நம்பகமான தகவல் ஒன்றின் அடிப்படையில் ஜனாதிபதி மீது இன்னும் ஒரு தாக்குதல் நடக்கலாம் என்று தெரிந்ததால் அவர் விழாவுக்கு செல்லக் கூடாது என்று அவர்கள் அறிவித்தார்களாம். இதுதான் ஜனாதிபதி அன்றைய வைபவத்தில் கலந்து கொள்ளாமைக்கான உண்மையான காரணம். ஜனாதிபதி ஒருவர் உத்தியோகபூர்வமாக ஒழுங்கு செய்யப்பட்ட சுதந்திர விழாக் கொண்டாட்டத்திற்கு போகாமல் விட்டது இது தான் முதல் தடவை என்று பேசப்படுகிறது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி சுகயீனமடைந்திருக்கிறார் என்ற செய்தியையே அரச (அரச சார்பு) சாதனங்கள் அறிவித்திருந்தன.

விழாவில் கலந்து கொள்ளாமல் தொழில்நுட்ப உதவியுடன் வெற்றிகரமாக விழா நடந்து முடிந்தது.

ஆயினும், அந்த விழாவிற்கு நாயகியான தான் அங்கு கலந்து கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் ஜனாதிபதி அவர்களுக்கு அது பற்றிச் சிந்திக்க வைத்திருக்கிறது. அதனால் தான் போலும் அவர் நாம் மேலே குறிப்பிட்ட கொட்டை எழுத்துச் செய்தி தினகரனில் வெளிவருவதற்குக் காரணமான பேச்சை நிகழ்த்தினார்!

புலிகளையும், அனைத்துக் கட்சிகளையும் நோக்கி அவர் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஏதோ மற்றைய கட்சிகள் மறுத்தது போன்ற தொனி அதில் இருந்தாலும், ஜனாதிபதி முதன்முதலாக பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருப்பது ஒரு முக்கியமான விடயம் தான்.


சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டையாக புலிகளும், ஐ.தே.கவும் இருந்து வந்துள்ள போதிலும், (இக்கட்சிகளை அவர் பெயரிட்டுக் குறிப்பிடவில்லை) அவர்களிடமும் தனது இந்த 'அமைப்புச் சீர்த்திருத்த புரட்சிக்கு' உதவுமாறு நேசக்கரம் நீட்டுவதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி அவர்களின் அறைகூவல் புலிகள் தொடர்பாகவும், ஐ.தே.க தொடர்பாகவும் அவர் கூறிய கருத்துக்கள் திரும்பவும் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவையாக அமைந்த போதிலும், அவர் விடுத்த அறைகூவல் முக்கியமானதாகும்.

தன்னுடைய சமாதான முயற்சிக்கு ஒரு பிரதான சிங்கள எதிர்க்கட்சி குந்தகமான முறையில் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். உண்மையில் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் தீர்வு முயற்சிக்கு தான் ஒத்துழைப்பு தரத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்திருந்ததுடன் கடிதம் ஒன்றை எழுதி இதை உணர்த்தியும் இருந்தார். ஆயினும், சுதந்திர விழாப் பேச்சில் ஜனாதிபதி ஐ.தே.க.பற்றி பேசும் வரை ஐ.தே.கவுடனோ, வேறு யாருடனுமான இந்த விடயம் பற்றி எதுவும் சொன்னதில்லை. ரணிலின் கடிதத்திற்கு ஜனாதிபதியோ, அவரது செயலகமோ இதுவரை பதிலளிக்கவுமில்லை.

அப்படியிருந்தும் தனது முயற்சிக்கு ஐ.தே.க தடையாக இருப்பதாக அவர் அறிவிக்கிறார். சட்டவரைபு வடிவில் தீர்வுக்கான வரைவு பாராளுமன்றத்துக்கு வரும் பட்சத்தில் தாம் ஆதரவளிக்கத் தயார் என்று ரணில் அறிவித்திருந்தும், அந்தக்கூற்றை அவர் அவ்வளவு அக்கறையுடன் அணுகியதாகத் தெரியவில்லை. பதிலாக ஐ.தே.க. மீது திரும்பவும் குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்.





கொடுக்க அவர் தயங்கவில்லை.

ஆயினும், ஜனாதிபதியின் பேச்சுக்களையும், அவரது செயற்பாடுகளையும் கடந்த நான்காண்டு காலமாக அவதானிக்கும் ஒருவர் அவரின் இத்தகைய ஒரு பேச்சைக் கேட்டு அதிசயிக்க மாட்டார். தான் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்வதற்கு ஏற்ற விதத்தில் தனது நடவடிக்கைகளையும் வாயையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் ஒரு போதும் நினைத்ததில்லை. புலிகளுடன் பேசிய காலத்திலேயே அவர்களைப் பற்றி தொடர்ந்து விமர்சித்து வந்தவர். ஐ.தே.கவின் ஆதரவைக் கோரிய வண்ணமே ரணில் விக்கிரமசிங்கவை அவமானப்படுத்தும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வந்தவர். தனது இந்த நடவடிக்கைகளால் பேச்சுவார்த்தைக்குரிய சாத்தியப்பாடுகள் பெருமளவுக்கு பலவீனமடைந்தன என்பதையும் நம்ப மறுத்து வருபவர்.

இப்போது அவர் விடுத்துள்ள அழைப்பிலும் கூட அவ்வாறான

நோர்வே உதவியுடன் நடந்துவரும் (?) புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகள் குறித்த முதல் கட்ட கலந்துரையாடல்கள் ஏற்கெனவே ஆரம்பமாகி இருந்தபோதும், அவரது வழமையான பாணியில் புலிகளுக்கும், ஐ.தே.கவுக்கும் ஒரு சிறிய தாக்குதலை போகிற போக்கில் போக்கைக் காணக்கூடியதாக இருக்கிறது. இருந்தாலும், யுத்தம் தான் ஒரே வழி என்று சொன்ன ஜனாதிபதி, இன்று பழையபடி யுத்தத்தால் ஏற்படும் இழப்புகளையும், மக்களின் துயரங்களையும் இல்லாது செய்ய வேண்டும், அதற்கு பேச்சுவார்த்தையே ஒரே வழியென்று பேசுகின்றார் என்பது முக்கியமானது.

இராணுவத்திற்கு ஆள்பற்றாக்குறை, நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது. உடனடியாக 15,000 பேரை சேர்க்காமல் இனிமேல் யுத்தத்தை தொடர்ந்து விஸ்தரிக்க முடியாத நிலை நிலவுகிறது. இந்தக் காரணங்களால் உடனடியாக ஒரு ஓய்வு நிலை அரசாங்கத்திற்கு தேவை. அதற்கு இந்தப் பேச்சுவார்த்தையை சாதகமாக பயன்படுத்தலாம் என்ற எண்ணமும் கூட அரச தரப்பில் இருக்கக்கூடும். இராணுவ தளபதிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தாலும் ஆட்சேர்ப்பு, இராணுவ தளபாடங்கள், உயர் தொழிநுட்ப ஆயுதங்களை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை நிறுத்தாமல் தொடர வேண்டும் என்ற கருத்து வலுவாக இருக்கிறது. புலிகளை இராணுவ ரீதியில் அழிக்காமல் சமாதானம் சாத்தியமில்லை என்று இராணுவத் தளபதியே கருத்துக் கூறுகிற நிலைமை நிலவுகிறது.

ஒரு சிறைக் கைதிபோல ஜனாதிபதியே இருக்க வேண்டிய நிலைமையை உருவாக்கியுள்ள யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை நிறுவ அவர் முயல வேண்டும்.

அப்படி முயல்வதற்கு முன் சில அடிப்படைகளை ஜனாதிபதி கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவது, அரசியல் பேச்சுவார்த்தை என்பது புலிகளுடன் சமாதானத்திற்கு போவதையோ அல்லது தற்காலிகமாக அவர்களை ஏமாற்றுவதையோ நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது. உண்மையில் அது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியின் ஒரு கட்டம் என்ற அடிப்படையில் நோக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லாமல் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையை பெற முடியாது என்பதால் எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெற முடிந்தளவு நிதானமான, நியாயமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

மூன்றாவதாக, 2/3 பெரும்பான்மையைப் பெற்று நடைமுறைப்படுத்தவுள்ள அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை இன்னுமின்னும் இழுத்தடித்து இனவாதிகளுக்கு சாதகமாக வெட்டிக் குறைப்பது என்ற பொறிக்குள் விழுந்து விடாமல் இருக்க வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான, மனச்சுத்தமான ஆர்வம் இருக்க வேண்டும். வெறுமனே தங்களது ஆட்சிக்காலத்தை ஓட்டிவிடுவதற்கான காலத்தைக் கடத்தும் தந்திரமாக இதைச் செய்ய நினைத்தால் நாட்டை ஒரு காலமும் அழிவுப் பாதையிலிருந்து மீட்க முடியாது.

சமாதானத்தையும், பேச்சுவார்த்தையையும் சாத்தியமாக்குகிற வழிகளில் இறங்காமல் அவை தோல்வியடைவதற்கான சாக்குகளை கண்டு பிடிக்கிற பழைய அணுகுமுறையை இம்முறையும் சந்திரிகா அரசாங்கம் செய்யாதிருக்குமாக.

யுத்தம் நின்று, ஒரு இடைக்கால, மூச்சுவிடுகிற அவகாசமாவது மக்களுக்கு கிடைக்க வேண்டும்.

இதற்கு அனைத்து சம்பந்தப்பட்ட சக்திகளும், அக்கறையுடன் பங்களிக்க வேண்டும்.

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டும் யாழ். மாணவர் போராட்டம்!

உலகின் பல்வேறு நாடுகளிலும் போராட்டங்கள், புரட்சிகள் இடம்பெற்ற போது பல்கலைகழக மாணவர்களே போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றனர். இதனால் போராட்டங்கள், புரட்சிகள் நடைபெற்ற நாடுகளில் எல்லாம் மாணவர்கள் அந்த அந்த நாட்டு அரசாங்கங்களாலேயே கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சீனாவின், தியனமென் சதுக்கப்படுகொலை, இந்தோனேஷியாவில் இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டம், தென்கொரிய மாணவர் போராட்டம் என்பவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பாடசாலை மாணவர்களும், இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் 1971ம் ஆண்டு இடம் பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர்களே. ஆனால், 1987 - 1988 காலகட்ட ஜே.வி.பி. ஒழிப்பு நடவடிக்கையின்போதும் சரி, வடக்கு கிழக்கில் இடம்பெற்ற போராட்டங்களிலும் பெருமளவு பாதிக்குள்ளானவர்கள் பாடசாலை மாணவர்களே.

1987-1988 காலகட்டப்பகுதியில் தெற்கில் பெருமளவு மாணவர்கள் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களனைவரும் சாதாரண உடையில் இலக்கத்தகடற்ற வாகனங்களில் வந்தவர்களாலேயே கைது செய்யப்பட்டனர். இவர்களனைவரும் பாடசாலை முடிந்து வரும் போதும், ரியூசன் முடிந்து வரும் போதுமே கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பள்ளேகல, பிதுறுவெல, பூஸா போன்ற இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். பலர் காணாமல் போனார்கள். இக்காலப் பகுதியில் பேராதனை கலகா சந்தியில் பூவைப்பது போல் மனிதத் தலைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் தடிகளிலும் தலைகள் குத்தி நாட்டப்பட்டிருந்தன. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பாடசாலை மாணவர்களே.




இந்தக் காலகட்டத்தில் கறுப்புப் பூனைகள் (ப்ரா - P. R. R. A.) என்ற பெயர்களில் உத்தியோகபூர்வமற்ற இராணுவ அமைப்புகள் தென்னிலங்கையில் இயங்கி வந்தன. இந்த அமைப்புகளே கொலைகளை நடாத்தியும் வந்தன. இவர்களால் கைது செய்யப்பட்ட, கொல்லப்பட்ட மாணவர்களைனவரும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டதுடன் சமூகத்திலிருந்து ஒதுக்கியும் வைக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்படுவதற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படுவதற்குமிடையில் வேறுபாடு காணப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படும் போது அவர்கள் மேஜரான பின்னரே கைது செய்யப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்படும் போது அவர்கள் மேஜராக முன்னரே கைது செய்யப் படுகிறன்றனர். இவ்வாறு கைது செய்வதனால் ஏற்படும் தாக்கங்கள் மாணவர்களின் மனநிலையை பாதிப்படையச் செய்யும். அத்துடன் மாணவர்களின் கல்வியையும் ஸ்தம்பிதமடையச் செய்யும்.

மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் போது அவர்கள் அரசியல் ரீதியாகச் சிந்திப்பதற்குத் தூண்டப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் பாடசாலை செல்லும் மாணவர்கள் சிலர் பாடசாலை செல்லும் போது இராணுவத்தினரிடம் தமது அடையாள அட்டையை ஒப்படைத்துச் சென்று மீண்டும் பாடசாலை முடிந்து வரும் போது இராணு வத்தினர் வழங்கிய பாஸைக்கொடுத்து விட்டு அடையாள அட்டை யைப் பெற்று வரவேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் மாணவர்களின் முழுக் கவனமும் பாஸ் மீதே காணப்படுவதால் கல்வியில் புலனைச் செலுத்த முடியாதநிலை காணப் படுகிறது.

ஈழப் போராட்டம் ஆரம்பமான பின்னர் வடக்கு கிழக்கில் மாணவர்கள் உடல், உள ரீதியாகப் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அடிக்கடி இடம்பெறும் மாணவர் கைதுகளும், இதற்கு ஒரு காரணம். கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் மட்டும் பத்து மாணவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.இவர்கள் பின்னர் மாணவர் போராட்டம் காரணமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரமும் (25.01.2000) உரும்பராயைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா பிரியா (12) என்ற மாணவியும், இவரது சகோதரரான ஸ்ரீஸ்கந்தராசா வினோத் என்ற (8) சிறுவனும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிசாரால் கொழும்பு குற்றப்புலனாய்வு அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். இவர்களிருவரும் ஒரு வார காலம் குற்றப்புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்தனர்.


இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 75இன்படி எட்டு வயதிற்குக் கீழ்பட்ட பிள்ளைகள் என்ன குற்றம் செய்தாலும் அவர்களைத் தண்டிக்க முடியாது. தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 76 எட்டுத்தொடக்கம் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளாயின் அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல் தண்டிக்க முடியாது எனக் கூறுகிறது. மாணவர்கள் பாடசாலையில் வைத்துக்கைது செய்யப்படும் போது அதிபர் ஆசிரியருக்குத் தெரியப்படுத்தாமல் கைது செய்ய முடியாது. வீட்டில் வைத்துக் கைது செய்யப்படுவதாயின் பெற்றோருக்குத் தெரியப்படுத்திய பின்பே (பெற்றோர் முன்னிலையிலேயே) கைது செய்யப்பட வேண்டும். அத்துடன் பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்படும் போது குறிப்பிட்ட நியாயாதிக்கப்பகுதி நீதிபதியின் அனுமதியின்றிக் கைது செய்ய முடியாது. இவை எழுத்திலுள்ள சட்டங்கள். நடைமுறையில் இந்தச் சட்டங்களெதுவுமே பின்பற்றப்படுவதில்லை.

மாணவர்கள் கைதுகள் சாதாரண சட்ட ஜனநாயகமுறைப்படி அணுகப்பட வேண்டும். இவ்வகையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சர்வதேச ஜுரர் சபை ஏற்கெனவே கண்டித்துள்ளது. இது அடிப்படை மனித உரிமைகளைப் புறக்கணிக்கும் ஒரு சட்டம் எனக்கோரி வேர்ஜீனியா என்பவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10.02.99, 13.02.99 ஆகிய தினங்களில் ஏழாலை மகா வித்தியாலய மாணவர்கள் ஆறுபேர் தாம் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இவர்களின் ஒருவரின் கால் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புலிகளுடன் இடம்பெற்ற மோதலையடுத்தே இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1987-98 காலப்பகுதி பாடசாலை மாணவர்களைப் பொறுத்த மட்டில் மிகவும் இருண்ட காலப்பகுதியென்றே கூறவேண்டும். இக்காலப்பகுதியில் ஜே.வி.பி. ஒழிப்பு என்ற பெயரில் தெற்கில் மாணவர்கள் கொல்லப்பட்டதுபோலவே வட கிழக்கிலும் இந்திய இராணுவ, ஈபி.ஆர்.எல்.எப். புலி ஒழிப்பு நடவடிக்கையின் போது அறுபது வரையலான பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் மாணவர்களைக் கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்குவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயடிாது. மாணவர்களைக் கைது செய்வதென்பது மாணவர்கள் மீது வன்மம் தீர்ப்பதாகவே அமையும்.



(பெற்றோர் முன்னிலையிலேயே)

### கடந்த ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மாணவர்கள்

| பெயர் | வயது | முகவரி |
|---|---|---|
| இராஜலிங்கம், இளங்கோவன் | 19 | சுன்னாகம் |
| திருநாவுக்கரசு, குமாரதாசன் | 19 | கொக்குவில் |
| சங்கரப்பிள்ளை சுமித்தரன் | 16 | மட்டுவில் |
| அமிர்தலிங்கம், சுதர்சன் | 24 | பாண்டியன் குளம் |
| சரவணமுத்து, நந்தசீலன் | 24 | மல்லாவி |
| த.சீவரூபன் | 19 | நீர்வேலி |
| கிருஷணபிள்ளை மதிமோகன் | 17 | கரணவாய் |
| செல்வநாயகம், செல்வேந்திரன் | - | பிறவுன் வீதி |
| றமணன் | 16 | மட்டுவில் |

தாக்குதலுக்குள்ளான ஏழாலை மகாவித்தியாலய மாணவர்கள்.

1. சந்திரபோஸ் ரமேஷ்
2. கிருஷ்ணசாமி கிருஷ்ணகாந்தன்
3. கனகலிங்கம் சஜித்
4. சுப்பிரமணியம் சுரேஷ்
5. அகிலேஸ்வரன் மோகன்ராஜ்
6. கந்தசாமி கௌசிகன்

### இந்திய இராணுவ காலத்தில் கொல்லப்பட்ட மாணவர்கள் இவர்களனைவரும் மாணவ தலைவர்கள்

| பெயர் | பாடசாலை | வயது | கொல்லப்பட்ட திகதி |
|---|---|---|---|
| பரமேஸ்வரன் முரளீதரன் | கொக்குவில் இந்து | 16 | 5.06.89. |
| யவன ராஜ் | வல்வெட்டித்துறை | 16 | -08.89. |
| பா.மகேந்திரதாஸ் | சிதம்பரக் கல்லூரி | 16 | -08.89. |
| ஆ. பரம்சோதி | சிதம்பரக் கல்லூரி | 17 | -08.89. |
| ஆ. பராஜ் | சிதம்பரக் கல்லூரி | 18 | -08.89. |
| அ. மதிவாணன் | சிதம்பரக் கல்லூரி | 17 | -08.89. |
| எம். கோபாலகிருஷ்ணன் | சிதம்பரக் கல்லூரி | 19 | 13.05.89. |
| ஆர்.கணேசகுமார் | சம்பத்தியார் | - | 24.06.89. |
| விஜயரத்தினம் தேவகுமார் | - | - | 30.12.89. |
| திருச்செல்வம் அகிலன் | பரி.யோவான் கல்லூரி | - | 03.05.89. |

இவர்களில் சிதம்பரக் கல்லூரி மாணவர்கள் பிரபாகரன் படித்த பாடசாலை என்பதற்காக இந்திய இராணுவத்தளபதி பிரியேடியர் சங்கர் பிரசாத் என்பவனால் கொல்லப்பட்டவர்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ். மாணவ போராட்டத்தின் வெற்றி

யாழ் குடாநாட்டின் மாணவர்களும் பொது மக்களும் இணைந்து இராணுவ அடக்குமுறை நிர்வாகத்தினதும், அவற்றின் பாதுகாவலர்களான தமிழ் அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள் உள்ளிட்ட அனைவரினதும், முகங்களிலும் ஓங்கி அறைந்துள்ளனர். ஒரு வாரமாக இடம்பெற்ற மாணவர்களின் சளைக்காத பேராட்டம் மேலும் வளர்ச்சியுறுவதை அவதானித்த அரசு இறுதியில் அடிபணிந்து போயுள்ளது.

25.01.2000 அன்று உரும்பிராய் சென்ற விசேட பொலிஸ் குழு சிறிஸ்கந்தராஜா வளர்மதி(42) அவருடைய பிள்ளைகளான சிறிஸ்கந்தராஜா பிரியா (16) சிறிஸ்கந்தராஜா வினோத்(12) ஆகியோரை கைது செய்துள்ளனர். முதலில் வீட்டில் வைத்து தாயாரைக் கைதுசெய்த பொலிசார் பின்னர் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்குச் சென்று அவருடைய இரு பிள்ளைகளையும் கைது செய்துள்ளனர்.

தாயாரோ பிள்ளைகளோ கைது செய்யப்படும்போது அவர்களுடைய கைதுக்கான காரணம் யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. காரணமின்றி கைது செய்தல் இலங்கையித் தமிழ் மக்களுக்கு பழக்கப்பட்டுவிட்ட ஒன்று என்ற போதும் பிள்ளைகள் கைது செய்யப்படும் போது வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் அவர்கள் கைது செய்யப்படுவதற்கு எவ்வித காரணங்களும் இல்லையென வாதாடியுள்ளார். பொலிசார் அவற்றையெல்லாம் கவனியாது இருவரையும் கைது செய்துள்ளனர். பின்னர் இவர்கள் 26.01.00 அன்று கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்.

வழக்கம் போலவே மறுநாள் தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிடும். தமிழ்க் கட்சிகள் அறிக்கை வெளியிடும். அவற்றோடு இந்தக் கதை முடிவடைந்து விடும் எனப் பொலிசார் எதிர்பார்த்திருக்கலாம். மாறாக, அவர்களின் எண்ணங்களைப் பொய்யாக்கிய வண்ணம் மாணவர் போராட்ட களத்தில் இறங்கியுள்ளனர்.

கைது பற்றி யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள் போன்றவர்களிடம் அறிவித்த மாணவர்களும், பெற்றோரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வசாவிளான், உடுவில், சுன்னாகம், மருதனாமடப்பகுதிகளில் பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஆனால், சம்பந்தப்பட்ட தரப்புகள் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்தது. இவற்றைத் தொடர்ந்து மாணவர் போராட்டம் விரிவுபெற ஆரம்பித்தது. "யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் ஒன்றியம் குடாநாட்டு பாடசாலைகள் அனைத்தையும் பகிஷ்கரிப்புக்கு அழைத்தது. இதனைத் தொடர்ந்து 31.01.00 அன்ற அன்ற திங்கட்கிழமை அனைத்து பாடசாலைகளும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்க பொலிஸ் தரப்பு இவர்களின் கைதுக்கான காரணங்களென சில காரணங்களை அறிவித்தது. ஜா எலவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட போராளி வளர்மதியின் மகனெனவும் அவரை அடையாளம் காட்டவே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் அதை உறுதி செய்வதற்காக ஓ.என்.ஏ. பரிசோதனை மேற்கொள்வதாகவும் அறிவித்தனர். தற்கொலைப் போராளியின் தலையை வளர்மதி அடையாளம் காட்டியுள்ளார் எனவும் அறிவித்துள்ளார்.

இவற்றிலெல்லாம் அடிபட்டுப் போகாத மாணவர்கள் தம் போராட்டத்தைத் தொடர்வதிலும், விரிவுபடுத்துவதிலும் உறுதியாகத்தானிருந்தனர். செவ்வாயன்று எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றிற்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டனர். தமிழர் ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியன இப்போராட்டத்திற்கு ஆதரவளித்ததுடன் தொடர்ந்து தாமும் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்தனர். ஒருபுறம் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட மறுபுறம் போராட்டத்தை நசுக்குவதற்கான ஏற்பாடுகளும் துரித கதியில் நடைபெற்றது. மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, சிவில் நிர்வாகத்தின் கீழ் பகிஷ்கரிப்பில் ஈடுபட முடியாதென்று மறுக்க உடுவில் மகளிர் கல்லூரியும் பகிஸ்கரிப்பை மறுத்தது. பகிஷ்கரிப்பை ஆதரித்து சுவரொட்டி ஒட்டிய மாணவர்களும் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தை அவதானித்த அரசு வாரிச் சுருட்டிக் கொண்டு எழும்பி கைது செய்யப்பட்டவர்களை 02.02.00 அன்று விடுதலை செய்துள்ளது.

விடுதலையின் பின் வழக்கம் போல தமிழ்க்கட்சிகள் சுயதம்பட்டம் அடிக்கத் தவறவில்லை. மாணவர்கள் போராட்டங்களின்போது தமிழ்க்கட்சிகள் எவ்வாறு நடந்து கொண்டன என்பது பற்றியும், பார்க்க வேண்டும். போராட்டத்தை ஆதரித்து அறிக்கை கூட அவர்களால் விட முடியவில்லை.

மாணவர்களின் இப்போராட்டம் இரு அப்பாவி மாணவர்களின் எதிர்காலத்தை காப்பாற்றியிருப்பதுடன் அடக்கு முறைக்கு எதிரான அவர்களின் எதிர்ப்பின் குறியீடாகவும் அமைகிறது. போராட்டம் சற்று தாமதித்திருப்பினும் சுலபமாக அம்மாணவர்கள் புலியாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பர்.

மக்களைப் போராட்டத்துக்கென அறிக்கை மூலம் அழைப்புவிடுக்கும் தமிழ்த் தலைமைகள் இப்போது என்ன சொல்கின்றன?

# பழிவாங்கப்படும் சிங்கள கலைஞர்கள்

கலைஞர்கள் தாக்கப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல. இருப்பினும் அண்மைக் காலமாக இத்தாக்குதல் அதிகரித்துள்ளமை தான் எல்லோர் மத்தியிலும் கேள்விகளை எழுப்பியுள்ளது. அரசு இந்த விடயத்தில் தொடர்ந்தும் பல வழிகளாலும் தன்னை நியாயப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. கலைஞர்கள் அரசியலில் சம்பந்தப்பட்டால் இத்தாக்குதல்கள் சாதாரணமான விடயமே என ஒலிபரப்பு சேவையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

அரசியலில் சம்பந்தப்படாமல் தமது கடமைகளையும் கலைச் சேவையையும் செய்ய வேண்டியது கலைஞர்களின் கடமையெனவும் வலியுறுத்திக்கூறியது அவ்வொலிபரப்புச் சேவை. தனிப்பட்ட குரோதங்கள் காரணமாகவும் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனவும் அரசின் அச்சு ஊடகங்கள் கூறிவருகின்றன.

கடந்த ஜனவரி 2ம் திகதி மொனராகலையிலுள்ள அனோஜா வீரசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. இதில் சுமார் 3மில்லியன் பெறுமதியான பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். சினிமாவில் அவருக்கு வழங்கப்பட்ட விருதுகளும் இதில் அடங்கும்.

பிரபல சிங்களப் பாடகரான ருகாந்தவும் அவரது மனைவியான சந்திரலேகாவும் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களது தலைமயிரும் வெட்டப்பட்டுள்ளது.



மனித உரிமை மீறல்கள் மலிந்து போனபின் இவ்விடயம் அரசுக்கு ஒரு பொருட்டாக தெரியாமல் போனது ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல.

அனோஜா வீரசிங்கவும் ருகாந்தவும் ஐ.தே.கவை ஆதரித்ததற்காகவே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. அரசியல் ரீதியில் ஏதோ ஒருவகையில் பக்கபலமுள்ள பிரபலமான கலைஞர்களுக்கே இக்கதியென்றால் சாதாரண மக்களின் நிலைபற்றி சொல்லத்தான் வேண்டுமா? 1994ம் ஆண்டு ஐ.தே.க ஆட்சிகாலத்தில் வசந்த ஒபேசேக்கர, பிரதீபா தர்மதாஸ, ரோகண வீரசிங்க, ஜயசிறி சந்திஜித், ஜயசிறி, சனில் ஆரியரத்ன, நந்தாமாலினி, சுகதபால டி சில்வா, கார்லோ, பொன்சேகா, புத்ததாச கலப்பத்தி, டக்டஸ் சிறிவர்த்தன ஆகிய சிறந்த கலைஞர்கள் தாக்கப்பட்டது தெரிந்ததே. தற்போது பொ.ஐ.முவில் இது தொடர்கிறது. ஐ.தே.கவின் காட்டாட்சியிலிருந்து மக்களுக்கு பொ.ஐ.மு வாங்கித்தந்த விடுதலை இது தான் போலும்.



ருகாந்த குணதிலக்க சந்திரலேகா

இச்சம்பவம் தொடர்பாக பல்வேறு கலைஞர்கள் வெளியிட்ட கருத்துக்கள் இவை.

கலைஞர்கள் பொதுச் சொத்து.

சாதாரண மனிதர்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளும் அவர்களுக்கும் இருப்பதை மறுக்க முடியாது. இந்தப் பிரச்சினையை அரசியல் ரீதியில் பார்ப்பதை நான் கைவிட்டு விட்டேன்.

ஆரம்ப காலந்தொட்டே அதைப்பற்றி நான் கதைத்து வந்துள்ளேன். இவை எல்லாவற்றிற்கும் அப்பால் இதனால் பயன்பெறுபவர்கள் மிக சொற்பமே. கட்சி அரசியல் பற்றி கதைப்பதையே விட்டு, சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றேன். 1984ல் இளைஞர் சேவை நாடக விழாவில் நான் விருது பெறும் வைபவத்தின் போது எனது சகோதரனை ரணில் விக்ரமசிங்க தாக்கினார். நானும் தாக்கப்பட்டதால் இத்தகைய அனுபவங்கள் எனக்கு நிறையவே இருக்கின்றது. இக்கஷ்டங்கள் நன்றாகப் புரியும். மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நபரொவரும் தாக்கப்படுவதற்கு உரிமையில்லை.

**தீபானி சில்வா**
*(பிரபல நடிகை)*

கலைஞர்கள் என்போர் முட்டாள்கள் அல்ல.

இச்சம்பவம் மிகவும் கவலைக்குரியது. இது தொடருமாயின் கலைத்துறையே இல்லாமல் போய்விடுமோ என்பது தெரியவில்லை.

1977 மார்ச் மாதத்தில் விஜய குமாரதுங்க கடானபில் தோல்வியுற்ற போது எங்களுடைய வீட்டைத் தீ வைத்தார்கள். மனைவியைத் தாக்கினார்கள். இத்தாக்குதல்கள் என்னை பாதித்துள்ளது இவ்வாறே. எந்தவொரு அரசாங்கத்திலும் எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. நான் கேட்கப் போவதுமில்லை. பிச்சை எடுப்பதுமில்லை. மரவள்ளிக் கிழங்கைச் சாப்பிட்டாவது நாங்கள் வாழ்வோம். எனது பிள்ளைகள் எவரும் அரசாங்கத் தொழில் செய்யவில்லை. நாங்கள் யாரிடமும் வீடுவாசல் கேட்கவில்லை. கலைஞர்கள் முட்டாள்கள் அல்ல. கலைஞர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள் சிறியளவினரே இருக்கின்றார்கள். இரண்டு பிரதான கட்சிகளும் அவர்களிடமிருந்து பலாபலன்களைப் பெற்று அவர்களை கொல்வதும் சித்திரவதை செய்வதும் கவலைக்குரிய விடயமே. இது எங்குபோய் முடியுமோ தெரியவில்லை.

**அமரசிறி கலங்சூரிய**
*(பிரபல சிங்கள நடகர்)*

இது சிங்கள பௌத்த நாடு.

நபரொருவர் இன்னொருவரை துன்புறுத்துவதற்கு நான் முற்றிலும் எதிப்பு தெரிவிக்கின்றேன். இது சிங்கள பௌத்த நாடு. உயிர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமென்றே பௌத்த மதம் கூறுகின்றது. மிருகத்திற்குக்கூட தீங்குவிளைவிக்க கூடாதென தெரிவிக்கையில் ஏன்தான் மனிதர்களை துன்புறுத்துகிறார்களோ தெரியவில்லை.

**தமயந்தி ஜயசூரிய.**
*(சிங்கள திரையுலகின் பிரபல பாடகி)*

சரத்சந்திரவையே தாக்கிய நாடு இது.

முதல் முறையாக நடந்த ஆச்சரியப்படத்தக்க விடயமல்லவே இது. சரத்சந்திர போன்ற கலைஞர்களையே அரசியல் காரணங்களுக்காக தாக்கிய நாடு தானே இது. இச்சம்பவம் அரசியல் பழிவாங்கல் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. இருப்பினும் அரசு இப்பிரச்சினையை எவ்வாறு கையாளப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை. இதை அணுகும்போது அரசுக்கு ஏற்படும் அபகீர்த்தியை அது கேட்டுப் பெற்றதைப் போன்றே வந்து விடும் என்பதும் பிரச்சினைக்குரியதே. தொடர்ந்தும் இவ்வாறு கலைஞர்கள் தாக்கப்படுவார்களேயானால் அதற்கு எதிராக குரல் கொடுக்காமலிருக்க முடியாது.

**ரவிபண்டா வித்யாபதி**
*(பிரபல நடன ஆசிரியர்)*

நன்றி - நூலகத்திட்டம்



**ஐரோப்பாவில்**

# தீவிரம் அடைந்து வரும் பாஸிஸ வலதுசாரிப் போக்குகள்

ஐரோப்பிய அரசியல் உலகில், நாஸிக் கட்சியின் பிதாமகரான ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் மிகத் தீவிர வலதுசாரி (FAR RIGHT)க் கட்சிகள், நாஸிக்கட்சியின் குணாம்சங்களோடு தலையெடுத்து வருவது, சக ஐரோப்பிய மிதவாத, இடதுசாரி, ஜனநாயக அரசியல் கட்சித்தலைவர்களுக்கு பெருத்த அந்தர நிலையையும் தலையிடியையும் கொடுத்து வருவது உலக அரசியல் அவதானி-களின் கவனத்திற்கு உள்ளாகியுள்ளது.

அண்மையில் ஒஸ்திரியாவில் உள்ள பழமை பேண் மிதவாத வலதுசாரிக் கட்சி ஹிட்லரின் இனவாதக் கொள்கைகளோடு ஒட்டுறவுடைய ஜோர்ச் ஹெய்டர் (JOERG HAIDER) என்பவரின் தலைமையில் இயங்கும் மிகத்தீவிர வலதுசாரிக் கட்சியோடு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. பதினைந்து நாடுகளை அங்கத்துவமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் (EURO-PEAN UNION) எச்சரிக்கைகளையும் புறந்தள்ளி, வூல்ங்காங் சசேல் (WOLFGANG SCHUESSEL) தலைமையில் இயங்கும் ஒஸ்திரிய மக்கள் கட்சி, ஹெய்டரின் தலைமையில் இயங்கும் ஒஸ்திரிய சுதந்திரக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்துள்ளது.

வலதுசாரிக் கூட்டணியின் தலைமைக்-குரியவராக வரவிருக்கும் ஒஸ்திரிய மக்கள் கட்சியின் தலைவரான சசேல், தனது கட்சியின் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு ஹெய்டரின் ஒஸ்திரிய சுதந்திரக் கட்சியோடு உடன்படிக்கைக்கு வந்துள்ளார். அண்மையில் நடந்த தேர்தல்களைக் கொண்டு பார்க்கையில், மீளவும் ஒரு பொதுத்தேர்தல்கள் நடக்கும் பட்சத்தில் அவரது கட்சி படுதோல்வி அடையலாம் என்பது அரசியல் அவதானிகள் கணிப்பு. இவர் கூட்டுச் சேர்ந்துள்ள ஒஸ்திரிய சுதந்திரக் கட்சியின் 50 வயதை எட்டியுள்ள தலைவர் ஹெய்டர், மேற்கத்தைய அரசியல்-வாதிகளால் வெறுக்கப்படும் ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல, ஒரு தீவிர நவ நாஸி கொள்கைகளின் ஆதரவாளராகவும் சர்வாதிகாரப் போக்கை ஆதரிக்கும் ஒரு இனவாதியாகவும் இருப்பது பிரபலமான ஒன்று.

இவ்வாறு சசேல் தீவிர வலதுசாரியான ஹெய்டரின் கட்சியோடு உடன்படிக்கை செய்து கொண்டதன் மூலம் ஐரோப்பாவின் எழுதப்படாத சட்டமாக இருந்து வரும், முக்கிய அரசியல் ஓட்டத்தில் உள்ள கட்சிகள் தீவிர வலதுசாரிக் கட்சிகளோடு இணையக் கூடாதென்னும் போக்கை நிராகரிப்பதாக நிற்கிறார். இந்நிராகரிப்பு, ஐரோப்பியர் அதிகமாகப் பேண விரும்பும் ஜனநாயகம், மனித உரிமைகள், பல்கலாசாரம் போன்றவற்றை நிராகரிப்பதாக முடியும். ஏற்கனவே பல்லினக் கலாசாரத்திற்கான அங்கீகாரம், ஐரோப்பிய நாட்டவர் மத்தியில் பெரிதாக விரிந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், பிறநாட்டவர் வருகை போன்றவற்றால் பல்வித தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றது.

தொண்ணூறுகளின் நடுப்பகுதிகளில் இத்தாலியில் இத்தகைய தீவிர வலதுசாரிக் கட்சிகள் இரண்டு அரசாங்கத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவை பின்னர் அரசியல் ஓட்டத்தில் உள்ள பிரதான கட்சிகளான பசுமைப்புரட்சி, சூழலியல் கட்சிகள், இடதுசாரி, வலதுசாரி ஜனநாயகக் கட்சிகளால் ஓரங்கட்டப்பட்ட போதும், இப்படி இத்தீவிர வலதுசாரிக்கட்சிகள் ஏற்றுக் கொள்ளப்-பட்டமை, மேலும் ஐரோப்பாவின் எப்பகுதியிலும் இவ்வாறு தீவிர வலதுசாரிகள் அணிதிரள வாய்ப்பும் வழியும் திறக்கப்படும் என்பதே மேற்கத்தைய அரசியல்வாதிகளின் பயமாகும். இவ்வாறு பல்கலாசார நடவடிக்கை குழுவின் பேச்சாளரும், குடிவரவை ஆதரிக்கும் இனவாதத்திற்கு எதிரானவருமான ஒல்லாந்த நாட்டைச் சேர்ந்த சஸ்கியா தாரு (SASKIA DARU) என்பவர் கூறினார்.

எது எவ்வாறு இருந்த போதும், ஐரோப்பிய நாட்டின் அரசியல் வரைபடத்தை நாம் உற்று நோக்குவோமாயின் ஒரு முக்கிய-மான விஷயம் புலனாகும். என்னதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் ஐரோப்பா எங்கும் இயங்கினாலும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு இனவாத அரசியல் கட்சி இயங்கவே செய்கிறது என்பதே அது.

இன்னும் முக்கியமான விஷயம் என்னவெனில், இத்தகைய இனவாதக் கட்சிகள் ஐரோப்பிய அரசியல் உலகில் மக்களால் பின்தள்ளப்பட்டு படுதோல்வி அடைந்த காலங்கள் மலையேறி விட்டன.

தீவிர வலதுசாரி சுவிஸ் மக்கள் கட்சி (SVP) அண்மையில் நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது 22 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கட்சியின் தலைவர் கிறிஸ்ரோப் பொல்கர்(CHISTOPPER BLOCHER).

பிரான்ஸில் உள்ள தீவிர வலதுசாரி அரசியல் கட்சியான தேசிய முன்னணி, 1997ல் நடந்த தேர்தலில் 15வீத வாக்குகளைப் பெற்றது. அதன் பிரதித் தலைவரான றுாேனோ மேகிறற் (BRUNO MEGRET) தானொரு கட்-சியை அமைத்துக் கொண்டு பிரிந்து சென்று அதன் வாக்குகளைப் பிரித்திருக்காவிட்டால் 1999ல் நடந்த தேர்தலில் அதற்கு கணிசமான தொகை வாக்குகள் கிடைத்திருக்கலாம்.

இத்தகைய தீவிர வலதுசரி கட்சிகளுக்-குரிய வளமான இடமாக பெல்ஜியம் இருக்கிறது. இங்குள்ள ஃபிளமிஷ் அணி 99ல் நடந்த தேர்தலில் 10 வீதமான வாக்குகளைப் பெற்றது. அன்டவேர்ப்பில் (ANTWERP) அது 1995ல் நடந்த தேர்தலின் போது பெற்ற-வாக்குகளை விட 99ல் அதன் வாக்குகளை 30 வீதமாக அதிகரித்தது.



ஸ்கந்திநேவியாவிலும் தீவிர வலதுசாரிப் போக்குகள் தலையெடுக்க ஆரம்பித்துள்ளன. எதையும் அனுசரித்துப் போகும் தாராளத் தன்மையுடைய ஸ்கந்திநேவியா இன்று தீவிர வலதுசாரிகளுக்கு இடமளிப்பதாக மாறியுள்ளது. 1997ல் நடந்த தேர்தலில் சார்ல் ஹேகனின் (CHARL HAGEN) பிற்போக்கு கட்சி, பிறநாடுகளில் இருந்து வருவோரை சம்பந்தப்படுத்திய பிரசாரத்தின் மூலம் 15 வீதவாக்குகளைப் பெற்றது.

மேற்கூறப்பட்ட தீவிர வலதுசாரிக் கட்சிகள் தமக்குள் பல்வகையான கொள்கைகளில் வித்தியாசப்பட்டிருந்தாலும், ஒன்றே ஒன்றில் முக்கியமாக ஒருமுகப்-பட்டிருந்தனர். அதாவது ஐரோப்பாவிற்குள் தஞ்சங்கோரி உள்நுழையும் பிறநாட்ட-வர்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில்! இதை முதன் முதலாகச் செய்தவர், பிரான்சின் தேசிய முன்னணியின் தலைவரான லீபெண்(Le Pen) ஆவார்.

இரண்டாவதாக இவர்கள் தமது நாடுகள் பிறநாட்டவரால் நிரம்பி வழிவதாகவும் குற்றஞ் சாட்டுகின்றனர். லீ பென் போன்றோர் பிறநாட்டவர் அனைவரையும் தமது நாடுகளில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்கின்றனார். ஆனால் அதே நேரத்தில் ஒஸ்திரிய சுதந்திரக் கட்சியின் தலைவரான ஹெய்டர், சட்டரீதியற்று உள் நுழைவோரையும் குற்றவாளிகளையுமே வெளியேற்ற வேண்டும் என்று கூறுகிறார்.

அடுத்த முக்கியமான விஷயம் என்னவெனில், இவர்கள் ஹிட்லரின் நாஸிகள் மாதிரி, யூதர்களுக்கு எதிரான (ANTI-SEMITISM) உணர்வைக் கொண்டிருப்பது. ஒஸ்திரிய சுதந்திரக் கட்சியின் தலைவரான ஹெய்டர் கரிந்தியா (CARINTHA) மாகாணத்தில் ஆளுநராக இருந்த போது இவர் ஹிட்லர் வைத்திருந்த யூத அடிமை முகாம்களை வானளாவப் புகழ்ந்து பேசியதன் மூலம் அப்பதவியிலிருந்து கீழிறக்கப்பட்டார். அண்மையில் நடந்த பாராளுமன்ற விவாதத்தின் போது, ஹிட்லரின் அடிமை முகாம்களை தண்டனை முகாம்களாகக் சரிக்கட்டல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இவர்கள், இன்று நடைமுறை-யில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் சுயநலம் நிறைந்தவையாகவும், சுயநலமும் ஊழலும் நிறைந்த தலைவர்களால் ஆளப்படு-பவையாகவும் சாடுகின்றனர். தமது தேசமக்களின் பற்றில்லாது தம்மை வளப்படுத்துவதில் அக்கறை காட்டுவதாகவும் இவர்கள் சாடப்படுகின்றனர். ஆனால் தீவிர வலதுசாரிகளான தாமே உண்மையான மக்கள் சேவகர்கள் என்றும் தேசப்பற்றுடையவர் என்றும் பிரச்சாரம் செய்கின்றனர். இவர்களில் ஹெய்டர் தன்னை சாதாரண மனிதர்களுக்காகப் பாடுபடும் றொபின் ஹூட் என்றும் கூறியுள்ளார்.

ஆனால் இதில் உள்ள முரண் நகை என்னவெனில் இவர்கள் அனைவரும் கோடீஸ்வரர்களாக இருப்பதே. உதாரணமாக ஹெய்டர் கரிந்தியா மாகாணத்தில் பெருமளவிலான காணிக்கு சொந்தமான நிலவுடைமையாளராவார். இவருக்கு சமதையான இவரது நண்பரான சுவிஸ் நாட்டு புளோசர் (BLOCHER) ஒரு பல்கோடீஸ்வரர், தொழிலதிபர். இவ்வாறே ஜேர்மன் நாட்டு மக்கள் ஒன்றியக் கட்சியின் தலைவரான ஜெர்ஹாட் ஃபிறே (GERHARD FREY) பிரசுர சாதனங்கள் மூலம் மிகுந்த பணம் சம்பாதித்தவர்.

மேற்கூறப்பட்ட கட்சிகளின் முக்கிய ஒற்றுமை என்னவெனில், இவை அனைத்தும் உட்கட்சி விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளாது, ஒரே தலைமையின் ஏவுதலுக்கே கட்டுப்படும் அமைப்பை உடையதாகக் கொண்டிருப்பது.

இக்கட்சியின் மூலம் இன்று ஐரோப்பா-வில் உள்ள பொதுவான அரசியல் கட்சிகள் மிகுந்த பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவர்களை மிகவும் உறுத்துவது என்னவெனில், எதிர்காலத்தில் இவர்கள் விரிக்கும் வலையில் சிக்கிக் கொள்ளாது அரசியல் நடத்துவது முடியாமல் இருக்கும் என்பதே.

ஐரோப்பாவில் நடந்த மக்கள் கணிப்பீட்டில், அரைவாசி மக்கள் ஐரோப்பிய நாடுகள் பிறநாட்டார் இல்லாமல் நன்றாக இருக்கும் என்றே சொல்லியுள்ளனர். ஆனால் இன்னும் அரைவாசி மக்கள் இதற்கு எதிரான அபிப்பிராயத்தையே கொண்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருப்பது அந்நாடுகளில் நிலவும் வேலைவாய்ப்பின்மை, கூடவே அகதிகள் பெருமளவில் வருகை. 1999ல் மட்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் 350,000 அகதிகள் தஞ்சம் கோரியுள்ளனர்! இதனால் ஜேர்மனி போன்ற நாடுகளில் நவநாஸி ஆதரவாளர்களோடு சேர்ந்து, அகதிகளை தங்க வைக்கும் இடங்களை மக்கள் நாசமாக்கியுள்ளனர். தீவைத்துள்ளனர். அகதிகளின் உயிர்களுக்கு ஆபத்தான சூழல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் தீவிர வலதுசாரிக் கட்சிகள் அரசாங்கங்களின் அங்கமாக வரும் பட்சத்தில், எதிர் காலம் என்னவாக இருக்கும் என்பது ஒரு கேள்வி. இதற்கான விடை தெளிவில்லாததாகவே இருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



*'கடந்த ஆண்டு மார்ச் 28 இல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த ஹன்டி பேரின்பநாயகம் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் சாந்தசீலன் கதிர்காமர் ஆற்றிய உரையின் முதற் பகுதி இது. மிகுதி அடுத்த இதழில் பிரசுரமாகும். ஆங்கிலத்தில் இருந்து உரையை தமிழில் மொழிபெயர்த்தவர் காவலூர் இராஜதுரை.'*

ஆ-ர்.

# இலங்கை வாலிபர் காங்கிரஸ் விட்டுச் சென்ற விழுமியங்கள்

வரலாற்றுச் சிறப்புடைய இந்த வைபவத்தில் இன்றைய நிகழ்ச்சிகளில் பங்குபெறக் கிடைத்தமை ஒரு பெரும் பேறெனக் கருதுகிறேன். கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் இந்த வைபவத்தை ஏற்பாடு செய்தமை பல வழிகளில் பொருத்தமானதே. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் தம் ஆசிரியத் தொழிலின் இறுதி ஆண்டுகளில் இக் கல்லூரியில் பணியாற்றியதன் மூலம் மனநிறைவடைந்தார். இங்கு மட்டுமல்லாமல், யாழ்ப்பாணம், லண்டன், ஆகிய நகரங்களிலும் நீங்கள் மிகுந்த பற்றுதியுடனும், உற்சாகத்துடனும் இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருப்பதை அவதானித்துள்ளேன். கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னாரின் பெயரைத் தலைமுறை தலைமுறையாகப் போற்றிப் பாராட்டும் என்பதில் ஐயமில்லை. அன்னார் கடைப்பிடித்த இலட்சியங்களும், எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கப்படுவதை நாம் உறுதி செய்தல் வேண்டும். இந்தியாவினதும், இலங்கையினதும் மாபெரும் வரலாற்றுப் பாரம்பரியத்தின் வழித்தோன்றல் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள். இந்தப் பாரம்பரியமானது, அசோகன், அக்பர் போன்ற சக்கரவர்த்திகள் விட்டுச் சென்ற அருஞ்செல்வத்தின் ஆணிவேர்களிலிருந்தும், ராஜாராம் மோகன் ராய், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தி போன்ற சீர்திருத்த, மறுமலர்ச்சிச் செம்மல்களின் மரபுகளிலிருந்தும் தோன்றியதொன்றாகும். இந்த மரபு, எல்லா மதத் தலைவர்கள் மீதும் கருணை, தாட்சணியம், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இன்று புரையோடிப் போயுள்ள குறுகிய வக்கிர புத்தி, வெஞ்சினம், வன்செயல் ஆகியவற்றைக் கடந்து சத்தியத்தை நாடும் தன்மையது. சுவாமி விபுலானந்தர், ராமகிருஷ்ண மிசனில் சேர்ந்திருந்த காலத்தில் 'யுத் காங்கிரஸ்' என்ற வாலிபர் இயக்கத்தின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.


25 செப்டெம்பர் 1947 திகதிக் கேசரியில் ஹன்டி பேரின்பநாயகம் விபுலானந்தருக்கு அஞ்சலி செலுத்திய வேளையில், தம்மைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், தலைவராகவும் சுவாமி விபுலானந்தர் விளங்கினார் என்று குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களையும், இந்த நாட்டுக்கு அவர் ஆற்றிய பன்முகப்பட்ட சேவைகளையும் மட்டுமல்லாமல் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசில் இணைந்து அவரின் சகாக்களாக இயங்கிய தலைமுறையினர் அனைவரையும் நாம் நினைவுகூருகிறோம். அவர்களில் துரைசிங்கம், அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் மறைந்து விட்டார்கள். அவர் ஒருவரே மறக்கவொண்ணாத அந்த தலைமுறையினரின் சின்னமாக எஞ்சியிருக்கிறார். அவருடைய தலைமுறையினர் கல்வித்துறையில் பெருந்தலைவர்களாக பங்காற்றினர். யாழ்ப்பாண மக்களினதும், இந்நாட்டுத் தமிழர்களினதும், சமூக, அரசியல் மேம்பாட்டுக்காக மட்டுமல்லாமல், முழு நாட்டுக்குமே பற்றுறுதியுடன் பணிபுரிந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தாம் இந்நாட்டவர்கள் என்ற உணர்வுடன் வாழ்ந்தார்கள். யாழ்ப்பாண மக்கள் மத்தியிலே சுயசிந்தனை ஆற்றல் வளர்வதற்குப் பெரும் பங்காற்றி அன்றைய தலைமுறையினரின் எண்ணப் போக்கை வழி நடத்தினார்கள். வாலிபர் காங்கிரசின் மாற்றவொண்ணாச் செல்வாக்கை அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட அன்றைய தலைமுறையினரிடம் காண முடிந்தது.

1933ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் கீழ் வரும் பாராட்டுரையை ஹன்டி பேரின்பநாயகம் அவர்களுக்கு வழங்கினார்கள். "எம் நாட்டிலே பல இல்லங்களிலும், பல்வேறு வாழ்க்கைத் துறைகளிலும் உங்களை நேசித்த உங்களைப் பின்பற்றிய உங்களைக் கனம் பண்ணிய, உங்கள் மொழியாட்சியைக் கற்ற உங்கள் தொனி சுத்தமான பேச்சுவன்மையால் கவரப் பெற்ற உங்களைத் தம் வாழ்வுக்கும், சாவுக்கும் முன்மாதிரியாகக் கொண்ட பலர் ஏற்கெனவே பெருகியுள்ளார்கள். வரவிருக்கும் சந்ததியினர் தம் வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்கு உங்கள் வாழ்க்கை என்றும் முன்மாதிரியாக விளங்கும். (See K. Nesiah - S. Handy Perinbanayagam, A Valedictory Tribute)

### சொந்த நினைவுகள்

அன்றைய சந்ததியினரின் பலரை அறியவும், கூடிப் பழகவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. உண்மையில் எமது காலத்தில் மேற்குறித்தவாறு ஹன்டி பேரின்பநாயகம் என்ற பெயர் அங்கிங்கென்னாதபடி எங்கும் பிரசித்தமடைந்திருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது மலேசியா (அன்றைய மலாயா) ஜப்பானியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த சமயத்தில் அங்குள்ள செரம்பான் என்னும் இடத்தில் சிறு பையனாக இருந்தபோது அவரின் பெயரைக் கேள்விப்பட்டேன். நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திர இயக்கத்தை வலுப்படுத்தி இந்திய தேசியப் போரணியினை அமைத்திருந்தார். அந்தப் போர்ப் படையிற் சேர்ந்திருந்தவர்கள் மலாயாவின் பெருநகர வீதிகள் தோறும் காந்திஜிக்கு ஜே! நேருஜிக்கு ஜே! நேத்தாஜிக்கு ஜே! என்று கோஷமிட்டு அணிவகுத்துச் சென்றார்கள். எனது தகப்பனார் மெதடிஸ்த திருச்சபையில் ஒரு போதகராக இருந்த இலங்கையர் சங்கம், இந்திய தேசியப் பேரணி இரண்டிலும் அங்கத்தவராய் இருந்தார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் 1924 இல் ஆரம்பிக்கப்பெற்றபோது அதன் ஸ்தாபக உறுப்பினராக விளங்கிய அவர் (அப்போது அது மாணவர் காங்கிரஸ் என்று அழைக்கப்பட்டது) மதச்சார்பற்ற பத்திரிகையான இலங்கைத் தேசாபிமானி என்றும் பொருள் தரும் (Ceylon Patriot) என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும், பணியாற்றி வந்தார். (யாழ்ப்பாணத்தில் 1861இல் ஆரம்பிக்கப்பட்டது.) இப்பத்திரிகை பின்னர் வாலிபர் காங்கிரசின் குரலாகப் பரிணாமமடைந்தது. லங்காபிமானி அச்சகம் இதனை வெளியிட்டு வந்தது. 1930களில் பத்திரிகை நின்றுவிட்டபோதிலும், அச்சமூகம் (கேரளத்தில் இருந்து வந்த) ஏபிரகாம் மோசேஸ் என்பாரின் ஆற்றல் மிகு நிர்வாகத்தால் சாவகச்சேரி தென்மராட்சிப் பற்று ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு 1960களின் முற்கூறுவரை சேவையாற்றி வந்தது. பல்கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக விளங்கியவரும், அழகசுந்தர தேசிகர் என்று அறியப்பட்டவருமான பிரான்சிஸ் கிங்ஸ்பெரி. அவருக்குப் பின்னர் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் பதவி வகித்த கலாநிதி கணபதிப்பிள்ளை இருவரும் தமது எல்லா நூல்களையும இந்த அச்சகத்திலேயே வெளியிட்டனர். பொன்னையா அவர்களின் திருமகள் அழுத்தகம் 'ஈழகேசரி' பத்திரிகையை வெளியிட்டு வந்தது. ஈழகேசரி பொன்னையா என்று பிரபலம் பெற்ற அவர், ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் வாலிபர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆகியோருடன் அந்நியோன்னிய உறவு கொண்டிருந்தார். காங்கிரசின் தமிழ்க் குரலாக விளங்கிய ஈழகேசரி இந்தக் காலகட்டத்தின் வரலாற்றுத் தகவல்களை வழங்கக்கூடிய முக்கிய ஆவணமாக விளங்குகிறது. ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த மலர் இந்த அச்சகத்திலேதான் அச்சிடப்பட்டது. காங்கிரசின் பணிக்கு இந்த அச்சகம் அளித்து வந்த ஆதரவை இந்த மலரின் ஆசிரியர்கள் நன்றியுணர்வுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட, இந்து சாதனம் (Hindu Organ), Morning Star ஆகிய பத்திரிகைகளும் காங்கிரசின் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளித்து செய்திகள் வெளியிட்டு வந்தன. இவை சில சமயங்களில் கண்டனங்களாக அமைந்தாலும், ஆக்கபூர்வமானவையாகவும், நியாயமானவையாகவும் விளங்கின.



ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள்

செரம்பனில் நாம் வாழ்ந்த நாட்களில் 1920, 1930களில் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்று வந்த சம்பவங்கள் பற்றியும் அக்காலத்தில் பிரமுகர்கள் பற்றியும் அடிக்கடி கேள்விப்பட்டு வந்தோம். வாலிபர் காங்கிரஸ் 1927இல் காந்தியடிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தமை பற்றியெல்லாம் அறிந்தோம். இந்தச் செய்திகளில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் பெயர் முக்கிய இடம்பெற்று வந்தது. எங்கள் வீட்டிலே காந்தி சி. எவ். அன்ட்ரூஸ், தாகூர், விவேகானந்தர் ஆகியோரின் படங்கள் மதிப்புடன் தொங்கவிடப்பட்டிருந்தன. நானே தமிழ் கற்பதற்கு விவேகானந்தர் பாடசாலைக்குச் சென்று வந்ததுடன், செரம்பன் இந்து ஆலய வழிபாடுகளிலும் பங்கு கொண்டேன். எங்கள் குடும்பத்தவர்கள் பலர் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய நெடுங்கால மரபொன்றிருந்தது. ஓரிருவர் மறுபடியும் இந்து மதத்தைத் தழுவிய பிரசித்த நிகழ்ச்சியும் இடம்பெற்றது. சி.வை. தாமோதரம்பிள்ளை, அவரது மகன் பிரான்சிஸ் கிங்ஸ்பரி ஆகியோர் குறிப்பிடத்தக்க உதாரணங்களாவர். எனவே இந்த வைபவத்தையும் இதில் நான் பிரசன்னமளித்திருப்பதையும் நான் பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். எமது வாழ்க்கையின் போக்குக்கு வழிசமைத்த பெரியார்கள், சம்பவங்கள் ஆகியன இன்று என் மனக்கண்ணில் தெரிகின்றன.

என் பல்கலைக்கழக நாட்களில் பல்கலைகழகப் பாதிரியாராகவும், பிற்காலத்தில் இனிய நண்பராகவும் விளங்கிய வண. செலஸ்தீன் பர்ணாந்து அவர்களுடன் நான் ஒரு முறை சுவையான வாக்குவாதத்தில் ஈடுபட்டேன். கிறிஸ்தவ மதத்தைக் கைவிட்டு வேற்று மதங்களைத் தழுவிய தென்புல அரசியல்வாதிகள் சிலரை அவர் கடுஞ்சொற்களால் சாடினார். ஹன்டி பேரின்பநாயகம் பற்றிய அவர் கருத்து என்னவென்று கேட்டேன்: அவருக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. ஹன்டி பேரின்பநாயகத்தை மற்றவர்களுடன் ஒப்பிடக்கூடாது. பல வருடகால சிந்தனையின் பிறகே நேர்மைத்திறனுடன் அவர் அவ்வாறு செய்தார் என்று விடையளித்தார்.

நானே ஒருமுறை ஹன்டி பேரின்பநாயகம் அவர்களுடன் உரையாடிய வேளையில் சமயம் பற்றிய அவர் கொண்டிருந்த கருத்து என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் தந்த விடை அறிவுபூர்வமானதாக இருக்கக் கண்டேன். இது பற்றி மேலும் விவரிப்பதை விடுத்து, அவரை நன்கு அறிந்தவர்களான ஒறேற்றர் சுப்பிரமணியம், ஏ.எஸ். கனகரத்தினம், என். சபாரத்தினம் ஆகிய மூவரும் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்தச் சங்கத்தின் சார்பாகத் தெரிவித்ததென்னவென்று தெரிந்து கொள்வோம். கிறிஸ்தவ பெற்றோரின் புத்திரனாகப் பிறந்த அவர் கல்லூரியிற் பயின்ற காலத்திலும், பிற்கால வாழ்க்கையிலும் கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தினில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். சிந்தனையாளராக விளங்கிய அவர் மனம் வைதீக கிறிஸ்தவ திருச்சபையின் கருத்துக்களை ஏற்க மறுத்தது. காலக்கிரமத்தில் தமது மூதாதையர்களின் மதத்தைத் தழுவிக் கொண்டார். கிறிஸ்தவ மதத்தினதும் சைவ சித்தாந்தத்தினதும் கோட்பாடுகள் ஒன்றே என்னும் அளவுக்கு ஒருமைப்பாடுள்ளனவென்று இறுதிவரை அவர் நம்பினார்"

1946 ஏப்ரல் மாதத்தில் 'அருண்டேல் காசல்' என்ற கப்பலில், மலாயாவிலிருந்து முதலாவது தொகுதி யுத்த அகதிகளாக இலங்கை திரும்பினோம். போர் வீரர்களை ஏற்றிச் செல்வதற்குப் பயன்பட்ட அந்தக் கப்பல், அகதிகளுக்கான முதலாவது கப்பலாக மாற்றப்பட்டிருந்தது. எனவே இந்தக் காலத்திற்றான் நம் மக்கள் முதன் முறையாக அகதிகளாயினர் என்று கொள்வதற்கில்லை. யாழ்ப்பாணப் பாடசாலைகள் மலாயாவிலிருந்து வந்த அகதிகளுக்குத் தம் கதவுகளை அகலத் திறந்து விட்டன. ஹன்டி பேரின்பநாயகம் என்ற பெயர் பிரசித்தம் பெற்றிருந்த யாழ்ப்பாணக் கல்லூரியில் நான் சேர்ந்து கொண்டேன். அச் சமயத்தில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் சட்டத்தொழிலையும், அரசியல்துறையையும் 'ஒரு கை பார்க்கும் நோக்கத்தோடு கல்லூரியை விட்டு விலகியிருந்தார். ஆயினும், அங்கு பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் வாலிபர் காங்கிரஸ் தொடர்பு கொண்டவர்களாக விளங்கினர். யாழ்ப்பாணக் கல்லூரியிற் பயின்ற காலத்தில் சித்தார்த்தன், சரவணபவன் ஆகிய இருவருடன் பழக நேர்ந்தது. இருவரும் அன்று முதல், என் நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகிறார்கள். பல ஆண்டுகள் கழித்து நான் திருமணம் செய்து கொண்ட போது, எதிர்பாராத வகையில் என் மனைவி, ஹன்டி பேரின்பநாயகத்தின் மகள் செல்வி திருச்சந்திரனின் சம காலத்தவர் மட்டுமல்லாமல், அவரின் நெருங்கிய தோழியாகவும் விளங்கினார் என்பதை அறிந்து மகிழ்ந்தேன். அவ்வாறே ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் மகள் - இன்றைய திருமதி புவனராஜன் - அவர்களுக்கும் அவர் சிநேகிதியாக விளங்கினார். ஒறேற்றர் அவர்கள் வாலிபர் காங்கிரஸின் மற்றொரு தூணாக நின்றவர். அவரும், வாலிபர் காங்கிரசின் முன்னைய உறுப்பினர்களும் சேர்ந்து அமைத்த ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்தச் சங்கம் 1980இல் ஹன்டி பேரின்பநாயகம் நினைவு மலரை வெளியிட்டது. வாலிபர் காங்கிரசின் வரலாற்றையும், ஹன்டி பேரின்பநாயகம் சொற்பொழிவுகள், கட்டுரைகள் ஆகியவற்றிற் சிலவற்றையும் இம்மலரிற் காணலாம்.

1970களின் முற்கூறில் வாலிபர் காங்கிரசின் வரலாற்றினை எழுதும், முயற்சியில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் ஆர்வம் கொண்டார். இப்பணியில் உதவும்படி என்னிடம் கேட்டார். அவ்வேளையில் அவர் கொழும்பில் வாழ்ந்து வந்தார். நான் கொழும்பில் ஆசிரியனாகக் கடமையாற்றி வந்தேன். இன்று போல அன்றும் கொழும்பில் வீடு தேடுவது பெரும் வில்லங்கமாய் இருந்ததால், என் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இருந்தது. அடிக்கடி யாழ்ப்பாணம் போய் வந்து கொண்டிருந்தேன். என்றாலும் நாம் அவரைச் சந்தித்த வேளைகளில், அவர் தன் நினைவுகளை எனக்குச் சொல்ல நான் குறித்ததுக்கொண்டேன். இந்தக் குறிப்புகளையும் அவர் எழுதிய கட்டுரை ஒன்றையும் வாலிபர் காங்கிரசின் வரலாற்றைப் பதிவதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். 1973இல் மேற்படிப்பின் நிமித்தம் ஜப்பான் சென்றேன். நான் திரும்பி வந்தபோது ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் நோய்வாய்ப்பட்டி ருந்தபடியால் அவரின் நினைவுகளைத் திரட்ட இயலவில்லை. என்றாலும், கையெழுத்தாக அல்லது பிரசுரங்களாக ஆவணங்கள் உண்டா என்று கேட்டபோது அவர் சொன்ன பதில் என் மனதில் இன்றும் பதிந்திருக்கிறது. "என் வாழ் நாள் முழுவதும் இடத்துக்கு இடம், வீட்டுக்கு வீடு என்று நாடோடியாகத் திரிந்திருக்கிறேன்" என்றார். அந்தத் தலைமுறையினரிற் பெரும்பாலானவர்களின் வாழ்க்கை அப்படித்தான் அமைந்தது, என்றாலும் அவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார்கள் என்பதை நாம் அறிவோம். இன்றுள்ளவர்களைப் போலப் பொருள் பண்டங்களையும், சொகுசான வாழ்க்கையையும் அவர்கள் தேடி அலைந்தார்களில்லை. தமக்குரிய அனைத்தையும் மாணாக்கர்கள், ஆசிரியர்கள், சமுதாயத்தவர்களுக்கு அள்ளிக் கொடுத்தார்கள்.

இன்று முடிவற்றுத் தொடரும் போரின் காரணமாக, பேணி வைத்திருந்த அற்பசொற்ப ஆவணங்கள் கூடத்தொலைந்துவிட்டன. கல்வி, கலாசாரம், உண்மை, நேர்மை ஆகிய உயர்ந்த பண்பாடுகளையிட்டுக் கிஞ்சித்தும் அக்கறையற்ற அரசியற் கோட்பாடுகளைப் பின்பற்றும் சமூகவிரோத சக்திகள், யாழ்ப்பாணத்தில் நம் வீடுகளில் காலம் காலமாக சேகரித்து வைத்திருந்த பெறுமதிமிக்க புத்தகங்கள் ஆவணங்கள், படங்கள், ஒலிநாடாக்கள் எல்லாவற்றையும் அழித்து நாசம் செய்து விட்டன.

ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் மறைந்து சில காலத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற ஞாபகார்த்தக் கூட்டத்திலே இளைய சந்ததியினர் சார்பாக உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒறேற்றர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த (காலஞ்சென்ற) பேராசிரியர்கள் அரசரத்தினம் அவர்களும் உரையாற்றினார். 1980இல் வேம்படி மகளிர் கல்லூரியில் பெருந்திரளான மக்களின் முன்னிலையில் ஹன்டி பேரின்பநாயகம் நினைவு மலரை வெளியிட்டோம். இதற்கும் ஒறேற்றரே தலைமை தாங்கினார். வாலிபர் காங்கிரஸின் எச்ச சொச்சங்களாக மிஞ்சி வாழ்ந்த அனைவரும் ஒரேயிடத்திற் சந்தித்த கடைசிக் கூட்டம் அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

வாலிபர் காங்கிரசின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான செனேற்றர் நடேசன் அன்று பிரதான பேச்சாளர். அன்றைய வைபவமும் மலரின் உள்ளடக்கம் அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. அதனால் அவருடைய பேச்சு ஒன்றரை மணித்தியாலத்துக்கு நீடித்தது. இதன் காரணமாக அவருக்குப் பின் உரையாற்றவிருந்த மேலும் இரண்டு பிரதான பேச்சாளர்களான (காலஞ்சென்ற) பேராசிரியர் கைலாசபதியும், நானும் எமது பேச்சை ஐந்தைந்து நிமிடத்துக்குச் சுருக்க வேண்டியதாயிற்று. சுமார் 20 வருட காலத்துக்கு முன்னர் இழந்த வாய்ப்புக்கு ஈடுசெய்யும் வகையில் இன்று, எனக்கு நிறைய நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இன்று நான் இளைய தலைமுறையினரின் பிரதிநிதியல்லன் என்றாலும் அவர்களுக்கு சொல்லவேண்டிய செய்தி எம்மிடம் உண்டு. யாழ்ப்பாணத்தில் உதயமான முதலாவது வாலிபர் இயக்கத்தின் வரலாறு பற்றியும் அழியாச் செல்வமான நிரந்தர விழுமியங்களை வேரூன்றச் செய்வதில் அயராது உழைத்த பெரியார்கள் பற்றியும் இன்று நாம் பேசுகிறோம். அவை எமக்குவிட்டுச் சென்றுள்ள விழுமியங்கள் எவை?

அடுத்த இதழில் முடியும்

நன்றி - நூலகத்திட்டம்



சமாதானத்திற்கான யுத்தத்தின் மூலம் தமிழ் மக்கள் வாழும் இடங்கள் பலவற்றைப் புலிகளிடம் இருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் கைப்பற்றிய பின்பு தொடர்ச்சியாக இடம் பெறும் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பு யுத்தத்தில் தமிழ் மக்களின் உயிர்கள் பலியிடப்பட்டு வருகின்றன.

புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த யுத்தத்தின் போது, நவாலி தேவாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டு 200ற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். அதன் பின்னர், சாவகச்சேரியில் பாடசாலை மாணவர்கள் மீது குண்டு வீசப்பட்டது, கடைசியாக மடு தேவாலயத்தின் மீது எறிகணை வீசப்பட்டது. இவை எல்லாமே, இது ஒரு இன ஒழிப்பு யுத்தமே என்பதற்கு நல்ல சான்றுகளாகும்.

அத்தோடு செம்மணியில் புதைக்கப்பட்ட 600ற்கும் மேற்பட்டவர்கள் தொடங்கி, இன்று வரை ஒவ்வொரு இடங்களிலும் புதிதாகப் புதைகுழிகள் உருவாகிக் கொண்டே போகின்றன. ஒரு சமாதானத்திற்கான யுத்தத்திற்கு எதற்காக இத்தனை பலிக்கடாக்களும், புதைகுழிகளும் என்று கேட்பாரில்லை.

உண்மையில், இது சமாதான முகமூடியுடன் அரங்கேறும் ஒரு இன ஒழிப்பு யுத்தம் என்பதற்கு இதனை விட வேறு சான்றுகள் எது தேவை?

இன ஒழிப்பு யுத்தத்தில் தான் இப்படியாக எதிரி இனத்தின் மீது படு மோசமான படுகொலைகளும், அடாவடித்தனங்களும் மேற்கொள்ளப்படும்.

இதே போன்றே இந்த யுத்தத்தின் நேரடிப் பலிக்கடாக்களாகத் தமிழ்ப் பெண்கள் உள்ளாக்கப்படுகின்றார்கள். ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளும், வல்லுறவின் பின்னான கொலைகளும் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. இதில் பலியிடப்பட்ட பெண்களில் கடைசியாகச் சாரதாம்பாள் என்ற பெண் கடற்படையினரால் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பாகப் ஊடகவியலாளர்கள், மனித உரிமைவாதிகள், பெண்கள் உரிமைகள் அமைப்புகளின் சமூகக் கண்ணோட்டங்கள் எப்படியாக உள்ளன என்பது அதிகம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும். ஏனெனில், தொடர்ச்சியாக இப்படியான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்விக்குரிய பதில் அங்கிருந்து தான் ஆரம்பமாக முடியும்.

### பெண்கள் யுத்தத்தின் பலிக்கடாக்கள்

உலகத்தில் யுத்தம் என்பது வரலாறுகளில் பதியப்படத் தொடங்கிய காலம் தொடங்கியே யுத்தத்தில் பெண்கள் பலிக்கடாக்களாகக் கொள்ளப்பட்டார்கள் என்று அறியக் கிடைக்கின்றது. பண்டைய வரலாறுகளைப் பார்ப்போமாயின் யுத்தத்தின் போது செல்வங்களைச் சூறையாடுவதைப் போல் பெண்களைச் சூறையாடியதையும், கவர்ந்து சென்றதையும் பார்க்கலாம்.

இது மன்னர்களுக்கிடையில், நடைபெற்ற யுத்தத்தில் இருந்து, இன்று இன ஒழிப்பு யுத்தம் வரை தொடர்கின்றது.

பெண்ணைக் கற்புள்ள வெறும் பண்டமாக்கியதும், அதை அழிப்பதாகச் செயற்படுவது அந்தச் சமூகத்தையோ அல்லது ஆண் மகனையோ அவமானத்திற்கு உள்ளாக்குவதாகவும் கருத்தில் கொண்டே இவை மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கருத்தியலின் வளர்ச்சியானது, இனங்களுக்கிடையிலான மோதலில் எதிரி இனத்தைச் சேர்ந்த பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்துவது என்பது, அந்த இனத்தையே பழிவாங்கியதாக அல்லது அவமானப்படுத்தியதாகக் கொள்ளப்படுகின்றது.

தவிரவும் பழி வாங்கப்படும் இனத்தினது இனத் தூய்மையை இல்லாதொழிக்கவும் இந்த வல்லுறவுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பர்.

இதற்கு நல்ல உதாரணம், அண்மைய பொஸ்னிய- சேர்பிய யுத்தம். இந்த யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான பெண்கள் பலாத்காரமாக அடைத்து வைக்கப்பட்டுத் தொடர்ச்சியாகப் பல நாட்களாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்த வல்லுறவினூடாகக் கருத்தரித்த பெண்கள் அக்கருவைக் கலைத்து விடக்கூடாது என்பதற்காக படையினரால் மாதக்கணக்கில் இவர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

இந்தப் பெண்கள் யுத்த வீரர்களின் காமப் பசிக்கு தீனியானார்கள்.

எதிரியை அவமானப்படுத்த அல்லது பழிவாங்க பயன்படுத்தப்பட்டார்கள்.

எதிரி இனத்தின் இனத் தூய்மையை இல்லாதொழிக்கப் பயன்படுத்தப்பட்டார்கள்.

ஒரு அவமானச் சின்னத்தை வேண்டாத உயிரைச் சுமக்க,பெற,வளர்க்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இது உண்மையில், இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிலிப்பைன்ஸ் பெண்களை, ஜப்பானியப் படையினர் வல்லுறவுக்கு உட்படுத்தியதைப் போன்றது. அதனையும் விட மோசமானது என்று கூடச் சொல்லலாம். அதன் போது பெண்கள், மந்தைகளைப் போல் அடைத்து வைக்கப்பட்டு வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இதில் பாலியல் வல்லுறவுக்குள்ளானவர்கள் அன்றைய நாட்களின் வேதனைகளைச் சுமந்தபடி குழந்தைகளுடன் வாழ்ந்தார்கள், இன்னமும் வாழ்கிறார்கள்.

இன்றும், இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானியர்களால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்குப் பதில் சொல்ல முடியாமல், ஜப்பான் அவமானத்தில் தலை குனிந்து நிற்கிறது.

1995ம் ஆண்டு நடைபெற்ற பெய்ஜிங் மாநாட்டின் போது இவ்விடயம் பெரியளவில் பெண் உரிமை அமைப்புகளால் கவனத்தில் கொள்ளப்பட்டது. அம்மாநாட்டில்; பிலிப்பைன்ஸ் பெண்களின் அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இதன் பின்னர் நடைபெற்ற, பொஸ்னிய - சேர்பிய யுத்தத்திலும் இதுவே நடைபெற்றது. இன்றும், பல பெண்கள் வல்லுறவுக்கு உள்ளாக்கியவர்களின் முகங்களே தெரியாமல் அவர்கள் தந்த மனவடுக்களுடன் அவர்களின் குழந்தைகளைச் சுமந்து வாழ்ந்து வருகிறார்கள்.

### யுத்தத்தில் பலிக்கடாவாகியுள்ள தமிழ்ப் பெண்கள்

தற்போது இலங்கையில் நடைபெறும் யுத்தத்திலும் பல தமிழ்ப் பெண்கள் சிங்களப் படையினரால் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.


சமாதானத்திற்கான யுத்தம் என்ற முகமூடிக்குள் தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வல்லுறவுச் சம்பவங்களும், வல்லுறவுக்குப் பின்னான கொலைகளும் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் பாலியல் வல்லுறவுக்குப் பின்னான கொலைகள் மட்டுமே வெளியே பெரும்பாலும் தெரியவந்துள்ளன என்பதாகும்.


தமிழ்ச் சமூகச் சூழலின் இறுக்கத்தினால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட எத்தனையோ பெண்கள் இன்னும் மௌனிகளாகவே வெளித் தெரியாமல் வாழ்கின்றார்கள். சிலர் குழந்தைகளுடனும் வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில வல்லுறவுச் சம்பவங்கள் அனேகம் பேருக்குத் தெரிந்தும் நடைபெற்றிருக்கின்றது. அவர்கள் தங்களை மனரீதியாகத் திடப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில், கிழக்கு மாகாணத்தையும் எல்லைப் புறக் கிராமங்களையும் சேர்ந்த பல பெண்கள் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். யுத்தத்தில் கணவனை இழந்த



பெண்களும் இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார்கள். பல பெண்கள் தங்களை வல்லுறவுக்குள்ளாக்கியவர்களைத் தெரிந்திருந்தும், அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த முடியாமல் மௌனமாக வாழ்ந்து வருகிறார்கள்.



பொ. ஐ. முவின் சமாதான யுத்தத்தின் பின்னர், இது தமிழ் மக்கள் வாழும் எல்லா இடங்களுக்கும் பரவியுள்ளது.

வட, கிழக்கில் தொடர்ந்து நடைபெறும் இப்படியான சம்பவங்கள் பல மூடி மறைக்கப்படுகின்றன. வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு உயிருடன் இருக்கும் பெண்கள் இது தொடர்பாக வாய் திறக்கவே பயப்படுகின்றார்கள். அதற்கு அவர்கள் சார்ந்த சமூக, கலாசார மதிப்பீடுகள் இடம் கொடுப்பதில்லை. அத்துடன் அத்தகைய பெண்களுக்குச் சட்டத்தின் முன் நீதி கிடைக்கும் என்று எந்த உத்தரவாதமும் இல்லாத மோசமான நிலையே இலங்கையில் காணப்படுகின்றது.

### எதிர்த்துப் போராட இடம் தராத பண்பாட்டுக் கலாசாரப் பெறுமானங்கள்

உலகில் எந்த இனப் பெண்களின் மீதும் பாலியல் வல்லுறவு நடவடிக்கைகள் இடம் பெறும் தருணங்களில் அந்நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்று திரண்டு குரல் எழுப்புகிறார்கள். எழுப்பும் வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் இலங்கைத் தமிழ் பெண்கள் மத்தியில் மட்டும் என்று சொல்வதை விடத் தென் - ஆசிய ஆண் ஆதிக்கக் கலாசாரத்தில் இவை தலைகீழாகவே நடைபெறுகின்றன. இங்கு மட்டுமே எப்போதும் பெண்களையே குறை காணுவதிலும், அவர்கள் மீதே பழியைச் சுமத்துவதிலும் ஆண் மேலாதிக்கச் சிந்தனை வெற்றி பெற்று விடுகிறது.

தென் - ஆசிய ஆண் ஆதிக்கக் கலாசாரத்தில், பெண்கள் ஒரு பக்கத்தில் கடவுள்களாகத் தூய்மைப்படுத்தப்படுகின்றார்கள். மற்றைய பக்கத்தில், மிக மோசமான அடக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். என்ன தான் பெண்களைக் கடவுளர்களாக்கினாலும், அப்படித் தூய்மைப்படுத்தப்பட்ட ஒரு சிலரைத் தவிர, மற்றைய 99.9 வீதப் பெண்களும் அடிமைகளாகத் தான் வாழ்கிறார்கள்.

இங்கு பெண்கள் தங்களுக்கான உரிமைகள் பற்றி வாய் திறந்து கதைப்பதே மோசமான செயலாகக் கருதப்படுகின்றது. அப்படிக் கதைக்கும் பெண்கள் பற்றி மோசமான அபிப்பிராயங்கள் உருவாக்கப்படுவதும், அவர்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்குவதும் நடைபெறுகிறது. அத்துடன் அந்தச் சமூகக் கட்டமைப்பில் உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் மிக மோசமான அபிப்பிராயம், நல்ல பெண்களுக்குத் ( ஆணின் விசுவாசமான அடிமைகள்) துன்பங்கள், பிரச்சினைகள் வருவதில்லை : எந்தப் பெண் நடத்தை சரியில்லாதவளோ அவளுக்கே பிரச்சினைகள் வரும் என்பதாகும்.

அதாவது, ஒரு பெண் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டால், அவள் நடத்தையில் ஏதோ பிரச்சினை இருக்க வேண்டும் என்பதே. இந்த மோசமான கருத்தியலே, பெண்களாலும் உள்வாங்கப்பட்டுத் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும் மூடிமறைக்கப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது.

ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டால், அவள் மீதான வெறித்தனமான வல்லுறவு நடவடிக்கை பற்றியோ, கொலை பற்றியோ எதிர்ப்புத் தெரிவிப்பதற்குப் பதிலாக, அப்பெண்ணின் பின்புலம் பற்றி ஆராய்வதும், அந்தப் பெண்ணின் நடத்தை பற்றிக் கேள்வியெழுப்புவதுமே அனேகமாக நடைபெறுகின்றன.

இந்த வகையில் கிருஷாந்தி குமார்சாமி வல்லுறவுக் கொலையிலும், கிருஷாந்தியின் நடத்தைகள் தொடர்பாகப் பல்வேறு அபிப்பிராயங்கள் ஊடகங்கள் மூலமாகவும், வாய்மொழி வதந்திகளாகவும் பரப்பப்பட்டன.

கிருஷாந்தி, புலிகளுடன் தொடர்புடையவர் என்று ஒரு பக்கப் பிரச்சாரமும், அவர் வாயாடி என்றும், ஆமிக்காரனுடன் வாயடித்தால் அவன் விடுவானா, நாங்கள் அல்லவா அடங்கிச் சமாளித்துப் போக வேண்டும், வாயடித்ததால் தான் பிரச்சினை வந்தது என்றும், ஒவ்வொருவராலும் முடிந்தளவு அவரின் புதைகுழி மீது சேறு அள்ளிப் பூசப்பட்டது.

கிருஷாந்தி சம்பவத்தில், கிருஷாந்தி வாயாடி என்றும், புலிகளுக்குச் சார்பானவர் என்றும் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, கோணேஸ்வரி சம்பவத்தில், கோணேஸ்வரி இரண்டு முறை திருமணம் செய்தவர் என்று சொல்லப்பட்டது. இதே போல் தற்போது வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கும் சாரதாம்பாள் விடயத்திலும் பலவிதமாக கதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இவர், இரண்டு முறை திருமணம் செய்தவர் என்றும், இரண்டாவது கணவனையும் பிரிந்து, சகோதரனுடன் வாழ்ந்து வந்ததாகவும், கடற்படை வீரர்களுக்கும் இவருக்கும் பாலியல் உறவு இருந்தது என்றும் எந்த ஆதாரங்களுமற்று அவரது தனிப்பட்ட நடத்தை குறித்து அவதூறுகளை பரப்பி வருகின்றன.

உண்மையில் இப்படியான ஊகங்களைத் தகவல் என்ற அடிப்படையில் மட்டும் அவை சொல்வதில்லை. இதனூடாக அப் பெண் வல்லுறவுக்கு உட்படுத்தப்படக் கூடியவள். அதனால் எதுவும் புதிதாகக் கெட்டுப் போய்விடவில்லை. அது எப்பவோ கெட்டு முடிந்த காரியம். நீ சும்மாயிரு என்று எடுத்தியம்புவது தான் அதன் உட்கிடக்கை.

இவை உண்மையிலேயே பிரச்சினையைத் திசை திருப்பி விடுகின்றன. ஏனெனில், 'தமிழ்க் கலாசாரத்தில்' ஒரு பெண், இரண்டாவது முறை திருமணம் முடிப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகக் கருதப்படுகிறது. 'தமிழ்க் கலாசாரம்' நினைக்கிற தூய்மைத்தனத்திற்குள், அது வராது. அப்படி திருமணம் முடித்தும், பிரிந்திருப்பது

> 'சாரதாம்பாளுக்கு கடற்படை வீரர் உட்பட பல ஆண்களுடன் தொடர்பிருக்கிறது'
>
> **நடுவு நிலைப் பத்திரிகை என்று சொல்லப்படும் டெய்லிமிரரின் கண்டுபிடிப்பு!**

நன்றி - நூலகத்திட்டம்



# மிருகங்களால் குதறப்பட்டதைக் காவோலையால் மூடி விடுவோம்!



என்பது பல்வேறு விதமான அபிப்பிராயங்களை உருவாக்கவே பயன்படுத்தப்படுகிறது.

ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு வகையில் இப்பிரச்சினையை வெளிக் கொணர்பவர்களாகவும், எதிர்ப்புத் தெரிவிப்பவர்களாகவும் இருந்தாலும் அவர்களே, இப்பிரச்சினை சமூகக் கண்ணோட்டத்தில் திசை திருப்பப்படுவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றார்கள்.

ஏன், இவர்களால் நேர்மைத் தன்மையுடன் இவ்விடயத்தை அணுக முடியாதுள்ளது என்பது கேள்விக்குரிய விடயமே.

தமிழ்ப் பெண்கள் மீதான வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பாக, அநேகமான சிங்களப் பத்திரிகைகள் அக்கறைப்படுவதேயில்லை. இச்சம்பவங்கள் பற்றி எழுதும் ஒரு சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் கூட இன்னும் ஒரு படி மேலே போய், அவர்கள் நடத்தை சரியில்லாதவர்கள், அவர்கள் இராணுவத்தினருடன் தொடர்புகளை வைத்திருப்பவர்கள் என்றும், புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்றும் இப் பெண்கள் மீது அபாண்டமாகப் பொய், புரட்டுகளைச் சுமத்தி , இப்படியான சம்பவங்கள் தொடர்பாகச் சாதாரண சிங்கள மக்களின் கவனத்தையும், எதிர்ப்பையும் திசை திருப்பி விடுகின்றன.

இதற்கு நல்ல உதாரணம். அண்மைய சாரதாம்பாள் படுகொலைச் சம்பவம். இவ்விடயத்தை எந்தவொரு சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளும் கண்டு கொள்ளவில்லை. கண்டுகொண்ட ஒரே ஒரு ஆங்கிலப் பத்திரிகையான டெய்லி மிரரும் சாரதாம்பாள் பல ஆண்களுடன் பாலியல் தொடர்பு கொண்டவர் அவர்களுள் கடற்படை வீரர்களும் அடங்குவர் என்று எழுதியிருந்தது.( பார்க்க ஜனவரி 31, 2000 டெய்லி மிரர்)

இச்செய்தி அதன் யாழ்ப்பாண செய்தியாளரின் பெயரின் கீழேயே பிரசுரமாகியிருந்தது. சரிநிகர் அச்செய்தியாளருடன் தொடர்பு கொண்ட போது, தான் சாரதாம்பாள் பற்றிய செய்தியையே அனுப்பியிருந்ததாகவும் ஆனால் மிரர் வெளியிட்ட சாரதாம்பாள் தொடர்பான செய்திக்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லை என்றும் தெரிவித்தார். இது குறித்து மிரர் ஆசிரியருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதியையும் அனுப்பி சரிநிகருக்கு அவர் அனுப்பி வைத்திருந்ததாக ஆசிரிய பீடத்தினர் தெரிவித்தனர்.

பத்திரிகைகளில் நடுநிலையானது எனப் பெயர் பெற்ற டெய்லிமிரரே இவ்வாறு திரிப்புச் செய்கின்றதென்றால் மற்றைய பத்திரிகைகள் பற்றி என்ன சொல்ல முடியும்?

இவ்விடயம் குறித்து சரிநிகர் ஆசிரிய பீடத்தினர் ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் தொடர்பு கொள்ளும் வரை பெரும்பாலான பெண்கள் அமைப்பினர் மிரரின் இத்திரிப்பு பற்றி அறிந்திருக்கவில்லை என்பதும் ஆசிரிய பீடத்தினரின் இன்னொரு தகவல். இதனால் தான் இப்பெண்கள் அமைப்புக்கள் கூட ஆண்மேலாதிக்கச் சிந்தனையால் பீடிக்கப்பட்டுள்ளன என்றும் இதனால் பெண்ணிலை உணர்திறன் அற்றவையாகவே அவை செயல்படுகிறது என்றும் கூற வேண்டியுள்ளது.

மாற்றுப் பத்திரிகைகளோ சிறு பெட்டிச் செய்தியுடன் தங்கள் கடமைகளை முடித்துக் கொள்கின்றன.

### ஆதரவு கொடுக்காத சமூக நிறுவனங்கள்

இதே சமூக கலாசார, ஆண் ஆதிக்கக் கருத்தியல்களே பெண்கள் அமைப்புக்கள் பலவற்றிலும், மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவற்றிலும் மேலாட்சி செலுத்துவதால் இவ்விடயத்தை அவர்களால் உணர்ந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

பெண்ணிய அமைப்புகளைச் சார்ந்தவர்களும், அவ்வமைப்புகளும் தங்களுக்குப் பிரச்சினைகள் இல்லாத விடயங்களோடு தங்கள் போராட்டங்களை நிறுத்தி விட முனைகின்றனரே தவிர, ஒரு பெண்ணுக்கான வாழ்வியல் பிரச்சினை தொடர்பாகப் போராட முயல்வதில்லை.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கூட, ஆரம்பத்தில் அச்சம்பவத்தை ஊடகவியலாளர்கள் தான் வெளிப்படுத்தினார்கள். இச்சம்பவம் வெளிக்கொணரப்பட்டு விமர்சனங்களும், எதிர்ப்புகளும் கிளம்பிய பின்னரே பெண்கள் அமைப்புகளும், மனித உரிமைகள் அமைப்புகளும் இவ்விடயத்தில் கரிசனை செலுத்தியதும், அறிக்கைகள் விட்டதும், வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தியதும் நடைபெற்றது.

இதே போல், கோணேஸ்வரி வழக்கும் இப்பெண்ணிய அமைப்புகளால் கவனத்தில் எடுக்கப்படாமலேயே இருந்தது.

முழு உலகத்தையுமே அதிர்வுக்குள்ளாக்கிய கோணேஸ்வரி சம்பவம் தொடர்பாகப் பெண்கள் அமைப்புகளும், மற்றைய மனித உரிமைகள் அமைப்புகளும் போராட முன்வரவில்லை. கடைசியில் இவ்வழக்குக் கூடச் சாட்சிகள் யாருமற்ற நிலையில் கைவிடப்பட்டது. இவ்வழக்குத் தொடர்பாக ஆரம்பத்தில் இருந்தே அக்கறை செலுத்தி வந்த மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த ஷெரின் சேவியர் " இந்தச் சம்பவம் புதைக்கப்படப் போகின்றது. இதற்கு ஒரு வகையில் பெண்கள் அமைப்புகளும் பொறுப்புச் சொல்லி ஆக வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இதேபோல், பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பல இடம்பெற்று இருந்தாலும், அண்மையில் இடம் பெற்றுப் பிரபலமடைந்தது சாரதாம்பாள் வல்லுறவுக் கொலைச் சம்பவம் ஆகும்.

உண்மையில், சாரதாம்பாள் என்ற பெண் கொடூரமாக, நான்கு மிருகங்களினால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரின் உடலெங்கும் குதறப்பட்டதன் அடையாளங்கள், உடலில் எங்கெங்கு காயங்கள் உள்ளன என்று பத்திரிகைகளில் விலாவாரியான செய்திகள். ஆனால் இவற்றை, இப்பெண்ணிய அமைப்புகளோ, மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகளோ கவனத்தில் கொள்ளவில்லை. இவ்விடயம் தொடர்பாக, அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில், பெண்கள் உரிமைகள் அமைப்புகளிடம் ஏன் நீங்கள் இவ்விடயம் தொடர்பாக அக்கறை எடுக்கவில்லை என்று கேட்டதற்கு - ஏன் எங்களைக் கேட்கிறீர்கள். நாங்கள் தான் செய்ய வேண்டுமென்றில்லைத் தானே? நீங்களே ஏதாவது செய்யலாம் அல்லவா எனத் திருப்பிக் கேட்கப்பட்டிருக்கிறது. நியாயம் தான் தனித்து பெண்கள் அமைப்புக்கள் மட்டும் எதுவும் செய்து விட முடியாது. ஆனால் தமிழ் சிவில் சமூகத்தின் குரலின் ஒரு பகுதியை புலிகளிடம் அடகு வைத்த தமிழ் புத்திசீவிகள் போல அதன் மறுபகுதிக் குரலை பொ.ஐ.மு. அரசிடம் அடகு வைத்த பெரும்பொறுப்பு இங்குள்ள மனித உரிமை அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், ஊடகத்துறையினர், மற்றும் புத்திசீவிகளுக்குண்டு அல்லவா? இந்த அடிப்படையிலாவது இச்சம்பவங்களுக்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்கிற உரிமை இதனால் நாளாந்தம் பாதிக்கப்படும் அப்பாவிகளுக்கு இருக்கிறதல்லவா?

ஒரு பெண் வாழ்வதற்கான சூழ்நிலை இல்லாத போது, அவளுக்கான மற்றைய சுதந்திரங்கள் தொடர்பான போராட்டங்கள் எவ்வளவுக்குப் பயனுறுதி மிக்கவை?

இலங்கையில் மனித உரிமைகள் பற்றிப் பேசும் நூற்றுக்கணக்கான அமைப்புகள் இருக்கின்றன. இவ் அமைப்புகளுக்கு எல்லாம், ஒரு தமிழ் பெண்ணின் மீதான வன்முறை மனித உரிமை மீறலாகத் தெரிவதில்லையா? ஆக மொத்தத்தில் இப்படியான படுகொலைகள் தொடர்பாக இவர்களின் நிலைப்பாடு தான் என்ன?

### அரசியல் கட்சிகளின் நிலை

இதே போன்று, இலங்கையில் இருக்கும் அரசியல் கட்சிகளும் தங்கள் பிழைப்புக்காகவும், இலாபங்களுக்காகவுமே அரசியல் நடாத்துகின்றன. பெரும்பான்மைக் கட்சிகள் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பாக அக்கறைப்பட மாட்டார்கள். ஏனெனில் ஒரு இராணுவ வீரனின் நடத்தை பற்றி விசாரணைக்குட்படுத்துவது, சிங்கள தேசத்திற்குச் செய்யும் துரோகமாகும். இவர்கள் தமிழ்ப் பெண்கள் பற்றி அக்கறைப்படுவார்கள் என்று நினைப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை.

ஆனால் தமிழ் மக்களுக்காக, அவர்களின் கண்ணீர் துடைப்பதற்காகவே சனநாயக வழியில் போராடிக் கொண்டிருப்பதாகக் கூறிப் பிழைப்பு நடாத்தும் தமிழ்க் கட்சிகள், தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பாக, ஒரு அறிக்கை விடுவதுடன் தங்கள், தங்களது அஹிம்சைப் போராட்டத்தை நிறுத்தி விடுகிறார்கள். அநேகமான நேரங்களில், அது கூட இல்லாமல் கண்மூடிப் பேரினவாதத்தின் நக்கிப் பிழைக்கும் நாய்களாகத் தங்கள் விசுவாசத்தைக் காட்டிக் கொள்கின்றார்கள். இவர்களின் தமிழ் மக்கள் மீதான அக்கறை இவ்வளவு தான்.

என்ன தான் வாய் கிழியக் கத்திக் கொண்டாலும், நேர்மையாகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க இவர்கள் தயாரில்லை என்பது தெரிந்த விடயமே. அதையும் மீறி ஒரு உத்வேகத்தில் நடவடிக்கை எடுக்கவும் முடியாது. ஏனெனில் இந்த அமைப்புகளால் புங்குடுதீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்று இந்தக் கட்சிகள் அராஜக அரசியல் நடாத்தும் இடங்களில், இவர்களால் பயமுறுத்தி, வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டவர்களதும், அதன் போது இரகசியமாகக் கொலை செய்யப்பட்டவர்களும், வெளித்தெரியாமல், பயமுறுத்தப்பட்டும், மறைக்கப்பட்டும் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகக் கிளறப்பட்டால் இவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்?

இவர்களின் பேய் முகங்களை அம்பலப்படுத்தப் பத்திரிகைகள் போதாது.

### தென்னிலங்கைப் புத்திஜீவிகளும் தமிழ்ப் பெண்களும்

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கொலைகள் பற்றி எழுதிக் கிழித்தும், போராட்டம் நடாத்தியும், மேடைகள் போட்டுக் கத்தியும் திரிந்த தென்னிலங்கை மனித உரிமையாளர்கள், பெண்ணுரிமையாளர்கள், சனநாயகவாதிகள், இடதுசாரிகள் இப்போது எங்கே போனார்கள்? ஆக மொத்தத்தில் என்ன பெயரில் யுத்தம் நடக்கின்றது என்பதிலும், யார் நடாத்துகின்றார்கள் என்பதிலும் தான் இவர்களுக்குப் பிரச்சினைகள் இருந்ததே தவிர, தமிழ் மக்களின் உரிமைகள் மீதான அக்கறையாலல்ல.

ஐ. தே. க. வின் இனவாதம் பிடிக்கவில்லை. அதன் இனவாத யுத்தம் பிடிக்கவில்லை. அது வார்த்தைகளில் சொல்லி விட முடியாத கொடூரம்.

பொ.ஐ.முவின் இன ஒழிப்புப் பிடித்துள்ளது. அதற்கான சமாதான முகமூடியை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஐ. தே. கவின் பட்டலந்த பற்றிப் பேசும் இவர்கள், செம்மணி தொடங்கி, இன்னும் தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் படுகுழிகளும், அரச சிறைச்சாலைகளே கொலைக்களங்களாக மாறியுள்ளதையும் பற்றி அதிகம் பேசுவதில்லை.

அதேபோல், ஒரு பெண்ணின் மீதான வல்லுறவுக் கொலை இவர்கள் பேசுகின்ற உரிமைகளுக்குள்ளும், புத்திஜீவித்தனத்திற்குள்ளும் வராதா? அல்லது தமிழ் பெண்ணின் மீதான வல்லுறவுக் கொலை உள்ளடங்காதா?

இங்கு இன்னுமொரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். தென்னிலங்கை மனித உரிமைவாதிகளும், புத்திஜீவிகளும் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு எதிரான இப்படியான படுகொலைகளைத் தாம் எதிர்த்துப் போராடுவது, புலிகளுக்கு அல்லது தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவு தெரிவிப்பதையோ அல்லது அரச சமாதான யுத்தத்தைக் காட்டிக் கொடுப்பது போன்றோ அமைந்து விடும் என்று உள்ளூர பயப்படுகிறார்கள்.

இவர்களைப் பொறுத்தவரை, புலிகளுக்குச் சார்பாகவோ, தமிழ்த் தேசியத்தை நியாயப்படுத்தும் வகையிலோ எதுவும் பேசிவிடாது இருந்தால் போதுமானது. தமிழ் மக்கள் செத்தால் என்ன. ஒரு தமிழ்ப் பெண்ணை எத்தனை நாய்கள் குதறிப் போட்டால் என்ன? அவை இவர்களுக்குத் தேவை அற்றவை.

பெண்ணுரிமை அல்லது மனித உரிமைகள் தொடர்பான தெளிவான கண்ணோட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது, யாரால் செய்யப்பட்டாலும் பொது நோக்கில் எதிர்க்கப்பட வேண்டியது. இந்தத் தளத்தில் நின்று கூடத் தங்களை இணைத்துப் போராடத் தயாராக இல்லாத இவர்கள், பெண்களுக்கு எதைத் தான் பெரிதாகப் பெற்றுத் தந்து விடப் போகின்றார்கள் என்று எழுகிற கேள்விக்கு யார் பதிலளிப்பது?

இன்னொரு புறத்தில், மக்கள் போராட்டம் என்பது தமிழ் இயக்கங்களின் வளர்ச்சியின் பின் நசுக்கப்பட்ட நிலையில், எல்லாவற்றையும் நம்பி ஏமாந்து போன தமிழ் மக்கள், மீண்டும் தங்கள் கைகளில் அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை எடுத்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

புங்குடுதீவு சாரதாம்பாள் கொலையில், மக்கள் தாமாகவே போராட்டம் நடாத்தியுள்ளார்கள். இதன் பின்பே, இது வெளி உலகின் கண்களுக்குத் தெரிய வந்தது. இதன் பின்பு யாழ்ப்பாணத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இக்கண்டனக் கூட்டத்தை நடாத்துவதற்காக மண்டபம் கேட்கப்பட்ட போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலம் பொருந்திய, தங்கமான பெண்ணொருவர் கெட்டுப் போனவர்களுக்காக நடாத்தப்படுகின்ற கூட்டத்திற்கு இடம் தரமுடியாது என்று தெரிவித்திருக்கிறார். பின்னர் இன்னொரு மண்டபத்தில் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று.

இப்படியான மனோபாவங்களும், எதிர்த்துப் போராடுவதற்குத் தயாரில்லாத நிலையும் சிங்கள இராணுவத்திற்குப் பெரிதும் அத்துமீறல்களுக்கான தாராள இடத்தைக் கொடுக்கின்றன.

இக்கொலைச் சம்பவங்களில் இடம் பெற்ற விசாரணைகள் கூட வெறும் கண் துடைப்பிற்கானது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நானும் உங்களைப் போல் ஓர் தாய் என்று, நீலிக் கண்ணீர் வடிக்கும் அம்மையார் கூட, ஒரு தாய், நாலு மிருகங்களால் வதைக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கண்மூடி ரசிக்கின்றார் போலும் !

ஆக மொத்தத்தில், எல்லாரும் தப்பித்துக் கொள்கிறார்கள். மிருகங்களால் குதறப்பட்டதைக் காவோலையால் மூடி விடுவோம்.

தூய்மையின் பெயராலும், எங்கே தமிழ்த் தேசியத்திற்குத் துணை போய்விடுவோமோ என்கிற பயத்தினாலும் புதைகுழிகளை மூடுவோம்.

சுடு காட்டில் ஐக்கியம், ஆதிக்க வெறி பிடித்த மிருக மூளைகளால் செதுக்கப்படட்டும்.

**- ரேவ்**

நன்றி - நூலகத்திட்டம்



# பெண் : விடுதலையும் தேசியமும்

## சில அவதானக் குறிப்புகள்

தினமுரசு பத்திரிகையின் ஆசிரியரும் முன்னை நாள் E. P. R. L. F போராளியும், பின்னை நாள் E. P. D. P. பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் என அழைக்கப்படும் அற்புதராசா நடராசா தனது மரணத்திற்கு முன்னர் ஒக். 31 - நவ. 06. 1999 இல் எழுதிய கட்டுரை ஒன்று ஈழ விடுதலைப் போராட்டத்தில் உரிமை சம்பந்தமான சில விடயங்களை வெளிக் கொணர்ந்திருந்தது. அந்தக் கட்டுரை தொடர்பாகவும், விடுதலைப் போராட்டமும் பெண் விடுதலை தொடர்பாகவும் சில குறிப்புகள் இவை.

ரமேஷின் கட்டுரையின்படி, ஆரம்பத்தில் பெண்கள் தமிழரசுக் கட்சியினாலும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினாலும் நடாத்தப்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டாலும் கூட அவர்கள் மத்தியில் பெண்-விடுதலைக்கான கருத்துகள் எள்ளளவு கூட முன்வைக்கப்படவில்லை. முக்கியமாகத் தமிழரசுக் கட்சி நடாத்திய சத்தியாக்கிரகத்தில், வட, கிழக்கு மக்களின் பூரணமான பங்கு பற்றலில் பெண்களின் பாத்திரம் மிகவும் முக்கியமானதொன்றாகும். ஆனால் அன்றும் கூட அவர்கள் தமிழரசுக் கட்சியால் பாவிக்கப்பட்டார்களே தவிர அறிவூட்டப்படவோ அல்லது தங்களது உரிமைகளுக்காகப் போராட வழிகாட்டப்படவோ இல்லை. அன்றைய தேர்தல் பிரச்சார மேடையில் ஒரு முக்கிய பேச்சாளராகத் திகழ்ந்த மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தமிழ்க் குறுந்-தேசியவாத அரசியலை முதன்மைப்படுத்தும் பாவச் செயலில் முன்தள்ளப்பட்ட போதும், கடைசி வரை ஒருபெண் பாராளுமன்றப் பிரதிநிதிகூடத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உருவாகவில்லை.

அதன் பின்னரும் கூடத் தமிழ் மாணவர்களின் தரப்படுத்தலுக்கு எதிரான (ஆனால் எந்தவித குறிப்பிட்ட திட்டமோ, நோக்கமோ அற்ற) தமிழ் மாணவர் பேரவையின் போராட்டத்தில் பெண்கள் கலந்து கொண்ட போதும், அச்செயல்பாட்டில் எவ்வித பங்களிப்பையும் நல்கவில்லை அல்லது அதற்குரிய அரசியல் உந்துதலைப் பெற்றிருக்கவில்லை. தரப்படுத்தலுக்கு எதிரான தமிழ் மாணவர் பேரவையின் எழுச்சியோடு தான், தமிழ் இளைஞர்கள் தனி நாடு என்ற கோஷத்தின் கீழ் ஏதோ தங்கள் அறிவுக்கு எட்டிய வகையில் சிந்திக்கவும், செயல்படவும் ஆரம்பித்தார்கள். அன்று இந்தச் சூழலில் பெண்களின் பங்களிப்பென்று சொல்வதற்கு எதுவுமில்லை. அவ்வளவிற்குப் பெண்கள் மேலான ஒடுக்குமுறையும், சமூகத்தின் கட்டுப் பெட்டித்தனமும் பெண்களின் உறைநிலைக்குக் காரணமாக இருந்தன. ஆனால், இதே காலகட்டத்தில், சாதி என்னும் அரக்கனுக்கு எதிராகக் கம்யூனிஸ்டுக்களின் தலைமையில் கிளர்ந்தெழுந்து, அதை அன்றே ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்து ஒடுக்கப்பட்ட மக்கள் வீரம் செறிந்த போராட்டத்தை நடாத்திய போது பெண்களின் பங்கும் அதில் கணிசமாக இருந்தது. இருந்த போதிலும் அப்போராட்டத்திற்கு ஊடாகப் பெண்கள் தலைமைத்துவம் வளர்ந்து வந்ததா என்பது தெரியவில்லை. அன்றும் 'ஆண்ட பரம்பரை', சாதிப் போராட்டத்தை, வர்க்க அடிப்படையில் சரியான திசை வழியில் கையாளாததால் அதனூடாக வந்த பல போராளிகள் சீரழிந்து போய் இன்று, ஆண்ட பரம்பரையின் வாலாக மாறி நிற்பதை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

பின்னர் இளைஞர் இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்துடன் முக்கியமாக E. P. R. L. F., P. L. O. T. E. போன்றவற்றில் ஆரம்பத்திலும், ஏனைய இயக்கங்களில் பின்னரும் பெண்கள் சேர்க்கப்பட்ட போதும் கூட, அவர்கள் அரசியல் மயப்படுத்தப்படவோ, பெண் உரிமைகளுக்காகப் போராடவோ பெரிய அளவில் தூண்டப்படவில்லை, ஆனாலும் E. P. R. L. F., P. L. O. T. E. போன்றன ஏதோ ஓரளவு அரசியல் ரீதியில் . செயல்பட்டன என்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக E. P. R. L. F. இன் மக்கள் விடுதலைப் படையில் பெண்கள் சேர்க்கப்பட்டுப் பயிற்றப்பட்டார்கள். E. P. R. L. F. இன் காரைநகர் கடற்படைத் தளத் தாக்குதலில் முதல் ஒரு பெண் போராளிகளப் பலியானார். இதை ரமேஷ் தெரிந்திருந்தும் கூடத் தனது கட்டுரையில் ஏனோ அதைத் தவிர்த்துக் கொண்டார் அல்லது மறைத்து விட்டார்.




ரமேஷின் அதே கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், அன்றைய காலகட்டத்தில் பெண்கள் தொடர்பான படு பிற்போக்கான கருத்துக்களுடன் பெண்கள் கட்டைப் பாவாடை போடக் கூடாது, சைக்கிள் ஓடக் கூடாது என்பன போன்ற வசனங்கள் நிறைந்த பிரசுரம் ஒன்று வெளியாகியது. அப்பிரசுரம் சம்பந்தமாக அன்றே பலரிடம் அதற்கும் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாமென்ற சந்தேகம் நிலவியது. ஆனால் ரமேஷ் தனது கட்டுரையில், அப்பிரசும் சம்பந்தமாகப் பின்வரும் செய்தியைக் கூறியுள்ளார். 'விடுதலைப் புலிகள் அமைப்பினர் அக் கட்டத்தில், பெண்களை இணைத்துக் கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. சுதந்திரப் பறவைகள் என்னும் அமைப்பை உருவாக்கிய போதும் அந்த அமைப்புப் பலம் மிக்கதாக இருக்கவில்லை. பெண்கள் தொடர்பான பிற்போக்கான கருத்தோட்டங்களே அப்போது புலிகளது பிரமுகர்களிடம் காணப்பட்டது. 'அப் பிரசுரத்தை வெளியிட்டதில், புலிகளது யாழ். மாவட்ட முக்கியஸ்தர்களுக்குப் பங்கிருந்தது, குறிப்பாகத் திலீபனிற்குத் தொடர்பிருந்தது.'



ரமேஷின் இவ்வளவு திட்டவட்டமான செய்தியை எவ்வளவிற்கு நாங்கள் நம்புகின்றோமோ இல்லையோ, தினமுரசின் மிகப் பெரும்பான்மையான வாசகர்கள் நம்புவார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் தினமுரசில் வெளிவரும் சில துல்லியமான உளவுச் செய்திகள் முதல், மிகப் பழமை வாய்ந்த கால கட்டச் செய்திகள் வரை உண்மையானவை என்ற கருத்து வலுவாக இருக்கிறது.

அன்று E. P. R. L. F. ஆல் செந்தணலும், T. E. L. O.ஆலும் P. L. O. T. E., L. T. T. E., N. L. F. T. போன்றவற்றாலும் வெளியிடப்பட்ட பெண்களுக்கான பத்திரிகைகள் பெரும்பாலும், ஆண்களால் எழுதப்பட்டே பிரசுரிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியில் விடுதலைப் புலிகள் T. E. L. O.வை அழித்ததையும், ஏன் தெரு ஓரங்களில் அவ்வியக்கப் போராளிகளைத் தீயிட்டு அழித்ததையும், ஏனைய இயக்கங்கள் யாவும் தடை செய்யப்பட்டு, மாற்றுக் கருத்துக்கள் மறுக்கப்பட்டு, மக்களின் ஜனநாயக, சுதந்திர உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டதையும் தொடர்ந்து, இளைஞர்கள் - முக்கியமாக ஆண்கள் - இயக்கத்தில் இணைவது குறைந்ததுடன், பலரும் புலம் பெயர்கின்ற நிலை தோன்றியது. இதன் விளைவாக ஏற்பட்ட ஆள் பற்றாக்குறையை நிரப்ப வேண்டிய தேவை 'ஆண்ட பரம்பரைக்கு' ஏற்பட்ட போது, அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ பெண்களையும் ஆயுத பாணிகளாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ரமேஷ் குறிப்பிடுவது போல், ஏனைய இயக்கங்கள் ஒரு வேலைத் திட்டமில்லாமல் பெண்களை அமைப்பாக்கியது போல் அல்லாமல், புலிகள் பெண்களையும் இராணுவ ரீதியாகப் பயிற்றுவித்தார்கள்.

ஆரம்பத்தில் மத்தியதர வர்க்க மேட்டுக் குடிப் பெண்களே சுதந்திரப் பறவைகள் போன்ற அமைப்பில் ஈடுபட்டாலும், அவர்கள் கால ஓட்டத்தில் செயல்பாடுகளிலிருந்தும், அக முரண்பாடுகளாலும் வெளியேறிய போதும், இவர்களால் கவர்ந்திழுக்கப்பட்ட சாதாரண, ஏழைப் பெண்களுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இதனால், பெண்கள் சில சலுகைகளைப் பெற்றிருக்கலாம். உதாரணமாகச் சீதன ஒழிப்புச் சட்ட மூலம் கூடப் புலிகளின் யாழ். இராச்சியத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது. ஆனால் மக்கள் எந்தளவிற்கு அரசியல் அறிவூட்டப்பட்டார்கள் என்றால், அதற்கான பதில் இல்லையென்றே கூற வேண்டும். புலம் பெயர்ந்த, முன்னேறிய நாடுகளில் கூடச் சீதனமும், சாமத்தியச் சடங்கும் தமிழ்ச் சமூகத்தால் கடந்து வரமுடியாத பெருந் தடைக் கற்களாகத் தொடர்ந்தும் உள்ளன. இதில் பகிடி என்னவென்றால், சீதன ஒழிப்புச் சட்டத்தின் நிழலில் தான், சீதனப் பணத்தில் கப்பம் வாங்கிய கதையும் நடைபெற்றது என்பது தான். அன்று பெண்கள் சைக்கிள் ஓடுவதைக் கூடப் பாலியல் வக்கிரத்தோடு கடிந்து கொண்ட கட்டுப் பெட்டிச் சமூகம் இன்று, அதே பெண்கள், கனரக வாகனங்களை ஓட்டுவதைக் கூடச் சகித்துக் கொண்டு தருணம் பார்த்துக் காத்திருக்கின்றது. இங்கே தான் பெண் போராளிகள், தமது அரசியல் உரிமைகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சாதாரண ஏழைக் குடும்பமொன்றிலிருந்து போராடப் புறப்பட்ட ஒரு பெண் போராளி, தனியே, தனி நாட்டிற்காக மாத்திரம் தன்னைத் தியாகம் செய்ய எண்ணுவதில்லை. ஜனநாயகம், சுதந்திரம், சமூக முன்னேற்றம் என்பவையும் தான் அவரது குறிக்கோளாக இருக்கும். இதற்கு உதாரணமாகக் கரும் புலி அங்கயற்கண்ணி, ஸ்ரீ லங்காக் கடற் படைக் கப்பலைத் தாக்கி அழிக்கும் முன்னர் தனது நண்பர்களுக்குப் பின்வருமாறு எழுதுகின்றாள் : நான் மரணிக்கும் காலம், நல்லூர் கோவில் திருவிழாவாக இருக்க வேண்டும். ஏனெனில் அப்போது தான் எனது தாயிடம் கோவில் திரு விழாவில் கடலை விற்ற பணம் இருக்கும். அப்போது தான் எனது தாயாரால் எனதுதோழிகளுக்கு என்னுடைய இறப்பை நினைவு கூர்ந்து, உணவு பரிமாற முடியும். அத்துடன், அவர் தனது தோழிகளைத் தன்னுடைய சகோதரர்களைக் கல்வி கற்று முன்னேறும்படி ஊக்குவிக்குமாறு கேட்டுள்ளார். இது உண்மையில் என் நெஞ்சைத் தொட்ட ஒரு நிகழ்வாகும். இந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையில் பார்த்ததிலிருந்து, என்னை என்றும் உறுத்திக் கொண்டிருக்கும் மிகப் பெரிய கேள்வி இது தான்: இந்தப் போராட்டத்தினூடாகத் தங்களையே அர்ப்பணித்த அங்கையற்கண்ணி போன்றவர்களின் கனவான சமூக மாற்றம் ஏற்படுமா என்பதே. ஆனால், நடைமுறை அதிலும் குறிப்பாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் போராட்டத்தைக் காசு பண்ணும் சிறு வியாபாரிகள் கூட்டமும், அதற்கும் மேலாகப் போராட்ட ஆதரவு ஸ்தாபனங்களாகத் தங்களை விளம்பரப் படுத்திக் கொண்டு, பெண்களின் உரிமைகளையே அவமதிக்கும் செயல்களில் ஈடுபடும் அமைப்புகளையும் பற்றிப் போராடும் பெண் போராளிகள் அறிவார்களா?

கனடாவின் உலகத்தமிழர் இயக்க மகளிர் அமைப்பினால் வெளியிடப்பட்ட, தமிழீழ மகளீர் தினம் 1999 இற்கான பிரசுரத்தின் பின்பக்கத்தில், ஸ்ரீ அம்பாள், ஏ. ஜீ. எம்போறியம் என்ற வியாபார ஸ்தாபனங்களின் விளம்பரத்தில் இரு பெண்களின்




கவர்ச்சிப் படங்களே கண்ணைக் குத்துகின்றன. இதற்கும், பெண்களின் உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் என்ன தொடர்பு? உலகத் தமிழர் இயக்க மகளிர் அமைப்பின், அரசியல் சித்தாந்தம் தான் என்ன? பல சந்தர்ப்பங்களில் ஆண் போராளிகளை விடவும் உறுதியாகவும், தீவிரமாகவும் பெண் போராளிகள் போராடுவதைப் பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம். நான் ஒரு முறை " எரித்திரியப் " பெண் போராளி ஒருவரைச் சந்திக்க நேர்ந்த போது, அவருடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன்.

சில வேளைகளில், எதிரிக்கு, எதிரான போரில் ஆண் போராளிகளின் கைகள் நடுங்கும், ஆனால் பெண்களோ மிகவும் உறுதியாக இருப்பார்கள் என்றார் அவர்.

இது எங்களுக்கு என்ன செய்தியைக் கூறுகின்றதென்றால், பெண்களே ஒரு பின் தங்கிய சமூகத்தில் மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்டவர்கள். எனவே அவர்களிடம் மற்றவர்களிலும் பார்க்கத் துணிவும் ,ஆவேஷமும், வீரமும் இருக்கும் எனக் கூற முடியும். எமது போராட்டத்தில் கூடத் தமிழ்ப் பெண் என்ற வகையில் பெண்கள் சிங்களப் பெருந் தேசியவாத வெறியுடனும், ஆணாதிக்க வெறியுடனும் இராணுவத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுள்ளார்கள். இத்தற்கு உதாரணமாகக் கிருஷாந்தி, கோணேஸ்வரி, கமாலிட்டா, சாரதாம்பாள், ரஜனி வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டவர்கள், - மணலாற்றுப் போரில் இறந்த பெண் போராளிகளின் உடல்களை நிர்வாணமாக்கியது போன்ற பல சம்பவங்களைக் கூறமுடியும்.


பெண் விடுதலையும், தேசியமும் தொடர்பாக எனது கருத்துக்களைப் பதிவு செய்வதே எனது நோக்கம். இவை விவாதத்துக்கு உட்படுத்தப்படுவதை வரவேற்கிறேன்.

- அக்கினிச் செல்வன் -

- கனடா

நன்றி - நூலகத்திட்டம்





# மரண தண்டனை: ஓரடி தாண்டினால் பாசிசம்!

'மரண தண்டனை' என்ற புனிதப்படுத்தப்பட்ட பெயரால் நடைபெறும் மனிதக் கொலைகள் எம்மத்தியில் குறைந்தளவான கவனத்திற்கோ, சலனத்திற்கோ உட்பட்டவையாக இல்லை. பொதுக்கருத்தியலில் நன்கு நியாயப்படுத்தப்பட்டும், ஆழ நிறுவப்பட்டும் உள்ள மரண தண்டனையின் முகம், கேள்விகளுக்கு உட்படுத்தப்பட முடியாத அமைதியான மிருதுவான முகமாகவே காட்சியளிக்கும். உண்மையில் இதன் பின்னாலுள்ள வக்கிரமும், வன்முறையும், அநீதியும் ஒட்டு மொத்தமாகவே மனித குலத்திற்கு அதிர்ச்சியும், வெட்கமும் அளிக்கக் கூடியவை.

இத்தகைய ஒரு சூழல் தமிழில் இப்போது தோன்றியுள்ளது. மரண தண்டனை பற்றியும் அதன் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, உளவியல் பின்புலம் பற்றியும் விரிவான வாதப் பிரதிவாதங்கள் தமிழகத்தில் எழுத்தாளர்கள், படைப்பாளிகளிடையேயும், சிற்றிதழ்ச் சூழலிலும் முன் வைக்கப்படுகின்றன.

ராஜீவ் கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நால்வருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராகவும், அவர்களுக்கு கருணை காட்டும்படியும் பல்வேறு மட்டங்களிலிருந்து எழுப்பப்பட்ட குரல்கள் ஒன்றிணைந்து பொதுவான மரண தண்டனைக்கு எதிரான குரலாக இயக்கமாகப் பரிணமித்துள்ளது.

மரண தண்டனைக்கு உரிய குற்றமென வரையறுக்கப்பட்டுள்ள குற்றம், சட்டம், நீதி என்பவற்றின் நியாயத்தன்மை, நீதியமைப்பின் நம்பகத்தன்மை என்பன கடுமையான விமர்சனத்திற்கும், கேள்விகளுக்கும் உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்த அடிப்படையிலே காலச்சுவடு (ஜனவரி- மார்ச், 2000) படைப்பாளிகள், சிந்தனையாளர்கள் போன்றோரது கருத்துக்களைக் கொண்ட சிறப்புப் பகுதியை வெளியிட்டுள்ளது. சென்னையில் இது பற்றி ஆராயவென படைப்பாளிகள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் இணைந்து மாநாடொன்றைக் கூட்டி ஆராய்ந்துள்ளனர். அவற்றிலிருந்து பெற்ற தகவல்கள், கருத்துக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

மரண தண்டனை தொடர்பாக சேரன் முன்வைக்கும் ஒரு புள்ளிவிரபம் திடுக்கிட வைக்கின்றது. "மரண தண்டனை வழங்கப்படுவதும், அத்தண்டனை வழக்கமாக இருப்பதுவும் உலகில் தொண்ணூறு நாடுகளுக்கு பொதுவாக உள்ளது. சென்ற வருடம் 1625 பேர் மரண தண்டனை மூலம் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சராசரியாக ஒரு நுறுக்கு நான்கு பேர் மரண தண்டனையின் பெயரால் பொது அமைதியின் பெயரால், நீதியின் பெயரால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மரண தண்டனை குறித்து ஏன் அக்கறை கொள்ள வேண்டும் என்பதற்கு இதுவே போதுமான காரணமாகும்.

நடைமுறையில் மரண தண்டனைக்கென வரையறுக்கப்பட்டுள்ள குற்றங்களுள் பிரதானமானவை, கொலையும் பாலியல் வல்லுறவும். கொலைக் குற்றத்தில் ஈடுபட்டார் என நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு நீதிபதி விரும்பும் பட்சத்தில் மரண தண்டனை வழங்க முடியும். இங்கே கொலை என்ற குற்றத்தை தீர்மானிப்பதில் அதிகாரத்தின் தொழிற்பாடு தெளிவாகத் தெரிகிறது. நீதிமன்றங்களின் அதிகாரத்தினால் செய்யப்படும் கொலைகள் தண்டனைகளாகவும், வெளியே செய்யப்படும் கொலைகள் குற்றமாகவும் கணிக்கப்படுகின்றன.

இவ்வாறே மற்றைய குற்றமான பாலியல் வல்லுறவும் சில முரண்களைக் கொண்டுள்ளது. பாலியல் வல்லுறவு என்ற குற்றம் பலவாறாக விளங்கப்படலாம். பாலியல் வல்லுறவுக்கான தண்டனை மரண தண்டனையே என வாதிடுவோர் உண்மையில் தமக்குள் கருத்தொருமைப்பட்டவர்கள் அல்லர். ஒரு சமூகத்தின்/ குடும்பத்தின் கலாசார அடையாளமான, சொத்தான பெண் மீதான அத்துமீறல் அச்சமூகத்தின்/ குடும்பத்தின் மீதான அத்துமீறலாகக் கொண்டு சுத்தமான ஆணாதிக்க சிந்தனைத் தளத்தில் நின்று பாலியல் வல்லுறவுக்கு மரண தண்டனை கோருபவர்கள் ஒரு சாரார். மறுசாராரோ பாலியல் வல்லுறவு பெண்ணின் உடல் மீதான ஆன்மா, மீதான அத்துமீறலாகக் கொண்டு அதற்கெதிராக மரண தண்டனையை கோருபவர்கள்.



எவ்வாறெனினும் இரு சாராரினதும் இறுதி இலக்கு குற்றவாளி மீதான மரண தண்டனையே.

இவ்வாறு குற்றங்களே ஒரு திட்டமான வரையறுப்போடு இல்லாத போது இவற்றுக்கான தண்டனையாக, நிவாரணியாக குற்றவாளியின் உயிர்வாழும் உரிமையைப் பறிக்கும் மரண தண்டனை ஒரேயொரு தீர்வாக முன்வைக்கப்படுவதில் எவ்வித நியாயமும் இல்லை.

மரண தண்டனையை ஆதரிக்கும் அரசுகளாலும், அதிகார சக்திகளாலும் இத்தண்டனையின் நோக்கம், தேவை பற்றி அளிக்கப்படும் விளக்கங்கள் மிகவும் மேலெழுந்தவாரியானவை. இலகுவில் நம்பத்தகுந்தவையாகவும் வெளியே நியாய முலாம் பூசப்பட்டவையாகவுமே அவை காணப்படும். மோசமான கொடூரமான குற்றங்களுக்கான தண்டனையும் அவ்வாறே அமைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இதன்மூலம் மக்களிடையே தண்டனை பற்றிய திகிலை உண்டு பண்ணி குற்றங்களை தடுக்க முடியும் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது.

1988,1996 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைக் கொண்டு இவ்வாதம் விஞ்ஞானபூர்வமான உண்மைகளையோ ஆய்வு ரீதியான உண்மைகளையோ அடிப்படையாக கொண்டவையல்ல என சேரன் மறுக்கிறார். உண்மையில் அவை பழிக்குப் பழி வாங்கல் வஞ்சந்தீர்த்தல் போன்ற நோக்கங்களையே கொண்டுள்ளன. கொலை ஒன்றின் நிகழ்வு அடிப்படையான மூன்று வகைகளில் உள்ளடக்கப்படுகிறது.

1. ஆத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டு நிதானம் இழந்த நிலையில் செய்யப்படுபவை.
2. சட்டத்தின் பிடியில் சிக்கமாட்டோம் என்ற முழு நம்பிக்கையுடன் எந்தத் தண்டனையும் கிடைக்காத வகையில் மிக நேர்த்தியாக திட்டமிட்டு செய்யப்படுதல்.
3. தான் ஏற்றுக் கொண்ட - கொள்கையை இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எதுபற்றியும் கவலைப்படாமல் தியாகத்துடன் அர்ப்பணிப்புடன் செய்யப்படுபவை.

இவ்வகையான மூன்று நிலைகளிலும் மேற்சொன்ன "திகில்" எந்த விதமான தாக்கத்தையும் செலுத்தப் போவதில்லை.

ஆனால், இவ்வாறான 'திகில்' உருவாக்கப்படுவதன் நோக்கம் வெறுமனே பொது அமைதியோ, குற்றங்களைக் குறைத்தலோ அல்ல. அரசிற்கும், ஆளும் வர்க்கத்தின் இருப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாமல் காக்கும் ஒரு வகை கேடயமாகவே 'திகில்' பயன்படுத்த முயற்சிக்கப்படுகிறது. இந்நிலையை, ராஜீவ் காந்தி கொலை வழக்கின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பெருமாள் முருகன் இவ்வாறு விளக்குகிறார். "... அரசுக்கு அரசு இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது' என்று மக்களுக்கு காட்டி தன் மீதான நம்பிக்கையையும், அச்சத்தையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது"


ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்டது போல நீதிமன்றங்களின் அதிகாரத்தினால் நடாத்தப்படும் கொலைகள் தண்டனைகளாக அமைகின்றன. மறுபுறத்தில் அதிகார வர்க்கத்தின் அதிகாரத்தினாலும் அவர்களின் இருப்புக்காகவும் நிகழ்த்தப்படும் கொலைகளும் அவ்வாறே இரட்சிக்கப்படுகின்றது. அவற்றை மேற்கொள்பவர்களுக்கு எவ்வித சிக்கலும் இருப்பதில்லை. இவ்வாறான நீதியின் அநியாய தன்மை பற்றி ரவிக்குமார் இவ்வாறு கேள்வி எழுப்புகிறார். "தலித்தின் கொலையை நியாயப்படுத்த வேண்டிய தேவை கூட எழுவதில்லை. இந்த சமூகத்தின் அங்கமாக அவர்கள் அங்கீகரிக்கப்படாத நிலையில் அந்த சாவுக்கு ஒரு மதிப்பும் இருப்பதில்லை. ஒரு நாயின் மரணம் கூட துர்நாற்றத்தால் சூழலை பாதிக்கின்றது. ஆனால், ஒரு தலித்தின் மரணம் அதைக் கூட செய்வதில்லை. இதை எவ்வாறு புரிந்து கொள்வது?"

இந்நிலையிலே, ஒட்டு மொத்தமாக் மரண தண்டனையின் 'சமூகத் தேவையை' எவ்வாறு நியாயப்படுத்துவது? அதை எவ்வாறு புரிந்து கொள்வது?

அனைத்தையும் கடந்து குற்றங்களுக்கான தண்டனையாக மரண தண்டனையை ஏற்றுக்கொண்டாலும், மேலும் பல பிரச்சினைகள் வந்து நிற்கின்றன. முதன்மையானது நீதியமைப்பின் நம்பகத் தன்மை.

நீதியமைப்பின் நம்பகத்தன்மையை சிதைக்கும் காரணிகளில், நீதியமைப்பின் மீதான அரசு உள்ளிட்ட வெளித்தலையீடுகளும் நிர்ப்பந்தங்களும், நீதிபதிகளின் அரசியற் சார்புநிலை, நீதிபதிகளின் மனநிலை என்பன சில. இவை வழக்குகளில், தீர்ப்புகளில் செலுத்தும் செல்வாக்கு பாரதுரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வகையான சூழ்நிலைகளில் குற்றமற்றவர்களையே மரண தண்டனைக்கு உள்ளாக்குவதும் நிகழ்கின்றது. கடந்த முப்பது வருடங்களில் அவ்வாறு 23 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற உண்மை புறந்தள்ளக் கூடியதா?




கொலைகளுக்குப் பலியாகும் அரசியல்வாதிகளை 'புனிதப்படுத்த' எத்தனை அப்பாவிகள் தூக்கில் தொங்கியுள்ளார்கள்.

நீதிபதிகளினது சார்பு நிலைகளினால் எடுக்கப்படும் தன்போக்கான, தவறான முடிவுகளுக்கு பலியாகும் மனிதர்களின் நிலை என்ன? தவறு உணர்ந்த பின் திருத்தப்படக் கூடிய தண்டனையாக மரண தண்டனை உள்ளதா?

இது பற்றி ரவிக்குமார் காட்டும் மேற்கோளும், எஸ்.வி.ராஜதுரை முன்வைக்கும் கேள்வியும்:

".... ஒரு வழக்கில் வாதி பிரதிவாதிக்கு அப்பால் நடுநிலை வகிக்கக் கூடிய ஒருவர் இருக்க முடியுமென்றும், அவர் நியாயம் அநியாயம் என்பவை பற்றிய தீர்மானமான கோட்பாடுகளின் அடிப்படையில் நீதி வழங்க முடியும் எனவும் கூறிக்கொள்கின்ற தற்போதைய நீதியமைப்பை ஃபூக்கோ விமர்சிக்கிறார்".

"குறைபாடுகளும் பலவீனங்களும் உள்ள நிறுவனங்களிடமும் நீதிபதிகளிடமும் ஒருவரது உயிர் மீதான வானளாவிய அதிகாரத்தை ஒப்படைப்பது சரியானதா?"

அவையனைத்தினதும் நீதியமைப்பிற்கு உட்பட்ட மரண தண்டனைகள் பற்றியது. மறுபுறத்தே போராளி அமைப்புகளாலும், புரட்சிகர அமைப்புகளாலும் நிகழ்த்தப்படும் மரண தண்டனைகளும் விமர்சிக்கப்பட வேண்டியவை. முன்னையதைப் போலல்லாது இது உடனடியாக "சுடச்சுட" மின்கம்பங்களிலும், ஏனைய இடங்களிலும் நிறைவேற்றப்படுவது. இவற்றிலும் எந்தவித மனிதாபிமானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்கப்படுவதில்லை.

ஜனநாயக நீதியமைப்பிற்கு உட்பட்ட மரண தண்டனையாயினும், போராட்ட அமைப்புகளால் நிகழ்த்தப்படும் மரண தண்டனையாயினும் அவற்றிற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு நெருக்கமானது. ஒரு ஆட்சியமைப்பிலே ஒவ்வோர் சட்டமும் அனைத்து பிரஜைகளினதும் மறைமுகமான சம்மதத்துடனே நிறைவேற்றப்படுகிறது. எனவே ஒவ்வோர் மரண தண்டனைக்கும், அவர்களும் பொறுப்பாளிகளாகின்றனர். இத்தகையவர்கள் தங்கள் இருப்பும் இவ்வாறான தண்டனைக்குள்ளேயே என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

குற்றங்கள் நிகழ்வதில் சமூகத்திற்கும் ஒரு குறித்தளவு பங்கு உண்டு. எனவே தனிநபர்களுக்கு தண்டனை விதித்து ஒதுங்கிக் கொள்ளும் மனோபாவம் அடிப்படையில் அநீதியானது.

போராட்ட அமைப்புகளால் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் அவர்களுடைய 'சாகச வரலாற்றின்' ஒரு தவிர்க்க முடியாத அம்சமாகவே பார்க்கும் போக்கு சமூகத்திடையே நிலவி வருகிறது. இதுவும் தீவிரமான விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய போக்காகவே காணப்படுகிறது.

மரண தண்டனையை எதிர்ப்பவர்கள் அனைவரும் ஒரே நோக்கத்தில் அதை மேற்கொள்பவர்கள் அல்லர். கருணை, மனிதாபிமான அடிப்படையில் ஒரு சாராரும், மனித உரிமைகள் அடிப்படையில் மறுசாராரும், நீதியமைப்பின் நியாயத்தன்மை, நம்பிக்கையற்ற தன்மை போன்றவற்றில் இன்னொரு சாராரும் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என வாதிடுவர். எவ்வாறெனினும், அனைவரும் 'மரண தண்டனையை ஒழித்தல்' என்ற பொது நோக்கோடு செயல்படுகின்றனர்.

ஈழத்திலும் இதற்கான அடிப்படைகள் உருவாக வேண்டும். மனித உரிமை ஆர்வலர்கள் அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட வேண்டும். பத்திரிகைகள், சிற்றிதழ்கள் விரிவான விவாதக் களங்களை உருவாக்க வேண்டும். இவற்றினூடாக மரண தண்டனையை சட்டத்திலிருந்து ஒழிக்க முடிகிறதோ இல்லையோ வெகுஜன மட்டத்தில் ஒரு விழிப்புணர்வையேனும் ஏற்படுத்த முடியும்.

காலச்சுவடு (ஜன-மார்ச் 2000) சிறப்புப் பகுதியிலிருந்து:

"நம் நியாய வரம்பில் தண்டனை உடலை மையப்படுத்தியது. உடலின் இயக்கத்தை குலைத்து பலவீனம் கொள்ளச் செய்வதும், உடல்வலி, வேதனையை உருவாக்குவது தண்டனைக்கான முன்மொழிவாகிறது. உடல் உழைப்பு மட்டும் கால அடிப்படையில் தண்டனையாக வழங்கப்படுகிறது. உடல் வடிவம் குற்றத்தின் வெளித்தோற்றமாக அடையாளம் காணப்பட்டு வருகிறது. இதன் உச்ச நிலையே உடல் இயக்கத்தின் மூலாதாரமான உயிரைப் பறிப்பது"

எஸ்.ராமகிருஷ்ணன்

பாலியல் வன்முறைக்கான தண்டனையாக மரண தண்டனை ஏற்றுக் கொள்ளப்படுவது பற்றி எஸ்.வி. ராஜதுரை...

".. இது போன்ற குற்றங்களுக்கு படிப்படியாக மரண தண்டனையை விரிவுபடுத்துவது மனிதர்களின் கருத்துக்களை நெரிப்பதற்கு அரசின் கொலைக் கரங்கள் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு நிகழ்வதற்குத் தான் துணை புரியும். இதிலிருந்து ஓரடி தாண்டினால் பாசிசம்."

நன்றி - நூலகத்திட்டம்





‘நீர்கொழும்பு முத்துலிங்கம் அவர்கள் கடந்த ஜனவரி 09ம் திகதியன்று காலமானார். சிறுகதை, கவிதை, நாவல், சஞ்சிகை, ஓவியம், விமர்சனம், இசை, சினிமா நெறியாள்கை, சிலம்பு, வாள்சண்டை போன்ற பல் துறைகளிலும் கணிப்பிற்குரிய பங்காற்றிய மனித நேயத்தை தனது கோட்பாடாகக் கொண்டு செயற்பட்ட ஒரு கலைஞர் இவர்.

ஈழத்தில் வீரகேசரியிலும், மல்லிகையிலும் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்தன. 60களின் இறுதியில் எழுதத் தொடங்கிய அவரது படைப்புக்கள் தமிழ் இலக்கியப்பரப்பில் அவரது சமகாலத்து எழுத்துக்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவத்துடன் திகழ்ந்தவர். "அறிவார்ந்த அனைத்துத் துறைகளையும் இவரது மனித நேய ஆன்மா அளைந்து அனுபவித்து ஆரா திக்கிறது"" என்கிறார் கவிஞர் மு.பஷீர்.

அவர் நினைவாக அவரது சிறுகதை யொன்றை இங்கே தருகிறோம்.’

ஆ-ர்

"அய்யா!"

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு இளைஞன் நின்றிருந்தான். நன்றாக உற்றுப்பார்த்தால் இளைஞன் என்றும் சொல்ல முடியாது. நடுத்தர மனிதனென்றும் சொல்ல முடியாது. காதோரம் வழிந்த செம்பட்டைச் சிகை கழுத்து வரை பரவியிருந்தது. மீசையே முளைக்காத முகம். ஏனோ வரட்டுத்தனம் மிகையாகவிருந்தது. இவன் யார்? ஏன் என்னை அழைத்தான்? இவனை எங்கோ கண்ட மாதிரி ஞாபகம் மீண்டும் மீண்டும் நினைவுத் தேடல்.

"அய்யா!"

"நன்றாக உற்றுப் பார்த்தேன். என்னுள் பழைய ஆவணங்கள் சிறைப்பட்டன. மூளை ஒரு ஆவணத்தைச் சடக்கென்று தூக்கிப் போட்டது. அவன் தான், அவனே தான். ஓ! எத்தனை வருடங்கள். இத்தனை வருடங்கள் கழித்து இவனைச் சந்திப்போமென்று நினைத்ததுண்டா? அது சரி ! " இவனைப் பற்றி நினைத்தால்தானே சந்திப்பைப் பற்றி நினைப்பது. அவன் தானா? ஒரு சின்ன சம்சயம்.

அவனே தான்-அவன் தான்.

அன்றைய அவனுக்கும் இன்றைய இவனுக்கும் என்ன வித்தியாசம். அல்லது என்ன ஒற்றுமை?

0 0 0

"செட் ரெடியா?"

"ஆர்டிஸ்ட் ஓகே!"

"சேர்! எல்லாம் ரெடி. செட் வேர்க் முடியல்ல"

"ஏன்?"

ஆர்ட் டைரக்டர் அருகில் வந்தார். "எல்லாம் சரி அந்த சைட் சீன் பெயிண்டிங் மட்டும்தான்..." இழுத்தார்.

"ஏன்?"

"நேத்து முழுக்க எனக்கு காய்ச்சல்"

"சரி நீங்க இத சீக்கிரம் முடியுங்க. அடுத்த ஷாட் இந்தப் பக்கம் தான்"

"ஓகே சேர்! அத முடியுங்க! இது இப்ப முடியும். ஓகே"

"என்னப்பா! கெமரா? சரியா!"

ஓகே! லைட்ஸ் ஓன்!"

"அங்க பைவ் கேவி"

"இந்தாப்பா, அம்மாவுக்கு ஒரு பேபி கொடு ! " கோடாவில் இருந்தவன் அம்மாவுக்கு பேபி லைட் கொடுக்க ஓடினான்.

"ஓய்! அவன் கல்யாணம் முடிச்சி மூணு வருஷம் பொண்சாதிக்கு ஒரு பேபி கொடுக்க முடியல்ல. இப்ப இஞ்ச ஒடனே ஒரு பேபியா? " எல்லோரும் சிரித்தார்கள். எனக்கும் சிரிப்பு வந்தது. ஆனால், நான் சிரிக்கக் கூடாது. நான் சிரித்தால் என் ஈகோ என்னாவது?

"லைட்ஸ் ஓன்"

"ஓய் அந்த டூ கேவிக்கி நெட்போடு!"

"பைனல் ரிகர்ஷல் எண்ட் டேக்" பஸ்ஸர் ஒலித்தது. ஒரே நிசப்தம். யாரும் மூச்சு விடக்கூடாது.

"பேன் ஓப்!" சுழன்ற காற்றாடி நிறுத்தப்பட்டது.

ஸ்டார்ட் காமரா!"

"ஆக்ஷன்"

"ஏங்க! நீங்க இப்படி செய்யலாமா? நான் ஒங்களையே நெனைச்சிட்டு உயிர் வாழறேன்"

"கட்! கட்!!"

"டேக் டூ"

"கேமரா ஸ்டார்ட்"

"ஆக்ஷன்!"

"ஏங்க நீங்க இப்படிச் செய்யலாமா? நான் ஒங்களையே நெனச்சிட்டு உயிர் வாழறேன்"


"கட்! ஷொட் ஓகே!"

"லைட்ஸ் ஓப் பேன் ஓன்!"

நான் வெளியே வந்தேன். மூணாவது புளோரின் சிறிய தகட்டுக் கதவு திறப்பட்டது. சில்லென்ற குளிர் காற்று முகத்தைத் தழுவி வியர்வையைத் துடைத்தது. முன்புறம் தியேட்டரில் சிகப்பு மின் விளக்குக் கலர் பட்டென்று எரிந்தது. ரீ ரெக்கார்டிங் அல்லது டப்பிங் நடக்கின்றது போலும்.

"அய்யா! வந்து பாருங்க!"

ஒரு இளைஞன் கையில் தூரிகையுடன், முத்தரும்பும் முகத்துடன் வந்து பக்கவாட்டில் பவ்வியமாக நின்றான். இவன் எதைப் பற்றிப் பேசுகிறான். நிஜத்திற்கு வரச் சில நிமிடங்கள் பிடித்தன. ஓ! இவன் தான் அந்தக் கடைசித் தூணில்



சித்திரம் வரைந்து கொண்டிருந்த ஓவியன். அஸிஸ்டன்ட் ஆர்ட் டைரக்டர் உள்ளே சென்றேன்.

செட் நன்றாக இருந்தது. கடைசி வேலை இவனின் வர்ணங்களினால் முழுமை பெற்றிருந்தது.

"எங்க ஆர்ட் டைரக்டர்?"

"போயிட்டாரு. அவருக்குச் சொகமில்லை!"

"அப்ப இத யாரு செஞ்சது?"

"நாந்தான்" மிகவும் சந்தோசத்துடன் ஒப்புக்கொண்டு. தான் ஒப்புக்கொண்டது தவறோ என்ற பாணியில் "அவர் தான் எல்லாம் சொல்லிக் கொடுத்தார்"

இது ஏன்? குரு விசுவாசமா? இருக்கும் இருக்கும் குரு பிரம்மா... குரு விஷ்ணு...

" தம்பி ஒன் பேரு ? " அவன் தன் பெயரைச் சொன்னான். சொல்லும்போதே ஒரு பெண்ணைப் போலக் கூச்சத்துடன் அபிநயித்தான். ஹார்மோன் சரியாகச் சிந்திக்கவில்லை. அது அவன் குற்றமில்லை. "தம்பி அடுத்த படத்திற்கு நீதான் ஆர்ட் டைரக்டர்". அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. நான் அவன் கண்களைப் பார்த்து வியந்தேன். ஓ! எப்படிப்பட்ட அழகிய விசாலமான நயனங்கள். சரி! இவன் மீனாக்ஷியின் அம்சமா? இல்லை, காமாக்ஷியின் அம்சமா? அதை மறந்து விட்டேன்.

"ஸ்டார்ட் காமிரா!"

"ஆக்ஷன் !"

"கட்! கட்!!"

டேக் டூ"

"டேக் த்ரீ ! "

"ஓகே"

"லைட்ஸ் ஓப்"

"பெக் ஓப் !"

0 0 0

நன்றி - நூலகத்திட்டம்



"அய்யா! என்ன ஞாபக மிருக்கா?"

"ஓ! நீ அந்தப் படத்துல அஸிஸ் டென்ட் ஆர்ட் டைரக் டரா இருந் தேல்ல! அது சரி அதுக் குப் பொறகு ஒன்னக் காணல லியே! எங்க போயி ட்டே?

"நான் பிரான் சுக்குப் போனேன். அவன் சற்று எதையோ எண்ணி மெய் மறந்தான். சில நேரம் பிரான்சுக்குப் போயிருக்கக் கூடும். அவன் திரும்பி வரும் வரை காத்து நின்றேன்.

"இப்பவும் படம் செய்றீங்களா?" "இல்ல இப்ப சும்மாதான் இருக்கிறேன். எழுதுறேன், நெறைய எழுதுறேன்."

அவன் அர்த்தமில்லாமல் சிறிது நேரம் தன் கைவிரல் நகத்தை மாற்றி மாற்றிக் கடித்தபடி நின்றிருந்தான். வாயினுள் ஏதோ முனகிக் கொண்டான். "ஆர் யூ ஓல் ரைட்?"

அது சரி எனக்கு என்னவாயிற்று? இவன் ஏன் ஆர் யூ ஓல் ரைட் என்று கேள்வி கேட்கணும். திருப்பி ஏதாவது கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால், அடக்கிக் கொண்டேன். அமைதியாகப் பதில் கூறினேன். "ஐ ஆம் ஓல் ரைட்"

"பிளீஸ் கம் வித் மீ!" சொல்லியபடியே அவன் நின்றிருந்த பாதையின் பக்கத்தால் ஒரு குறுகலான சந்தில் நுழைந்தான், நடந்தான். நான் வருகிறேனா இல்லையா என்று திரும்பிக் கூட பார்க்கவில்லை. அவ்வளவு தூரம் என்னில் நம்பிக்கை அல்லது அலட்சியம் நான் பின் தொடர்ந்தேன்.

அந்தக் குறுகலான பாதை போய் ஒரு படிக்கட்டில் நின்று விட்டது. அண்ணாந்து பார்த்தேன். எல்லாமே மரத்தினால், மரச் சட்டங்களினால் ஆன கட்டடங்கள், படிக்கட்டுக்கள்.

மூத்திர நெடி நாசியை துளைத்தது.

மரப் படிக்கட்டின் கீழ் ஆங்காங்கே அசிங்கங்கள் வாத்துக்களின், புறாக்களின் சல்லாபங்கள் - சப்தங்கள்.

படிக்கட்டின் கீழ் பல பெட்டி வீடுகள். ஒரு பக்கத்தில் குழாய் நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் பொதுக் கழிவறை, ஒரு நடுத்தர வயதுக் கறுத்தப் பெண் யாரையோ மிக மோசமாகத் திட்டியபடி குளித்துக் கொண்டிருந்தாள்.

அவன் பலகைப் படிகளில் ஒரு நோயாளிபோல் ஏறினான், நான் பின் தொடர்ந்தேன். இப்போது திரும்பிப் பார்த்தான், சிரித்தான். அவனுடைய அழகிய முகம் மிகவும் வரண்டு கிடந்தது. முகம் முழுவதும் சிறிய சிகப்புக் கொப்புளங்கள் வந்தும், வராமலும் இருந்தன. அடிக்கடி வழியும் சிகையைக் கோதிக் கொண்டான். இரண்டாவது மாடி கைப்பிடி முழுவதும் கழுவிய துணிகளை உலர வைத்திருந்தார்கள். ஏறும் படிக்கட்டு முழுவதும் ஈரப் பசை. மேலே பாத்ரூம் வாசலில் இருந்து அழுக்கு நீர் படிக்கட்டு வழியாகக் கீழே போய்க் கொண்டிருந்தது. மேல் மாடியின் ஆரம்பத்திலேயே ஒரு சிறுபிள்ளை அம்மணமாகப் பேப்பரை விரித்து மலஜலம் கழித்துக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு இளம் பெண் சட்டை ஊசியைக் கழற்றிப் பல்லைக் குத்திக் கொண்டிருந்தாள். மாடித்தளம் முழுவதும் ஈர மயம். மூத்திரமா? கழிவு நீரா? எது என்று பிரித்துணர முடியாத வகையில் எனினும் பொதுவாக ஒரு துர்நாற்றம், நான் எல்லோருக்கும் பொது என்ற பாவனையில் அங்கே வியாபித்திருந்தது. இரண்டாவது மாடியில், அந்தத்தில் அவன் சென்று, நின்று திரும்பி என்னைப் பார்த்தான். நானும் ஒரு மாதிரியாக அந்த அசிங்கங்களை மிதிக்காமல் வந்து சேர்ந்தேன்.


"திஸ் இஸ் மை ரூம்!" - அவன் ஏதோ தன் புதிய மாளிகையைக் காட்டுவதைப் போலக் காட்டினான்.

மூலையில், ஒரு இருண்ட அறை, நான் உள்ளே புகுந்தேன். அங்கே ஒரு சாம்ராஜ்யமே நடந்து கொண்டிருந்தது. சிறிய அறை பலர் அமர்ந்திருந்தார்கள். பெரிய பிளேயரில் பீத்தோவனின் ஏழாவது ஸிம்பனி மிக அமைதியாக, ஒழுங்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த அறை இருளடித்துப் போயிருந்தது. எரிந்து கொண்டிருந்த மின் விளக்குக் கூட அந்த அறைக்குத் தன்னால் சேவை செய்ய முடியாது என்று அலறுவதைப் போல இருந்தது.

ஒரு மூலையில் மூவர் இருந்து, ஒருவரை ஒருவர் மிகவும் கரிசனையுடன் பார்த்துக்கொண்டு கண்களினால் சம்வாதமிட்டுக் கொண்டிருந்தனர். மெளனமே ஒரு பாஷையாக அங்கு உருவாகியிருந்தது.

அவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். நான் ஏதும் புரியாமல் அவனைப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே ஒரு நாற்காலியை சுட்டிக்காட்ட நான் அதில் யந்திரம் போல் அமர்ந்தேன்.

அறை முழுவதும் அழகான ஓவியங்கள் வரையப்பட்டுத் தொங்கவிடப்பட்டு இருந்தன.



எல்லாவற்றையும் வரைந்தது இவனாகத்தானிருக்கக் கூடும். இருளில் எல்லாமே மங்கலாகத் தெரிந்தன. அங்கு தொங்கிய காலண்டரில் இருந்த அந்தோனியார் படத்திற்கு யாரோ முறுக்கு மீசை வரைந்து, தொப்பி ஒன்றும் வரைந்திருந்தார்கள்.

நான் ஏன் இங்கு வந்தேன் என்றாகிவிட்டது. வராமல் அப்படியே அவனைக் கண்டவுடனேயே "ஸீ யூ ஐ ஆம் கோயிங்" என்று போயிருக்கலாம். ஏன் வந்தேன்? மனதினுள் இலேசாகப் பய உணர்ச்சி எழுந்தது. அவன் சிரித்தான். அர்த்தமில்லாமல் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஒரு பழைய நட்பின் நெருடல் இருந்தது. ஒரு வளர்ப்பு நாயின் கண்களில் இருந்து கனியும் உணர்ச்சி விசுவாசம் இருந்தது.

இவன் கூப்பிடும்போது நினைத்தேன். ஏதாவது பாரில் போய் அரை பைன்ட் கல் சாராயம் குடிக்கத்தான் என்று,

"டு யூ லைக் டு ஹேவ் சம் ஹொட் ட்ரிங்ஸ்?" இது அவன்.

"யெஸ்!" - இது நான். நான் வந்ததே அதை எதிர்பார்த்துத் தானே!

அறையினுள் இருந்த மற்றுமோர் சிறிய அறைக்குள் நுழைந்து ஒரு கால் போத்தல் ட்ரை ஜின்னுடன் வந்தான். சுத்தமாகக் கழுவிய கிளாஸை கொண்டு வந்து வைத்தான். அவன் குடிக்கவில்லை, நான் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக அருந்தினேன். அவன் பழைய விசுவாசத்துடன் மிகவும் பணிவாக நடந்து கொண்டான். திரைப்படத் துறையைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. நானும் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. மாறாகப் பிக்காஸோ பற்றியும், டார்வின்ஸ் பற்றியும் கண்களில் நீர் ததும்ப உருகினான், புலம்பினான்.

எனக்கு ஏதோ பரிதாபமாக இருந்தது. இவர்கள் யார்? இது என்ன இடம். ஏன்? அவன் என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

பின் வெகுநேரம் தீவிரமாக யோசித்தான்.

பிறகு ஏதோ தீர்மானத்திற்கு வந்தவனைப் போல என்னை நோக்கிவந்து ஒரு சிகரெட்டை இரண்டு கைகளினாலும் ஏந்தி, ஒரு கணம் கண்களை மூடி ஏதோ பிரார்த்தனை செய்பவன் போலப் பாவனை காட்டி நீட்டினான். நான் சிரித்தபடியே அதைப் பெற்றுப் பற்றவைத்து இரண்டு முறை புகையிழுத்தேன். கால் போத்தல் ஜின் என்னுள் இலேசான மயக்கத்தை உண்டு பண்ணியிருந்தது. நான் ஒவ்வொரு முறையும் சிகரெட் புகையை உள்ளுக்கு இழுக்கும் போதெல்லாம், அர்த்த புஷ்டியுடன் என்னைப் பார்த்துச் சிரித்தான். வழக்கத்துக்கு மாறாக அவன் கொடுத்த சிகரெட்டில் புதிய நெடி வீசுவதை உணர்ந்தேன். ஜின் குடித்த படியினாலேயா? தான் பிரான்சுக்கு போனதைப் பற்றி, அனுபவங்களைப் பற்றிக் கதை கதையாகக் கூறவாரம்பித்தான். சிலநேரம் அழுதுகொண்டே கூறினான். எனக்கும் அழுகை வந்தது "யாஸ்னாயா, பால்யானா" கிராமத்தை நினைத்துக் கொண்டேன். அங்கே கூட்ஸ் வண்டியினுள் லியோ டால்ஸ்டாயின் உருவம் என்னைப் பார்த்து மகனே! என்று அழைப்பதுபோல் இருந்தது. இன்னும் நிறைய அழ வேண்டும் போலிருந்தது. இன்றோடு எல்லோருக்குமாகச் சேர்த்து ஒட்டு மொத்தமாக அழுது தீர்த்துவிடவேண்டுமென்ற ஆதங்கம் மனதில் எழுந்தது.

மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தேன். நான் அமர்ந்திருந்த மேஜைக்கு அந்தப் பக்கம் ஒரு தட்டி மறைவில், நிழலில் சிருஷ்டித் தொழில் நடந்து கொண்டிருப்பதைப் போன்ற ஒரு தோற்றம். பிரமையல்ல உண்மை தான். திரும்பிப் பார்த்தேன். யாரும் எதையும் கவனிக்கவில்லை. கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில், அவர்கள் அதைவிட முக்கியமான மெளன சம்வாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் நேத்திரங்களே உதடுகளாகவும், மெளனமே பாஷையாகவும் அங்கே ஒரு வேள்வியே நடந்து கொண்டிருந்தது.

ஒருவன் வந்து அந்தத் தட்டி மறைப்புக்கு அப்பால் வரமுடியுமா என்றான். நான் முடியாதென்றேன்.
இரண்டாவது சிகரெட்டைக் குடித்தவுடன் எனக்கு எல்லாருமே கனவுகளாகத் தொடங்கின. சாதாரணக் கனவுகள் அல்ல. வர்ண வர்ணக் கனவுகள். கனவுகளுக்குள் கனவுகள்.

அந்த அறையினுள் ஒருவருமே இல்லை. யாருமே இருக்கவில்லையோ என்று தோன்றியது. என்னை அழைத்து வந்த ஓவியன் என் மனதின் உருவெளித் தோற்றமா? நேத்திர சம்வாதம் புரிந்தவர்கள் உருவெளி மனிதர்களா?

கனவில் கனவு கண்டிருக்கின்றேன். கனவில் பயப்பட்டுக் கனவு கலைய, மறுகணம் ஆறுதலடைந்து மகிழ்ந்து, பின் நிஜத்தில் விழித்து, கனவின் கனவையும் உணர்ந்து மகிழ்ந்திருக்கின்றேன், அல்லது துயரமடைந்திருக்கின்றேன்.

அப்படியாயின், இவைகள் கனவாக இருக்கட்டும். இன்னும் சிறிது நேரத்தில் விழித்துக்கொள்வேன். அப்போது இவைகள் கனவுகள் என்ற உண்மையில் மனத் தெளிவு பெறுவேன். இவர்கள் உருவெளி மனிதர்களாக இருக்கட்டும். இந்த ஓவியன் கனவு - படிக்கட்டுகள் கனவு - குளித்துக் கொண்டிருந்த பெண் கனவு - ஊசியினால் பல்லைக் குத்திக் கொண்டிருந்த இளம் பெண் கனவு - தட்டி மறைப்புக்கு அப்பால் நடந்த சிருஷ்டிக் கலை கனவு எல்லாமே கனவாக இருக்கட்டும்.

இப்போதோ! அல்லது எப்போதோ கனவு கலைந்து விடும். சிலநேரங்களில் கனவு கலைவது ஒரு தாங்க முடியாத துயரம். சில நேரங்களில் கனவு கலைவது தாங்க முடியாத ஒரு சந்தோஷம். எது எப்படி ஆயினும் இவைகள் கனவாக இருக்கட்டும்.

நான் எழுந்தேன். ஓவியன் என்னை மெளனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல் ஒரு தோற்றம். நான் போகிறேன் என்று அந்த உருவெளி மனிதனிடம் கூறினேன். அவனும் அப்படியே மெளனத்தால் பதில் அளித்தான்.

பலகைப் படிக் கட்டில் இறங்கும்போது கீழே தண்ணீர்க் குழாயடியில் யாரும் குளித்துக் கொண்டிருக்கவில்லை. பித்தளைக் குழாய் காய்ந்து போய் வெயிலில் தகதகவென மின்னிக் கொண்டிருந்தது.

ஒழுங்கை வழியால் பாதைக்கு வந்தேன். எல்லாமே மறந்து விட்டது. இப்போது கனவு கலைய வேண்டும். இவைகள் உருவெளித் தோற்றங்களா? அல்லது கனவுகளா? நான் விழித்து விட்டால் கனவு கலைந்து விடும். ஆனால் நான் அன்று விழிக்கவில்லை.

நான் விழித்த பின் பல நாட்கள் கழிந்த பின், பத்திரிகையில் ஓவிய நண்பனின் படத்துடன் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

செய்தி இதுதான் :

சிறந்த கலைஞனான அவன் போதைப் பொருள் பாவனையாலும், தன்னினச் சேர்க்கையின் விளைவாக ஏற்பட்ட நோயினாலும் விரக்தியுற்று ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டானாம்.

நன்றி - நூலகத்திட்டம்




# அரங்க நடவடிக்கையும் வடிசாராய எதிர்ப்புணர்வும்

## ஓர் அனுபவப் பகிர்வு


வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் பண்பாட்டலுவல்கள் பிரிவு, அரங்கச்செயற்பாட்டுக் குழுவின் வேலைத் திட்டங்களோடு தன்னை இணைத்துக் கொண்டு வவுனியாவில் பல அரங்கு சார் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையிலேயே தான் பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் ஒரு அரங்கக் குழு அமைக்கப்பட்டுத் தொடர் பயிற்சிகளுக்கூடாக ஓர் அரங்கு மேற்கிளம்புகின்றது. அரங்கக் குழுவில் அங்கம் வகிக்கும் உயர் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் புத்துணர்ச்சியுடன் செயற்படுகின்றனர். இந்த முயற்சிகளில் பாடசாலை அதிபர் பா. சதாசிவம், உப அதிபர் காஞ்சனா ஆகியோரின் அனுசரணைகள் மிகப் பெரியது.

பூவரசங்குளத்துக்கே சொந்தமான இவர்கள் இருவரும் அந்த ஊருக்கே சொந்தமான மாணவர்களின் கைகளில் வருங்காலத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதில் இதய பூர்வமான நம்பிக்கையோடு செயற்படுகின்றனர். அரங்கக் குழுவில் இருக்கும் ஒவ்வொரு மாணவர்களின் நடத்தை சார் மாற்றமும், ஏனைய ஆசிரியர்களால் வியக்கப்படுவதும் மிக்க மகிழ்ச்சியான செய்தி.



கடந்த 1999 ஜூலை மாதத்திலிருந்து அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் பட்டறைக்குள் இவர்கள் வளர்கிறார்கள். ஒவ்வொரு சந்திப்பின் போதும் இவர்கள் பூரிப்புடன் கலந்து கொள்வது எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறது. இந்த நிலையில் ஒரு தொடர் கலந்துரையாடலின் போது தான், ஒரு நாள் இவர்களது ஊரில் "பிடித்தவையும், பிடிக்காதவையும்" பற்றிய ஒரு உரையாடல் இடம்பெற்றது. "எமது ஊரின் இயற்கை அழகும், அமைதியும் எமக்கு நன்றாகப் பிடிக்கும். வேறு பெரும்பாலான விடயங்கள் எமக்குப் பிடிக்கவேயில்லை. அதிலும் முக்கியமாக எமது ஊரைக் குடிக்கும் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் மிகவும் மோசமான நிலையிலுள்ளமை எமக்கு அறவே பிடிக்கவில்லை" என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் இயற்கையமைதி பற்றிக் கூறிக் கொண்டிருக்கும் போதே, பக்கத்து வீதியால் கறுப்பு நிற இராணுவ வாகனங்கள் உறுமிக் கொண்டு, புழுதி கிளப்பியபடி செல்வது எரிச்சலாகத்தான்



இருக்கிறது. அதையும் மீறிக் கசிப்பை ஒழிக்க வேண்டும் என்ற ஒரு வெறி எல்லோர் கண்களிலும் தெரிகிறது.

கசிப்பினால் உச்ச நெருக்கடியை எதிர் நோக்கிக் கொண்டிருந்த இயங்கராவூர் எனும் அயற் கிராமம் உடனடியாகக் கசிப்பு ஒழிக்கப்பட வேண்டிய இடம் என்று கருதப்பட்டு, அந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட 35 குடும்பங்களில் இருந்தும், முழுமையான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. "சமூகப் பொருளாதாரச் சூழல் பண்பாட்டு ஆய்வு" எனும் தலைப்பில் நடைபெற்ற இவ்வாய்வில், பெரும்பாலும் எல்லோருமே (கசிப்பு வடிக்கும் குடும்பம் தவிர) கசிப்பு ஒரு பிரச்சினை என்பதைக் குறிப்பிட்டனர். எனினும், அழிக்க வேண்டும் என்ற உணர்ச்சி மேலோங்கியவர்களாக இல்லை.

நாங்கள் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து, மறுநாளுக்கு மறுநாள், அதிர்ச்சியான செய்தி ஒன்று வருகிறது. இயங்கராவூரில் உள்ள சில இளைஞர்கள் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு, வடிகாரரால் கத்தியால் வெட்டப்பட்ட நிலையில் ஒரு இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வடித்தவரும் அடிக்கப்பட்டு வைத்தியசாலையில் உள்ளார் என்கிறது செய்தி.

பல காலம் புரையோடிப் போயிருந்த ஒரு வழக்கத்தை உடனடியாக நிறுத்துவதென்பது கடினம். உடனடியான அதிரடி நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்த முற்படும் போது தனிப்பட்ட சிலர் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகி விடுகிறது. படிப்படியாக ஊர்மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்வை உருவாக்கி, அந்த உணர்வின் அடிப்படையில் நிதானமாக அவர்களை ஒன்று படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும்.

இந்த இடத்தில் தான் எமது அரங்கின் அவசியம் உணரப்பட்டது. அந்த மக்களின் உணர்வுகளுடன் பேசி, அவர்களின் இதயங்களைத் தொடக் கூடிய ஒரு அரங்க ஆற்றுகையுடன், இயங்கராவூரில் நுழைவது என்று முடிவெடுக்கப்பட்டு வேலைகள் துரிதமாயின. இங்குதான் தரிசனம் கண்டு நாடகமாட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. கசிப்பின் கோரம் பற்றிய தரிசனத்தைக் காண வேண்டிய அவசியம் அரங்கக் குழுவுக்கு ஏற்படுகின்றது. ஆனால், அதற்கான சூழல்? அமைதியான அழகான சூழல் ஒன்று தான் எமக்குத் தேவை. ஆனால், பாடசாலை வளவெங்கும் கனரகக் கறுப்பு வாகனங்கள் உழுது தள்ளியுள்ளன. வகுப்பறைகளிலும், மண்டபத்திலும் கூட அந்த வானகங்களின் சொந்தக்காரர்கள் தான் வகுப்பு நடத்துகின்றார்கள்.

அந்த வகுப்புகளுக்கிடையே எப்படி எம்மவரைக் கசிப்பின் கோரம் பற்றிய படிமங்களைக் காண வைப்பது...? எனினும், நெருக்கடி நிலையிலும், நாம் செய்ய வேண்டியதைச் செய்யவே சித்தமானோம்.

இரண்டு நாட்கள் மிகத் தீவிரமாக வேலைகளில் ஈடுபாடு. ஆற்றுகைக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஆற்றுகையொன்றை முழுமையாகத் தயார் செய்யாமல், புதிய ஆற்றுகையாளரோடு எப்படிக் களத்தில் இறங்குவது என்ற பயம் ஒன்றும் பெரிதாக எழவில்லை. அவர்களின் நெஞ்சில் நிறைந்து ததும்புகின்ற உணர்ச்சிகள் மட்டுமே அந்த ஆற்றுகையின் மூலதனம். அத்தோடு கூட இவ்வளவு நாட்களும் நெஞ்சில் வளர்த்தெடுத்த துணிவு, நம்பிக்கை, அர்ப்பணிப்பு மனப்பாங்கு எல்லாம் பக்கபலமாக நிற்க, வெற்றி நிச்சயம் என்கின்ற ஒரு குதூகலம் - எதிர்பார்ப்பு.

திருமலை, மட்டுநகர், கொழும்பு, யாழ். அரங்கக் குழு நண்பர்கள் வந்து விட்டனர். அவர்களுடனும் சேர்ந்தே ஆற்றுகை மேற்கொள்வது என்பதும் திட்டம். மிக நெருக்கடியான சூழ்நிலை. காலத்தைக் கண்டுபிடிப்பது என்பது பெரும் பாடாகிய போதும், ஆற்றுகைக்கு முன்பு இரண்டு தடவைகள் இவர்களுடன் ஆற்றுகை பற்றிய திட்டத்தைப் பகிர்ந்து கொண்டாயிற்று. நாங்கள் எல்லோரும் ஒன்றாய் நிற்கின்றோம் என்பது இன்னொரு வகையில் புத்துணர்ச்சியைத் தருகிறது. இது உண்மையில் ஒரு சுகம். ஒத்த உணர்ச்சியுள்ள மனிதர்கள் ஒன்று கூடுகிறபோது ஏற்படுகின்ற ஆன்ம பலம் மகத்தானது. அந்தப் பலத்தையும் துணைகொண்டே நாங்கள் புறப்படுகிறோம்.



26. 12. 1999 ஞாயிறு 1. 30 மணிக்கு, நாங்கள் பூவரசங்குளத்தில் இருக்கும் எமது உறவுகளைச் சந்திப்பதாய் ஏற்பாடு. ஆனால், 1. 35மணிக்குத் தான் சாத்தியமாயிற்று. எல்லோரும் ஒன்றாய் நின்று, "உயர்ந்தவர்கள் நாமெல்லோரும், உலகத் தாய் வயிற்று மைந்தர், நசிந்து இனிக் கிடக்க மாட்டோம் நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்..." என்று உரத்துப் பாடிய போது, அந்த மண்டபமே அதிர்வு கண்ட பேரொலி ஒலி. தாக்குதல் ஒன்றுக்குத் தயாராவது போன்ற ஒரு உணர்வு. உண்மையில், இதுவும் ஒரு வகைத் தாக்குதல் தான். இயங்கராவூர் என்னும் கிராமத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கசிப்பு எனும் விஷ அரக்கன் மீது, நாம் நடத்தப் போகும் தாக்குதல். இந்தத் தாக்குதலுக்கான ஆயுதம் எங்கள் அரங்கும், அதனூடு பாயும் எங்கள் ஒன்றித்த உணர்ச்சியும் தான்.



2. 30 மணிக்கு நாங்கள் எல்லோரும் இயங்கராவூரில் நிற்கிறோம். 3. 00 மணிக்கெல்லாம் மக்கள் குவிந்து விட்டனர். எப்படி வந்தனர், சேர்ந்தனர் என்பது ஆச்சரியம். ஆனால், எதிர்பார்த்ததுக்கும் மேலாக, வந்து குவிந்து விட்டனர். இவர்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும். எங்களோடு அவர்களை இணைக்க வேண்டும். கசிப்பை ஒழிக்க வேண்டும் என்று, ஏற்கெனவே அந்தக் கிராமத்தில் இரத்தம் சிந்தியுள்ள இளைஞர்களின் இதயக் கொதிப்பை ஆற்றி இதம் கொடுக்க வேண்டும். அந்த இளைஞர்களும், ஊர் மக்களும் ஒன்றாகி ஊரெல்லாம் கூடி உருப்படியான ஒரு காரியத்தைச் சாதிக்கும் மனப் பக்குவமும், பலமும் உள்ள மனிதர் கூட்டம் உருவாக வேண்டும். மொத்தத்தில் எல்லோர் மனங்களையும் வெற்றி கொண்டாக வேண்டும்.

ஆற்றுகை முன்னளிக்கைகள் தொடங்கி விட்டன. முகமூடி போட்டபடி ஆடுதலும், பட்டாசும், வானமும் கொழுத்திச் சிறுவர்களை ஆட்கொள்ளலும், அம்புலிமாமா பாடி, ஆடி அனைவரையும் மெல்ல அசைப்பதுவும், வாய் திறக்க வைப்பதும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆற்றுகைக்காகக் கொண்டு வந்து நிறுத்தியுள்ள பசு மாடு ஒன்று மக்கள் கூட்டத்தையும், சத்தங்களையும் கண்டு மிரண்டு கொண்டு நிற்பது, சற்றுப் பதட்டத்தைப் ஏற்படுத்தி விட்டது. உணர்ச்சி பொங்கும் ஆற்றுகையின் போது, எதிர்பாராத விதமாக ஏதும் அசம்பாவிதங்கள் நடந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு எங்களைச் சற்று இறுக்கப் பார்க்கிறது. எனினும் ஆற்றுகை ஆரம்பித்து விட்டது.

ஊரொன்று கூடி நடத்துகின்ற ஒரு கிராமத்துப் பொங்கல் காட்சியொன்று. இது ஏற்கெனவே நடத்தப்பட்ட அரங்கச் சடங்கில் புதிதளித்தலின் போது கண்டு கொண்ட ஒரு படிமத்தின் வழிவந்த பொங்கல்.

கல்லடுப்பு மூட்டி, புதுப் பானை வைத்து, மஞ்சுவின் தலைமையில் பொங்கல் தொடங்கி விட்டது. பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தின் அரங்கக் குழுவில் இருந்த 20 பேர் (TAG) குழுவின் உறுப்பினர் 15 பேர். எல்லோரையும் சேர்த்து நடக்கிறது அரங்கச் செயற்பாட்டு ஆற்றுகை.

அடுப்பில் பொங்கல் பானை அவிந்து கொண்டிருக்கிறது. அரிசி போட்டாயிற்று, ஒரு பக்கம் களை கட்டி நிற்கிறது. மஞ்சுவுக்கு உதவியாகச் சதீஸ், வசந்தகுமார், சுதர்ஷினி, விஜயந்தினி, இமெல்டா சேர்ந்து பொங்கலில் ஈடுபடுகிறார்கள். செல்வரஞ்சினியும், அனெஸ்ராவும் மக்களுக்குள் புகுந்து விட்டனர் அவர்களுடன் கதைப்பதற்காக.

திடீரென்று சற்றுத் தூரத்தில் ஒழுங்கையில் ஏதோ சத்தம். கசிப்படித்த வெறியோடு தர்மசீலன் கையில் ஏதோ ஆயுதத்தோடு வருகிறான். பொங்கல் செய்யும் அந்தப் புனிதப் பிரதேசம் அல்லோல கல்லோலப்படுகிறது. பொங்கிக் கொண்டிருந்த புதுப் பானை எங்கள் கண் முன்னால் சிதறுண்டு போகிறது. அரை அவிந்த அரிசியும், தயாராக இருந்த தேங்காய்ப் பூவும் பானை ஓடுகளின் இடையே சிந்திக் கிடக்கிறது. எல்லோர் மனங்களிலும் அதிர்வு. நெஞ்சு பதறும் படி நடந்துவிட்ட நிகழ்வுகளின் கோரம். ஊரொன்று கூடி நடத்துகின்ற பொங்கலில், கசிப்பின் திருவிளையாடல். செல்வராசனின் தலை உடைந்து இரத்தம் பீறிடுகிறது. இரத்தம் சிந்தச் சிந்தச் செல்வராசாவை அணைத்தபடி மக்களுடன் கதைக்கிறோம்.

"எங்கட அப்பா குடிச்சிட்டு வந்து இப்படியே எங்களப் போட்டுக் கொல்லுறார்" விஜயந்தினி கதறுகிறாள்.

"எவ்வளவு நாளைக் கெண்டு நாங்கள் இப்பிடி கசிப்பாலயே அழியிறது. எங்களைக் காப்பாற்றுங்கோ" - மஞ்சு உருகி உருகி அழுகிறாள்.

"என்ர அப்பாவை நான் ஏன் இழந்தனான் எண்டது உங்களுக்குத் தெரியுமோ, கசிப்பால தான். அப்பாவைப் பறி கொடுத்தனான்" என்று கதறுகிறாள் செல்வரஞ்சினி.

இவையள் சொல்லுறது உங்களுக்கு விளங்குதா...?

ஓம்... எங்களுக்கு விளங்குது. எல்லோரும் சேர்ந்து கசிப்பினை இல்லாமல் பண்ண வேணும் ஏகோபித்த குரலில் மக்கள்.

இவர்கள் நடிக்கவில்லை. உண்மையான உணர்ச்சியால் செய்யினம்... நாங்கள் கசிப்பை ஒழிக்க வேணும். கசிப்பின் கோரத்தைக் காட்டுகின்ற குரூர உருவம் வருகிறது. பாடல் தொடர அதன் கையாட்கள் வருகிறார்கள்.

ஐந்து கிலோ சீனி போட்டு,
அழுகின பழங்கள் போட்டு,
ஊமத்தங்காயும் போட்டு,
உக்கின முள்ளுக் கம்பி போட்டு.

நுளம்புத் திரி கொஞ்சம் போட்டு,
செப்புக் கம்பி நிறையப் போட்டு,
செத்த ஓணான் நாலு போட்டு,
சிதம்பிய பூனை ஒன்று போதும்...

வடிவேலன் வந்திறங்க...

வெருட்டிரும்பு, கிபீர், கசிப்புக்
குரங்கு வடிவேல், நாமம் சூடி

நன்றி - நூலகத்திட்டம்



வந்திறங்கி வையமெல்லாம்
வடியரசன் வலம் வந்தானே..

கையும் வெட்டிக் காலும் வெட்டி
வேணுமெண்டால் குடும்பியும் வெட்டி,
மூச்சயெல்லாம் வீங்கச் செய்வேன்
மூதேவியே முடிப்பேன் நானே...

கோர தாண்டவம். வடியரசன் என்ற பெயரில் அந்தக் குரூரன் வலம் வருகிறான். உணர்வுகளின் உச்சத்தில் நின்று, கசிப்பை ஒழிக்க வேண்டும் என்று குமுறுகிறார்கள் ஆற்றுகையாளர்கள்.

ஜோன்சனும், சதீசும், தமிழ்ச் செல்வனும் குரூரத்தின் கையாட்களாக வந்தவர்கள். இவர்களோடு சுனித்தாவும், சந்திரகாந்தியும், சுலக்ஷனாவும், அஜித்தாவும் நெஞ்சு அதிரும்படி கசிப்புக் கொடுமையை ஒழிக்க வேண்டும் என்றே குமுறுகின்றனர். கொஞ்சம் கூடப் பொய்யாக இருக்க இவர்களால் முடியவில்லை. கசிப்பின் கையாட்களாக வந்தவர்களே கசிப்பை ஒழிக்க வேண்டும் என்று கதறும் நிலை வந்துவிட்டது.

மக்கள் எல்லோரும் கசிப்பை ஒழித்துக் கட்டுவோம் என்று கோஷமிடுகின்றனர். "கசிப்பு வடிப்பவனைக் கொண்டு வந்து, கசிப்பு வடிக்கும் கிடாரத்துக்குள் போட்டுக் கொல்லுவோம்" இவ்வாறு கூச்சலிடுகின்றனர். ஊரெல்லாம் கூடிக் கசிப்பை நிறுத்துவோம் என்று சபதமிடுகின்றனர்.

கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் முன்னரே இறங்கிக் கையில் கத்தியால் வெட்டுண்ட கலைநாதனின் குரல் ஒலிக்கிறது.

"என்ர இந்தக் கை போயிருந்தாலும் பரவாயில்லை. என்னட்ட மிச்சமிருக்கிற கையால கசிப்பை ஒழிப்பன்" இவ்வாறு உணர்ச்சி ததும்ப உரைக்கிறார்.

"இல்ல உங்கட கை போக விட மாட்டம். உங்களுக்குக் கையா நாங்கள் எல்லாம் இருப்பம்" இளைஞர் உணர்வு மேலோங்கச் சபதமிடுகின்றனர்.

"அது தான் சரி"

"அவ்வளவு தான் தேவை...!

எங்களால் இதைத் தான் சொல்ல முடிந்தது. நாங்கள் ஆற்றுகைக் களத்திலிருந்து விடை பெற்றுக் கொள்கிறோம்.

எல்லோரும் தேநீர் அருந்திவிட்டு, ஒவ்வொருவரின் உணர்வையும் ஒரே வார்த்தையில் பகிர்ந்து கொண்டோம்.

ஊர் இளைஞர்களும் சூழ்ந்து நிற்கின்றனர்.

இவ்வளவு நாளும் நாங்கள் ஆடிப் பாடினதை, அழுததைப் பார்த்துப் பகிடி பண்ணினவை. இப்ப அந்த ஆட்டமும், பாட்டமும், பயிற்சியும் ஏனென்டதை விளங்கியிருப்பினம். இது ஆற்றுகையாளரின் நம்பிக்கை. நல்ல காரியம் ஒன்று செய்திருக்கிறம் என்ற நிறைவு.

இயங்கராவூர் இளைஞர்களும் கூறுகின்றனர். "இனி அடுத்த ஊரிலும் இது மாதிரிச் செய்யவேணும். எங்களையும், உங்களின்ர உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு போக வேண்டுமென்று விரும்புகிறம்...

இது இஞ்ச மட்டுமல்ல, இந்த நாடு முழுவதும் கசிப்புக்கெதிரான இயக்கமாக மாறும் எண்ட நம்பிக்கையிருக்கு...

இப்படியே நாங்கள் எல்லாம் திரண்டமென்றால், கசிப்பு மட்டுமல்ல "பாஸ்"க்கு எதிராயும் போய் அதையும் ஒழிக்க முடியும்." உணர்வு மேலோங்க இந்தக் குரலும் ஒலிக்கிறது.

"கூத்துக் கூத்தெண்டு சும்மா சொல்லுவம். இப்பதான் கூத்தின்ர தத்துவம் விளங்குது" இது ஊர் மக்களில் ஒருவர் சொன்ன உணர்வுபூர்வமான செய்தி. "என்ர பிள்ளையளோட, என்ர ஊருக்குள்ள வாறன். எப்படி முடியுமோ எண்டு பயந்து கொண்டு தான் இறுதி வரைக்கும் இருந்தனான்....

என்ர பிள்ளையள் சமூகத்துக்கு நல்ல மனிசராய் நல்லது செய்வினம் எண்ட நம்பிக்கையும், சந்தோஷமும் நிறைஞ்சிருக்கு..." அதிபர் கண் கலங்க, உணர்ச்சி பொங்கக் கூறியது எல்லோரையுமே நெகிழ வைக்கிறது. பிள்ளை களின் பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் வைத்துக் கொண்டு அவர்களை அளவிடும் உலகம், பூவரசங்குளம் மகா வித்தியாலய அரங்கக் குழு, குழந்தைகள் யாவரும் வித்தியாசமானவர்கள் தான்.

நல்ல மனிதமுள்ள மனிதர்களை உருவாக்கி, இந்தச் சமூகத்துக்கு அனுப்பவேண்டிய பொறுப்பு, பள்ளி என்னும் நிறுவனத்துக்குண்டு. இது மிக முக்கிய பொறுப்பு என்பதைச் சமூகம் புரிந்துகொள்ளும் நாள் விரைவில் வரும். அவர்களுக்கு இந்த அரங்கக் குழு மாணவர்கள், வழிகாட்டிகளாய் விளங்கப் போவது திண்ணம். நல்ல சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கான தலைமைத்துவப் பண்பு இவர்களிடம் வளர எங்கள் அரங்கு உதவுகிறது. வெறுமனே ஆடுவதும், பாடுவதும், மட்டுமல்ல அரங்கு.

அதற்குள்ளே வாழ்வதும், மற்றவரை வாழ வைப்பதுவும் "அரங்கு" எனும் ஆலயத்துக்கு முடியும். அரங்கு மனிதனை ஆற்றுப்படுத்தும், ஆறுதல் அளிக்கும்.

***அரங்கச் செயற்பாட்டுக் குழு***

# மணவிழாவுக்கு நாதசுரம் சாவுக்குப் பறையா?

**பா**ர்ப்பன இசைக்களவை அம்பலப்படுத்தும் பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. இசைக் கருவிகளின் களவு குறித்தும் பல ஆய்வுகள் வந்துள்ளன. யாழ்-வீணையாக உருமாறியது குறித்த விவாதம் அவற்றில் மிகவும் பிரபல்யமானது. எனினும் ஆய்வாளர்களால் இதுநாள்வரை தீண்டப்படாமலிருந்த இசைக்கருவி தமிழ் மக்களின் தொன்மையான இசைக்கருவியாகிய பறை. இதற்குக் காரணம் சொல்லாமலேயே விளங்கும்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் வளர்மதி ஜனவரி, 25, 1997 அன்று, மக்கள் கலை இலக்கியக் கழகம் தஞ்சையில் நடத்திய தமிழ் மக்கள் இசைவிழாவில் "பறையும் தீண்டாமையும்" என்ற தலைப்பில் வழங்கிய ஆய்வுக் கட்டுரையை மேலும் விரிவாக்கி, "பறை, இசைக்கருவி - ஓர் ஆய்வு" எனும் நூலாகத் தயாரித்துள்ளார்.

பறை எனும் இசைக்கருவியின் தோற்றம், அதன் செயற்பாடுகள், பறையைக் குறிக்கும் சொற்கள், பலவகையான பறைகள் ஆகியவற்றை இலக்கிய ஆதாரங்களினூடாக நூலின் முதற்பகுதி விளக்குகிறது.

இந்தியாவின் பல பகுதிகளிலும், உலக நாடுகளிலும் தொல்குடி மக்களின் இசைக்கருவியாக பறை இருந்ததையும், இருந்து வருவதையும் நூலின் அடுத்த பகுதி விவரங்களுடன் விளக்குகிறது.

இந்தியா, இலங்கை தவிர வேறு எந்த நாட்டிலும் பறை எனும் கருவியை இசைத்த மக்கள் தீண்டத்தகாதோர் ஆக்கப்படவில்லை என்பதைக் கூறும் நூலாசிரியர், தமிழர் வரலாற்றில் பறையும் தீண்டாமையும் இணைந்த காலம் எதுவாக இருக்கும் என்பதை இலக்கியச் சான்றுகளினூடாக ஆய்வு செய்கிறார்.

பறை என்னும் சொல்லுக்குச் சொல்லுதல், அறிவித்தல் எனப்பல பொருள்கள் உண்டு. பல வகைப்பட்ட தோற்கருவிகளின் பொதுப்பெயராகவும் பறை என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

பறை தயாரிக்கும் முறை பற்றியும், இசை நயத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டிய விலங்குகளின் தோல்குறித்தும், அவற்றைப் பதப்படுத்தும் முறை குறித்தும் சங்க இலக்கியங்களிலிருந்து காட்டப்பட்டுள்ள சான்றுகள் தமிழ் மக்களின் இசையறிவை மெய்ப்பிக்கும் சான்றுகளாகும்.

வாசிக்கும் முறைகளைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பல புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. இயம்பல் - இயைந்து ஒலித்தல், கறங்கல் - 'தகதிமி' போன்ற சொற்கட்டினைச் சுற்றி சுற்றி வருமாறு இசைத்தல்: தெளிர்த்தல் - ஒலிக்கூறுகள் சிதறுமாறு அடித்தல்: ஆலித்தல் - அகலமாகி ஒலித்தல்... போன்ற பல சொற்கள் இசைநுட்பத்தை மட்டுமின்றித் தமிழின் மொழி வளத்தையும் காட்டுகின்றன. தகதிமி, தரிகிட போன்ற தாளக்கட்டுகளால் கொட்டு முறைகள் குறிக்கப்படுகின்ற அதே நேரத்தில், கொட்டு முறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் இத்தனை வகையான சொற்கள் இருந்தும் அவைவழக்கொழிந்து, பறையடித்தல், வாசித்தல் போன்ற ஓரிரு சொற்கள் மட்டுமே இன்று வழங்கி வருவது வருத்தமளிக்கிறது.

ஐவகை நிலப்பாகுபாட்டின் அடிப்படையிலும், ஒலி - உருவம் - பயன்பாடு இவற்றை அடிப்படையாகக் கொண்டும் பறைகள் பெயரிடப்பட்டதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார் நூலாசிரியர்.

முதலில் வினைச்சொல்லாகவும், பின்னர் இசைக்கருவியைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகவும் இருந்த பறை, சமூக உறவுகளின் இலக்கணவிதி மாறிய போது - தீண்டாமை நுழைந்த போது - பெயர் உரிச்சொல்லாகவும் மாறியது. இழிவு, அழுக்கு, கருப்பு என்ற பொருள் தரும் சொல்லாகவும் 'பறை' மாறியது.

பறைக்கோலம் - இழிவான தோற்றம், பறைத்துணி - அழுக்காடை, பறைப்பருந்து - கரும் பருந்து போன்ற பல சொற்கள் தமிழ் இலக்கியங்களில் நுழைந்ததைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

"துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்நான்கு அல்லது குடியும் இல்லை" - துடிகொட்டுபவன், யாழ் மீட்டுவோன், பறை யறைபவன் வெறியாடுபவன் ஆகி கலைஞர்களைக் காட்டிலும் சிறந்த குடிகள் இல்லை என்று கூறி அவர்களைப் புகழ்ந்துரைக்கிறார் மாங்குடி கிழார் எனும் புலவர்.

வேறொரு சங்க இலக்கியப் பாடலோ (புறம் - 287) "துடி எறியும் புலைய, ஏறிகோல் கொள்ளும் இழிசின" என்று பறை கொட்டியவனை இழிபிறப்பாளனாக்குகிறது.

"பழந்தமிழருடைய குடிப்பாகுபாட்டுடன் பார்ப்பனர்களின் வர்ணப்பாகுபாடு கலந்த காலத்தில் தீண்டாமை வேரூன்றத் தொடங்கியுள்ளது" என்று கூறி சங்கப் பாடல்களை ஆதாரம் காட்டுகிறார் ஆசிரியர். "சங்க காலம் பொற்காலம்" என்று நிறுவ விரும்புவோர்க்கு இது சங்கடத்தைத் தரக் கூடும். ஆனால், இனிமேல் தான் நாம் ஒரு பொற்காலத்தைப் படைக்க வேண்டியுள்ளது என்று அதற்காகப் போராடி வருபவர்களுக்குச் சங்கடம் ஏதும் இல்லை.

பறை எனும் இசைக்கருவிக்கும் தீண்டாமைக்கும் என்ன தொடர்பு? ஏற்கெனவே குறிப்பிட்ட நால்வகை இசைக்குடிகளுள் பறையர் மட்டுமே தீண்டத்தகாதோராக, பறை மட்டுமே தீண்டத்தகாத கருவியாக ஆனது ஏன்?

பறையைக் காட்டிலும் யாழ் தொழில்நுட்ப ரீதியில் முன்னேறிய இசைக்கருவி என்பதால் இதனை மீட்டிய கலைஞர்கள் சமூகத்தில் ஒப்பீட்டளவில் உயர் தகுதி பெற்றிருக்கக் கூடுமெனினும், பறையர் தீண்டத்தகாதோரானதற்குக் காரணம் பறை அல்ல. அவை சமூகக் காரணங்களாகும்.

வேளாண் சமூகத்தில் மேட்டுக்குடிகளுக்கு ஏவல் தொழில் செய்த உழைக்கும் மக்கள், ஈமச்சடங்கில் ஏவல் செய்தோர் போன்றவர்கள் புலையர், இழிசினர், உவச்சர், கடைஞர், கடிகையர், பறையர் என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் நீதி நூல்களிலும், புலையர் என்ற சொல் பொய், களவு, இழிவு, ஊன், தீயநெறி போன்ற பொருள்களில் ஆளப்பட்டுள்ளது என வேறு சில ஆய்வுகள் மேற்கோள் காட்டுகின்றன.

வேளாண் சமூகத்தின் அடிமைத் தொழில்களைச் செய்ததனால் இழிசினர் என்று ஒதுக்கப்பட்டனரெனக் கொண்டாலும், பார்ப்பன நெறிக்கெதிராய் என்ன தீயநெறியை அவர்கள் பின்பற்றினர். 'ஊன் உண்ணுதல்' புன்மையானது எப்போது போன்ற கேள்விகளுக்குள் நூலாசிரியர் செல்லவில்லை.

பறை மிக எளிய இசைக்கருவியாயினும், அதன் மீது சுமத்தப்பட்டிருக்கும் தீண்டாமை எனும் சமூகக் கொடுமை மிகவும் சிக்கலான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கினூடாகத் தான் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

மற்றெல்லாக் காலங்களை விடவும் சோழர் காலத்தில் தான் பறையர் இனமக்கள் மிக இழிவாக நடத்தப்பட்டனர் என்பது இரா. பூங்குன்றன் அவர்களின் ஆய்விலிருந்து மேற்கோள்காட்டி விளக்கப்படுகிறது.

திருவாரூரில் சாமிக்கு முன் "யானையேறும் பெரும்பறையன்" யானை மீதேறிக் கவரி வீசிச் செல்வது போன்று சில கோயில்களில் அவர்கள் பெற்றிருக்கும் உரிமைகள், "மேதினி வளரும் சாதி ஒழுக்கமும் நீதி அறமும் பிறழாது" ஆட்சி நடத்திய சோழ மன்னர்களுக்கும்,பிந்தைய ஆட்சியாளர்களுக்கும் எதிராகக் கலகம் செய்து அவர்கள் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளேயன்றி சாதியச் சமுதாயம் மனமிரங்கி வழங்கிய சலுகைகள் அல்ல.

தொல்குடித் தமிழ்ச் சமுதாயத்தின் கலைஞர்களான பறையர் அடிமைகளாக்கப்பட்டதும், பறை எனும் இசைக்கருவி அடிமையின் கைக்கருவியாக்கப்பட்டதும் இன்றுவரை மாறவில்லை. பறையடிப்பதற்கும் அடிமைத் தொழில் செய்வதற்கும் மறுத்ததற்காக மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ஆதரவாளர் குருமூர்த்தியின் (குருங்குளம், தஞ்சை) கட்டைவிரல் வெட்டப்பட்ட சம்பவத்தை நினைவு கூர்ந்து பறையர் எனும் சொல் சாதி மக்களைக் குறிக்கும் சொல்லாக இருப்பது ஒழிக்கப்பட்டு இசைவாணர்களைக் குறிக்கும் மரியாதைக்குரிய சொல்லாக மாற வேண்டும் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.



பறை எனும் கருவிக்கு மற்ற இசைக்கருவிகளுக்கு இணையான மதிப்பு அளிக்கப்படுவதுடன், இசை நுணுக்கங்களைப் புகுத்தி, வகுப்புகள் நடத்தி முறையான பறை இசைவாணர்களையும் உருவாக்க வேண்டும் என்று தனது ஆலோசனைகளையும் ஆசிரியர் முன்வைத்துள்ளார்.

திரையிசை உள்ளிட்ட புதிய தேவைகளையொட்டிப் பறை பயன்படுத்தப்பட்டாலும் ஒரு கருவி என்ற முறையில் அது தீண்டத்தகாத கருவியாகவே சமூகத்தில் இன்னமும் கருதப்படுகிறது. எனவே மாட்டுக்கறி தின்பது, தீண்டாமை மறுப்புத் திருமணம் போல பிற சாதியினர் தப்படிப்பதும் ஒரு தீண்டாமை எதிர்ப்பு நடவடிக்கையாகவே உள்ளது. சாதி ஒழிப்பு குறித்துப் பேசும் அமைப்புகளின் அணிகள் இதைச் செய்ய முன்வர வேண்டும். மணவிழாவுக்கு மங்கல வாத்தியம் (நாதசுரம்) - சாவுக்குப் பறை எனும் பார்ப்பனியப் பண்பாட்டை ஒழித்து பறையை மணவிழாவின், மகிழ்ச்சியின் இசைக் கருவியாக்க வேண்டும். சாப்பறையை நிறுத்த வேண்டும்.

இவை போன்ற பண்பாட்டு ரீதியான நடவடிக்கைகள் பறை எனும் கருவிக்கும் பறையர் அல்லாத பிற மக்களுக்கும் இடையிலான உறவை மாற்றியமைக்கும் முயற்சிகள் மட்டுமே. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிறர்க்கும் இடையிலான தீண்டாமை அடிப்படையிலான சாதிய உறவை ஒழிப்பதன் வாயிலாகத் தான் தொன்மையான இசைக்கருவிக்குரிய முழு மரியாதையைப் 'பறை' பெற முடியும்.

"பைங்கொடிச் சுரை மேற்படர்ந்த பழங்கூரையுடைப் புற்குரம்பைச் சிற்றில்" என்று நந்தன் வாழ்ந்த புலைச்சேரியை வருணிக்கிறாரே சேக்கிழார், அந்தச் சுரைக் கொடி படர்ந்த பழங்கூரை பல நூற்றாண்டுகளாகியும் மாறவில்லை - பறையைப் போலவே.

"இழி பிறப்பாளன் கருங்கை சிவப்பத்" தன் வலிமையனைத்தையும் செலுத்தி அரசனுக்காகப் போர்ப்பறை முழக்கியதைக் கூறுகிறது புறநானூறு. கருங்கை மட்டுமின்றிக் கண்களும் சிவக்க போர்ப்பறை முழங்க வேண்டும். -அரசுக்கும், ஆண்டைகளுக்கும், சாதிக்கும் எதிராக.

கருங்கையின் வலிமை பறையின் மீது படிந்த தீண்டாமைப் பூச்சை அடித்து உதிர்க்கும், பறையின் அதிர்வில் கருங்கையில் பூட்டப்பட்ட விலங்குகள் தெறிக்கும்.

***- மருதையன் -***

*நன்றி : புதிய கலாசாரம்*

நன்றி - நூலகத்திட்டம்



வை. சுந்தரேசனின்

# 'சீனத்துக் கவிதைகள்'

(மொழிபெயர்ப்பு)



யாழ் பல்கலைக்கழக ஆங்கில மொழிப் போதனாசிரியர் திரு.வை சுந்தரேசன் ஆங்கில மொழியில் தான் படித்துச் சுவைத்த சீனத்துக் கவிதைகளை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு தமிழ்ப்படுத்தி தந்துள்ளார். பருத்தித்துறை குலசிங்கம் அவர்களின் வெளியீடாக தமிழகத்தில் அச்சிடப்பட்ட இந்நூல் கோ.கைலாசநாதனின் ஓவியங்களையும் கவிதைகளின் கருத்திற்கு ஏற்ப தாங்கி வெளிவந்துள்ளது சிறப்பான அம்சமாகும்.

1990ம் ஆண்டு வெளியான சீன இலக்கியம் (சைனீஸ் லிற்ரெச்சர் 90) எனும் சஞ்சிகையில் வெளியான கவிதைகளே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிதையுலகில் கவிஞர்கள் இ.முருகையன், கே.கணேஷ், சி.சிவசேகரம், ஏ.நுஃமான், சோ.பத்மநாதன், அ.யேசுராஜா, சி.ஜெயங்கர் என மற்றும் பலர் பல்நாட்டு கவிதைகளை மொழிபெயர்த்து தமிழில் தந்துள்ளார்கள். பல்நாட்டு போராட்ட கவிதைகள், ஆங்கில காதல் கவிதைகள் என பலதரப்பட்ட கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்த வழிகளில் வை.சுந்தரேசன் சீனத்துக் கவிதைகள் பலவற்றை எமக்கு தந்துள்ளார். அவை யாவும் எமது சமகால வாழ்வியலுக்கு அண்மித்த கவிதைகள் என்றால் மிகையாகாது. மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளிலிருந்து குறிப்பிடத்தக்க வரிகளை வாசகர்களுடன் பகிர்வது இங்கு அவசியமாகிறது.

புல்லாங்குழல் இசைக்கும் கலைஞனுக்கு தனிமை இதமாகிறது. வத்தகப் பழ வயல்களில் இரவுக் காவலாளியின் குடிலிலிருந்து பிறக்கும் அவ்வோசை யாருக்காக ஒலிக்கிறது? கவிதையின் இறுதி வரியில் அந்த விடையைத் தருகிறார் ஷாங்ஷியின் என்னும் கவிஞர்.

'சபலம் வேண்டாம்
சபை ஒன்று அங்கே உண்டு
என் கூற்றில் நம்பிக்கை இல்லை எனின்
தேடிப் பாருங்கள்
'நட்சத்திரங்களை எண்ணிபடி
வாயிலில் அவள் அமர்ந்திருப்பது காணுங்கள்'

காதலின் பிரிவு சென்சுனாங் எழுதிய "சந்திப்பு" கவிதையில் மழையின் பின்னணியில் கூறப்படுவது தாக்கமாக உள்ளது. மழை காரணமாக ஒதுக்கிடம் தேடினான் கவிஞன். நண்பன் மனைவி சகிதம் ஒதுங்கி நின்றான். என்ன ஆச்சரியம் எதிரே நின்ற அவன் மனைவி நம் கவிஞனின் 10 வருட காதலி. கண்கள் குளமாகி வழிந்தோட "ஓ இந்த மழை" எனது முகம் துடைத்தான் கவிஞன். கவிஞனின் ஏமாற்றம் இவ்வாறு ஒலிக்கிறது.

'பத்து வருட மாயை,
பாழடைந்தது ஒரு கணத்தில்
பத்து வருடம் காத்திருப்பு
இழந்தது அதன் அர்த்தத்தை'

தனிப்பட்ட துயரங்கள், அனுபவங்கள் மட்டுமா கவிதையாகலாம், இல்லை. நாட்டிற்குண்டான துன்பமும் கவிப்பொருளாகும். நையூஹான் எழுதும் "மாலைப்பனி" தேசத்தின் துன்பத்திற்கு வழிதேட தன்னையே அர்ப்பணிக்கும் கவிஞனைக் காட்டுகிறது. நண்பன் தனக்கு அனுப்பி வைத்த கரித்துண்டு அவன் குளிரை மட்டும் காய்வதற்கு உதவவில்லை. அது அவனே தேசத்திற்கு கரித்துண்டாகும் உணர்வைத் தருகிறது. (கரித்துண்டை தணல் கட்டை என்பது பொருத்தமானது.)

'எனது தேசமே
நீயும் குளிரில் வாடுகிறாயா?
நீ குளிர் காய்வதற்கு
யானே ஒரு கட்டுக் கரித்துண்டாகி
மேலோங்கி எரிவேன்'

"வீதீச் செப்படி வித்தைக்காரர்கள்" தலைப்பில் "ஆய்கிங்" எழுதிய கவிதை குறியீட்டு ரீதியில் சமகால இடப்பெயர்வுகளையும், வாழ்வின் நிலையற்ற தன்மைகளையும் ஒருங்கே சேர தருகிறது.

'காடுகளை ஊடறுத்து
ஆறுகளைக் கடந்து
எல்லையற்ற மண்ணை நோக்கி
வேகமாய் நடக்கின்றோம்'

வேகமாய் நடக்கும் இவர்கள் எங்கிருந்து வந்தார்கள். எங்கு செல்கிறார்கள் என்று புரியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம் அவர் கிராம மண்ணின் வளத்தை இழப்பது தான்.

'பசும்புல்லை வேரோடு பிடுங்குவது போல
வரட்சியும் பஞ்சமும் போரும்
எம் கிராமத்திலிருந்து எம்மை விரட்டின
அம் மண்ணின் வளத்தை இழப்பதை தவிர
யாரால் உதவ முடியும்?

ஈற்றில் அவர்களிடம் எஞ்சியிருப்பது ஒரு கேள்வி

'எமது வதிவிடம் எங்கே?
எமது வீடு எங்கே?'

சமகாலத்தில் போருக்குள் சிக்கி உலகெங்கும் இடம் பெயர்ந்து வாழும் எம்மவர் நிலையை இதைவிட வேறு சிறப்பாக எது சொல்ல முடியும்.

இயல்பான நடை இலகுவான மொழி சிறப்பான மொழிபெயர்ப்பு சீனத்துக் கவிதைகள்.

- கந்தையா ஸ்ரீகணேசன்

# முஸ்லிம் பெண்கள் அமைப்புகளின்

## வெளியீடுகள் – ஒரு அறிமுகம்

பெண்கள் அமைப்புக்களின் வெளியீடுகளை அறிமுகம் செய்யும் நோக்கில் இதழ் 186ல் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின்படி கொழும்பில் இயங்கி வரும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி தமது வெளியீடுகளை அறிமுகத்திற்கென வழங்கியுள்ளது.

முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்தை தலையாய நோச்காகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னிணியின் ஏனைய குறிக்கோள்களாக, சமூகத்தில் முஸ்லிம் பெண்களின் நிலை பற்றி விழிப்புணர்வடையச் செய்தலும், அவர்களது முழு உள்நிலைத்திறன்களையும், ஆற்றல்களையும் வலுவூட்டச் செய்வதும். முற்போக்கான முஸ்லிம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்திலுள்ள பெண்கள் தொடர்பான பல்வேறு விடயங்களையும் பற்றி கலந்துரையாடுவதற்கும் செயற்படுவதற்குமான ஒரு பொதுத்தளத்தினை உருவாக்கிக் கொடுப்பதும். மேலாதிக்க செல்வாக்குகளற்ற குர்ஆன் விளக்கவுரைகளை அதில் நிபுணத்துவம் வாய்ந்த பெண்கள் வெளிக்கொண்டு வருவதை ஊக்குவிப்பதும், இதே நோக்கங்களுடன் இயங்கும் உள்ளூர் தேசிய, சர்வதேச முன்னணிகளுடன் இணைந்து முழு மூச்சுடன் செயற்படுவதற்குமாகும்.

இவ்வமைப்பின் நூல்கள் பின்வருமாறு:-




**கட்டவிழும் முடிச்சுக்கள்**

பெண்கள் தொடர்பான பொய்மைகளும், உண்மைகளும

**'பதிப்பாசிரியர் சுல்பிகா ஆதம்.**


இந்நூலில் கௌரி பழனியப்பன் அவர்களின் பெண்ணின் குணாதிசயங்கள் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும், சுல்பிகாவின் பெண்ணின் இரண்டாம் தர நிலை அல்லது கீழ்நிலை அந்தஸ்துடன் தொடர்பான பொய்களும், உண்மைகளும், கலாநிதி செல்வி திருச்சந்திரன் அவர்கிளன் குடும்பத்தில் பெண்களின் நிலைபற்றிய பொய்மைகளும், உண்மைகளும் ஆகிய ஆக்கங்கள் அமைந்துள்ளன.



**முஸ்லிம் பெண்களும் சமூக நீதியும் சமத்துவமும்**

**அஸ்கர் அலி.**

பணங்கள் உரிமைகள் வரதட்சனை, விவாகரத்து, பிற மத திருமணங்கள், ஆடை அணிசாட்சிகள் போன்ற தலைப்புகளில் விளக்கங்கள் உள்ளன.






**இலங்கையில் இஸ்லாமிய குடும்பச் சட்டங்கள்**

**சுலானி கொடிகார**

சட்டப் பிரச்சினைகள், திருமணங்கள், வரதட்சிணை, குழந்தைகள் பராமரிப்பு, விவாகரத்து போன்ற விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.




**முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத் துவமும்**

**ஃபாதிமா மெர்னிஸ்ஸி**

**தமிழாக்கம் நுஃமான்**


முஸ்லிம் பெண்கள் முஸ்லிம் அரசைத் தலைமை தாங்கி நடாத்த முடியுமா என்பதற்கான நியாயங்கள், ஆய்வுகள் இஸ்லாம் மத கோட்பாட்டின் கீழ் ஆராயப்பட்டுள்ளது.



**இஸ்லாத்தில் மகளிர் நிலை**


மகளிரும் சாட்சியம் பற்றிய இஸ்லாமிய சட்டங்களும் பேராசிரியர் கமறுதீன்கான் மொழிபெயர்ப்பு ஏ. இக்பால்.

அரச சட்டமும் சமயம் சார்ந்த சட்டங்களும், சமயக் கொள்கை மீறல் பற்றிய சர்ச்சை, இஸ்லாமிய சமய இலக்கியத்தில் மகளிரை இழிவுபடுத்தும் கூற்றுகள் போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் அமைந்துள்ளன.



**முஸ்லிம் சமூகம் பற்றிய ஒரு கட்டுரை தொகுப்பு**

இலங்கையில் முஸ்லிம்களின் சமூகமயம் எப். சக்கிரியா, டபிள்யூ. சண்முகநாதன் - இன அடையாளம், மத அடிப்படைவாதம் மற்றும் இலங்கை முஸ்லிம் பெண்கள். எம். ஏ. நுஃமான் ஆகிய நீண்ட ஆய்வுக் கட்டுரைகள் இந் நூலில் அடங்கியுள்ளன.






**இலங்கையில் தனிச்சட்டங்களின் சமாந்தரப் போக்குகள்**

**ரமணி முத்தட்டுவேகம**

இலங்கையில் சட்டத்தின் போககுகள், அறிமுகங்கள் பற்றிய விரிவான தொகுப்பு.





**இரு உலகங்களுக்கிடையில்**

**பல்லின கலாசாரத்தில் முஸ்லிம் பெண்கள்**

இஸ்லாமிய சட்டத்தின் கீழான பெண்களின் வாழ்நிலை பற்றிய அறிமுகம், முஸ்லிம் பெண்களும் பிரஜாவுரிமையும் போன்ற சட்டம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன.

நன்றி - நூலகத்திட்டம்



## திறந்த வெளிச் சிறைச்சாலையாகும்

# மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தைச் ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலையாக்கும் முயற்சியில் பாதுகாப்புத்தரப்பு இறங்கியுள்ளது. இக்கைங்கரியம் அரசின் அனுமதியில்லாமல் நடக்கக்கூடியதல்ல. உயர் மட்ட ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் என்பவை பெறப்பட்ட பின்னரே பாதுகாப்புத்தரப்பு இந்தத் திட்டம்பற்றி அறிவித்திருக்கிறது.

ஏற்கெனவே வவுனியா நகரம் திறந்த வெளிச் சிறைச்சாலை போலவே இயங்கி வருகிறது. யாராவது அந்நகருக்குப் போவதானால் நுழைவாயிலில் போவதற்காக காரணம், தங்குமிடம், யாரைப் பார்க்கப் போகிறோம் என்ற



விபரம் ஆகியவற்றைக் கூறி அனுமதி பெற்றே நுழைய வேண்டியிருக்கிறது. வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள ஒரு கைதியைப் பார்வையிடச் செல்பவர்க்கும் வவுனியா நகருக்குள் செல்ல முனைபவர்களுக்கும் விசாரணை முறைகளில் பெரிய வேற்றுமைகள் இல்லை.

உத்தேசிக்கப்பட்டடிருக்கும் திட்டம் அமுலுக்கு வருமானால் பெப்ரவரி 15ம் திகதி முதல் மட்டக்களப்பு மாவட்டமும் இத்தகைய நடைமுறைக்குள் சிக்கிக்கொள்ளத்தான் போகிறது.

இலங்கை ஜனநாயக நாடு என்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்ட போதிலும் பொதுமக்களைப் பொறுத்த மட்டில் - குறிப்பாகத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் இராணுவமயப்படுத்த தேசமாகவே நடைமுறையில் உள்ளது. சொந்த ஊரிலேயே அடையாள அட்டை இன்றி நடமாட முடியாத நிலை. ஒவ்வொரு சோதனைச்சாவடியிலும், பொலிசாருக்கோ, இராணுவத்தினருக்கோ தலை சாய்த்துச் செல்ல வேண்டும்.

எந்த நிலையில் இருந்தாலும் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காச் சந்தேகப் பிராணியாகவே நோக்கப்படுகின்றனர். ஒரு சாதாரண ஊர்காவல் படையைச் சேர்ந்தவன் கூட தான் தமிழர்களுக்கு உத்தரவிடப் பிறந்தவன் என்று நினைத்துக் கொள்ளுமளவுக்கு நாடு சீர்கெட்டுப் போய்க்கிடக்கிறது.

சோதனைச் சாவடிகள் எல்லோருக்கும் பொதுவானவை போல் தோற்றமளித்தாலும் தமிழர்கள் மாத்திரம் தான் கடுமையாகப் பரிசோதிக்கப்படுகிறார்கள். ஏனையோர் தாங்கள் தமிழர்கள் அல்ல என்று நிரூபிப்பதற்காக மட்டுமே சாவடிக்குச் செல்கிறார்கள். இது இலங்கையெங்கணும் பொதுவான நிலைப்பாடு. ஒரு சில நேர்மையான அதிகாரிகள் மட்டுமே ஏனைய இனத்தவர்களையும் தமிழர்களையும் சமமாக மதித்து நடக்கிறார்கள்.

இந்தச் சிக்கல்கள் அரசுடன் இணைந்து வாழும் உயர்மட்டத்தமிழர்கள் சிலருக்கு புரிய நியாயமில்லை. கூடவே பொலிஸ் பாதுகாப்புடன் பயணம் செய்யும் இவர்கள் சோதனைச் சாவடிகளில் மரியாதையுடன் கடக்கும் நிலையில், வேண்டாத கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி சோதனைச் சாவடியில் நிற்கும் சிப்பாயைக் கூடத் திருப்திப் படுத்திச் செல்லும் தமிழ்ப் பொதுமக்களின் நடைமுறைக் கஷ்டம் எங்கே தெரியப் போகிறது?

இந்த லட்சணத்தில் தான் அனுமதிப் பத்திரமின்றி மாவட்டத்தை விட்டு வெளியேற முடியாத ஒரு நடைமுறை மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு அறிமுகமாக இருக்கிறது. அதேபோல் மட்டக்களப்புக்கு வரவேண்டிய தேவை உள்ள பிறமாவட்டத்தினரும் அனுமதி பெற்றே தான் உள்நுழைய வேண்டியிருக்கும்.

இராணுவமோ அரசோ கொண்டு வரும் நடைமுறைகளாக இருந்தால் என்ன சட்டங்களாக இருந்தால் என்ன அவலை நினைத்து உரலை இடித்த கதையாகவே தான் இருக்கின்றன. அரச அனுமதியின்றி இந்த நாட்டில் "சொட்கன்" என்றழைக்கப்படும் சாதாரண துப்பாக்கியைக்கூட பொதுமக்களால் வைத்துக்கொள்ள முடியாது. அவ்வாறு எவரிடமேனும் இருப்பதாகத் தகவல் கிடைத்தால் போதும் பொலிசார் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்துத் தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

ஆனால், விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருப்பதாக அரசே கூறிக் கொண்டிருக்கிறது. அவர்கள் யுத்த டாங்கிகளை வைத்திருக்கிறார்கள். சீருடை தரித்துப் படை நடத்துகிறார்கள். இராணுவ முகாம்களைத் தேடி அழித்து வருகிறார்கள். நாட்டின் சில பகுதிகளை அரசின் பிடியிலிருந்து விடுவித்தும் வைத்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு அரசின் சட்டங்களோ, படைகளின் சோதனைச் சாவடிகளோ ஒரு பொருட்டல்ல. அவர்கள் தமக்கு தேவையேற்படும் போது எந்தச் சட்டத்தையும் மீறும் வல்லமையுடையவர்களாகவோ சோதனைச் சாவடிகளைத் தகர்த்தெறியும் தன்மை பெற்றவர்களாகவே தான் இருக்கிறார்கள். அரசும் படைகளும் கௌரவம் கருதி இதை ஒப்புக் கொள்ளத் தயங்கினாலும் உண்மை இதுதான்.

இந்த உண்மையை மனத்திலிருத்திப் பார்த்தால் அரச தரப்பு கூறுவது போல் மட்டக்களப்பிலிருந்து குண்டு பிறமாவட்டங்களுக்குச் செல்வது உண்மையாக இருந்தாலும் அனுமதிப்பத்திர நடைமுறைகள் மூலம் இதனைத் தடுத்து விட முடியாது. குண்டுகளை எடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகள் சோதனைச் சாவடிகளூடாகத் தான் போக வேண்டும் என்று எதிர்பார்ப்பது பயனற்றது.

குண்டு தயாரிப்பிற்கு வேண்டிய மூலப்பொருட்கள் மட்டக்களப்புக்கு எவ்வழியாக வருகிறதோ அவ்வழி மூலமே பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் கஷ்டமான காரியமில்லை.

விடுதலைப் புலிகளுக்கெதிராக அரசு படை நடாத்தட்டும். அவர்களது பலத்தைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கட்டும். இவற்றை யார் எக்காரணங்கள் கருதி எதிர்த்தாலோ ஆதரித்தாலோ 'அரசு' 'சட்டம்' என்ற போர்வைகளாவது துணைநிற்கும். ஆனால், விடுதலைப் புலிகளைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு - அவர்கள் எவ்விதத்திலும் பாதிப்புக்குள்ளாகப் போவதில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டு தமிழ் மக்களை வருத்தும் செயழில் அரசு ஈடுபடும் போது புத்தபகவான் கூடத் துணை நிற்கப் போவதில்லை.

எதிர்ப்புகளை மீறிச் சட்டங்களைக் கொண்டு வருவது அரசுக்கு இப்போதைக்கு இனிப்பான விடயமாக இருக்கலாம். ஆனால், நீண்டகால நோக்கில் விடுதலைப் புலிகளுக்கே இவை இனிக்கும் சம்பவங்களாகப் போகின்றன என்பதை அரசு மறந்து விடக்கூடாது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்றெல்லாம் கூட்டங்களில் அறை கூவல் விடுத்தால் போதாது. நடைமுறையில் தமிழ் மக்களை வருத்தும் திட்டங்களை அரசு கைவிட வேண்டும்.

இதுதான் சமாதானத்தின் முதற்படி!

-திரிபுரன்

## வன்னி ...

சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறானவர்கள், தங்களுடைய குடும்பத் தேவைகளுக்காக குறித்த நேரத்தில் இராணுவ எல்லையைக் கடந்து, இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அல்லது இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குள் சுதந்திரமாகச் செல்வதற்குத் தடையாக இராணுவத்தினரின் பிரயாணக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் இருக்கின்றன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வருகின்றவர்கள் மட்டும் வவுனியா பகுதிக்குள் வரலாம் என்றும், வவுனியா, மன்னார் பகுதிகளுக்குள் வியாபார நோக்கத்திற்காகப் பொருட்களைக் கொள்வனவு செய்துகொண்டு திரும்பிச் செல்பவர்களோ அல்லது வேறு அலுவல்களுக்காக வந்து திரும்பிச் செல்ல வேண்டியவர்களோ, இராணுவ சோதனைச் சாவடியைக் கடந்து வரமுடியாது என்று கடந்த 3 வாரங்களாக இராணுவத்தனர் அறிவித்திருந்தார்கள்.

இதனால், வவுனியா, மன்னார் பகுதிகளுக்கு வந்து திரும்பிச் செல்வதற்காக மடு பகுதிக்கு வந்திருந்த சுமார் இரண்டாயிரம் பேரில் மிகவும் அவசரத் தேவைகளுக்காக வரவேண்டியிருந்தவர்கள், தாங்களும் இடம்பெயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு, உண்மையாகவே, இடம்பெயர்ந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வருவதற்காக வந்தவர்களுடன் சேர்ந்து களவாக வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

இராணுவத்தினர் பகிரங்கமாக அறிவித்து, அனுமதி வழங்கியதன் பின்னர், பிரமனாலங்குளம் இராணுவ முன்னணி காவலரண் ஊடாக வந்த இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வவுனியாவில் உள்ள குட்ஷெட் வீதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டார்கள். இவர்களில் வவுனியாவுக்கும், மற்றும் ஏனைய தென்பகுதி இடங்களுக்கும் செல்லவேண்டிய தேவைகளோடு வந்தவர்கள், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக குட்ஷெட் முகாமில் இருந்து வெளியில் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறு தடுக்கப்பட்ட நூற்றுக் கும் மேற்பட்டவர்கள், தம்மை வவுனியா நகருக்குள் சென்று தமது அலுவல்களை முடித்துக்கொண்டு வன்னிக்குத் திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்குமாறும் இடைத்தங்கல் முகாமில் உள்ள பொலிசாரிடம் பெயர் விபரங்களைக் கொடுத்து வேண்டினார்கள். ஆயினும் அவர்களுடைய கோரிக்கைகள் உடனடியாகப் பூர்த்திசெய்யப்படவில்லை. இவர்கள் சிறைப்பொறியினுள் அகப்பட்டது போன்றதொரு உணர்வுடன் இப்போது இருக்கின்றார்கள்.

இது ஒரு புறமிருக்க, வன்னிப்பகுதிக்கான உணவு விநியோகத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் புதிதாக அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள உணவுக்குறைப்பானது, அப்பகுதிக்குள் வசிக்கின்ற இடம்பெயர்ந்த மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. அரசாங்கத்தின் நிவாரணஉணவு விநியோகம் ஒன்றினையே, வேறு தொழில் வாய்ப்புகள் எதுவும் அற்ற நிலையில் தமது ஜீவனோபாயத்திற்கு நம்பியிருந்தவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.

உணவுப்பற்றாக்குறை, உணவுப்பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் கொள்வனவுசெய்வதற்குரிய பணவசதியற்றவர்கள். வறுமையில் வாடுபவர்கள் பலரும், அப்பகுதிகளைவிட்டு, இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் - குறிப்பாக வவுனியா பகுதிக்குள் வந்துகொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு கடந்த ஒருமாதத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வந்துசேர்ந்துள்ளதாகப் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை மட்டும் இவ்வாற வந்த 168 பேர் குட்ஷெட் வீதி இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டார்கள். வன்னிப்பகுதிகளில் இருந்து மேலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா பகுதிக்குள் வருவார்கள் என இராணுவத்தினரும், சிவில் அதிகாரிகளும் இப்போது எதிர்பார்க்கின்றார்கள். சுமார் 20 ஆயிரம் பேர் வரையில் வரக்கூடும் என்பது அவர் களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. இவர்களை வவுனியா நகரில் இருந்து சுமார் 8 மைல் தொலைவில் உள்ள ஆசிகுளம் பகுதியில் தங்கவைப்பது என்றும், அதற்காக அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள முகாமை மேலும் விரிவுபடுத்துவது என்றும் அதிகாரிகள் தீர்மானித்துள்ளார்கள்.

இந்த முகாம் அமைக்கும் இடத்தைத் தெரிவுசெய்யும் பணியும் முடிவடைந்துள்ளது. அத்துடன், அந்த இடத்தில் உள்ள காட்டு மரங்களை அழித்து இடத்தைத் துப்பரவு செய்வதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னிப்பகுதிக்கான போக்குவரத்தில் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு நடைமுறைகள், தடைகள், நிவாரண உணவில் வெட்டு போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்கும் மேலாக அப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கம் திட்டங்கள் தீட்டி வருகின்ற இராணுவத்திற்கு அப்பகுதிகளில் இருந்து பொதுமக்கள் எப்படியும் இடம்பெயர்ந்து வருவார்கள் என்பது தெரியாமல் இருக்க முடியாதுதானே?

இந்நத அடிப்படையில்தான். ஆசிகுளம் பகுதியில் பாரிய அகதிகள் முகாம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் மக்களை எந்தெந்த வழிகளில் ஒடுக்க முடியுமோ அந்தந்த வழிகளில் தனது இஷ்டம்போல ஒடுக்கி வருகின்ற அரசாங்கம் தனது நடவடிக்கைகளில் முன்னேறி வருகின்றது என்பதையே, அதன் பல்வேறு நடவடிக்கைகளும், தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய விபரங்கள், தகவல்களும் தெளிவுபடுத்துகின்றன.

ஆயினும், தமிழ் மக்களின் உரிமைகள், அபிலாஷைகளை வென்றெடுக்கப் போவதாகவும், அதற்காகப் போராடப் போவதாகவும் மார்தட்டிக் கொண்டு புறப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ்க்குழுக்களும் இதனைத் தெரிந்து கொண்டதாகவோ, தெளிந்துகொண்டதாகவோ தெரியவில்லை.

-துரை. 08.02.2000

## கமாலிட்டா பாலியல்....

அருகில் சம்பவ தினத்தன்று கடமையில் இருந்த பள்ளிமுனை இராணுவ முகாமைச் சேர்ந்த 11 இராணுவ சிப்பாய்களின் துப்பாக்கிகளும், சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிச் சன்னங்கள் என்பனவும், நீதிமன்றத்தினால் பொறுப்பேற்கப்பட்டு, அரச இரசாயன பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

சட்ட வைத்திய பரிசோதனையின் போது கமலிற்றாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கிச் சன்னமும், சம்பவ இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட சன்னங்களும் ஒரே துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டவை என்றும், இந்தத் துப்பாக்கி, சம்பவ தினத்தன்று பள்ளிமுனை இராணுவ முகாமில் கடமையில் இருந்த 11 சிப்பாய்களிடமிருந்து பெறப்பட்ட துப்பாக்கிகளுள் ஒன்றே என்றும் இரசாயன பகுப்பாய்வு மற்றும் சட்ட வைத்திய பரிசோதனைகள் என்பவற்றில் இருந்து தெரியவந்துள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## இராணுவ ஏஜென்டுகள்?

இராணுவத்திற்கு 15000 பேரைச் சேர்க்கும் அவசரத் திட்டம் ஒன்றில் இராணுவ தலைமை மிகவும் தீவிரமாக இயங்கி வருகிறது. ஒரு புறத்தில் சமாதானப் பேச்சுக்கான அறைகூவலை ஜனாதிபதி தனது சுதந்திர தினப் பேச்சில் வெளியிட்டுக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட்டு வருகிறார்கள் இராணுவ அதிகாரிகள்.

இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை பிரதேசம் பிரதேசமாக, பல லட்ச ரூபா விளம்பரங்கள் செய்யப்பட்டு நடாத்தப்பட்ட போதும் குறிப்பிடத்தக்க வெற்றியை எட்ட முடியவில்லை. யுத்த நிலை இன்று ஆட்பற்றாக்குறை காரணமாக தேக்கம் கண்டுள்ள ஒரு சூழலில் இராணுவத்திற்கு ஆட்கள் சேரும் வீதம் மிகவும் குறைவாக இருப்பதால் "கட்டாய இராணுவ சேவை" நடைமுறைப்படுத்தப்பட முன்முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில குறிப்பான இராணுவ உயர்மட்டங்களில் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வலுவாக இருப்பதாகவும் தெரிய வருகிறது.

ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்பார்த்த வெற்றியை அளிக்காததாலும், சம்பளம், இதர படிகள், வேறு வசதி வாய்ப்புக்கள் என்று பல்வேறு விதமான ஆசைகள் காட்டப்பட்ட போதும், இந்த உத்தேச தொகையை சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இதனால் இப்போது இராணுவம் அரசாங்க அதிபர்களின் ஊடாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை செய்யும் புதிய முயற்சியில் இறங்கி உள்ளது. அண்மையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக கல்வி நிறுவனத்தில் நாடு பூராவுமிருந்து அழைக்கப்பட்ட அரசாங்க அதிபர்கள் மத்தியில் தமது இந்த புதிய திட்டத்தை தெரிவித்து உரையாற்றிய படைத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல அரசாங்க அதிபர்களுக்கு இந்த விடயத்தில் அவர்கள் ஆற்றக்கூடிய முக்கிய பாத்திரம் ஒன்று உண்டு என்று தெரிவித்தார். பாடசாலையிலிருந்து இராணுவ ஆட்சேர்ப்புக்கு ஆட்களை திரட்டித் தருமாறும், அதற்குரிய விதத்தில் அவர்களைத் தூண்டுமாறும் அதிபர்களிடம் ஜெனரல் பலகல்ல கோரிக்கை விடுத்தார்.

இராணுவத்தில் சேரும் ஒருவருக்கு இலவச மருத்துவ வசதி, பொது போக்குவரத்து சேவைகளில் இலவச பயண வசதி போன்ற பல்வேறு வசதிகள் உண்டு என்று குறிப்பிட்ட பலகல்ல, ஆசியாவிலுள்ள மிகச் சிறந்த போரிடும் தொழில் நிபுணர்களை கொண்ட ஒரு படையாக எமது படை உள்ளது என்றும் ஐக்கிய இராச்சிய சமாதானப் படைகளில் எமது படையின் பிரிவொன்று, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை சேர்ந்த படையாளிகளுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றது என்றும் இவர்களில் ஒருவர் சராசரியாக 108 அமெரிக்க டொலர்களை (இலங்கை ரூபா சுமார் 7800) நாளொன்றுக்கு அவர்களது இதரப் படிகள் தவிர சம்பளமாகப் பெற்றுக் கொள்கிறார்கள் என்றும் கூறினார்.

உண்மையில் பலகல்ல அவர்களது உரையின் சாரப்படி இலங்கையில் உள்ள மிகவும் குறைவான கல்வித்தரத்துடன் அதியுயர் ஊதியத்தை பெறக்கூடியதும், மிகவும் வாய்ப்பு வசதிகள் கொண்டதுமான ஒரு தொழில் வாய்ப்பு இராணுவத்தில் சேர்வது தான் என்று தெரிய வருகிறது. நாட்டில் உள்ள வேலையில்லாப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்ள மிகச் சிறந்த ஒரு தொழில் வழங்கும் நிறுவனமாக இப்போது இராணுவம் மாறியுள்ளது என்பதை இப்பேச்சுக்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக, அந்த நாட்டின் இளைஞர்கள் மத்தியிலிருந்து படைகட்கு ஆட்களைத் திரட்டுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. அதுவும் நாடு ஒரு பாரிய யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இத்தகைய ஒரு வேகமான படை திரட்டல் தவிர்க்க முடியாததும் கூட.

ஆனால், நாட்டில் நடக்கும் யுத்தத்தின் குறிக்கோள், நடாத்தப்படும் விதம், அது நடாத்தப்படுவதற்கான அரசியல் காரணத்தின் நியாயத்தன்மை என்பன தெளிவுபடுத்தப்பட்ட ஒரு நிலையில் மட்டுமே படைக்கு ஆட்கள் சேருவது பற்றிய உள்ளார்ந்த ஊக்கத்தைப் பெறுவார்கள். அப்படி எதுவும் இல்லாத பட்சத்தில் அது எவ்வளவு தான் கவர்ச்சியான "சம்பளத்தை"க் காட்டிய போதும், படையில் இணைவதற்கான ஊக்கத்தை ஒருபோதும் இதனால் வழங்கி விட முடியாது.

ஏனென்றால் யுத்தத்துக்கான ஆட்சேர்ப்பு என்பது இரத்தம் சிந்துகின்ற, உயிரை இழக்கின்ற ஆபத்து நிறைந்த ஒரு தொழில் நோக்கிய ஆட்சேர்ப்பு. தமது சாவுக்கு நியாயமான அர்த்தம் இருந்தால் ஒழிய யாரும் வெறும் பணத்திற்காக இராணுவத்தில் சேர்வதில்லை. வறுமையிலும் வறுமையால் பாதிக்கப்பட்ட, வேறு தொழில் எதுவும் கிடைக்காத ஒரு சிலரும் கூட படையில் சேர்ந்து கொள்ள விரும்பக்கூடும். ஆனால் அவர்களது அக்கறை சம்பளத்தின் மீதும், பிற சலுகைகள் மீதும் மட்டுமே இருக்குமேயொழிய யுத்தத்தை நடாத்துவதில் அல்ல.

இலங்கைப் படையின் தலைமை அதிகாரி என்ன தான் தற்பெருமையுடன் இராணுவத்தைப் பற்றிப் புகழ்ந்த போதும், அது குறிப்பிடத்தக்க வெற்றியை தீர்க்கமாக பெறமுடியாமல் இருப்பதில் இத்தகைய "சம்பளத்துக்கான தொழில்" காரணமும் ஒன்றாகும்.

எவ்வாறாயினும், அரசாங்க அதிகாரிகளை கூப்பிட்டு இராணுவ தலைமை அதிகாரி விடுத்துள்ள வேண்டுகோள் இரண்டு முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது. அரசாங்க அதிபர்கள் இலங்கை நிர்வாக சேவையின் உயர்மட்ட உத்தியோகத்தர்கள், அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் பரவலாக நடப்பதற்கு பிரதேச ரீதியில் பொறுப்பாக இருப்பவர்கள், அவர்கள் நேரடியாக பொது நிர்வாக அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் கட்டுப்பட்டவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அல்லது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இவர்களது அதிகாரங்கள் மீது இராணுவ அதிகாரிகளது செல்வாக்கும் கட்டுப்பாடும் நிலவி வருகிறது. இந்த நிலைமை, கிட்டத்தட்ட முழு நாட்டுக்கும் பரவும் ஆபத்துக்கான ஒரு சமிக்ஞையாக இந்த மாநாட்டினை எடுத்துக்கொள்ளலாம். இது ஒன்று.

இரண்டாவது, அரசாங்க சிவில் நிர்வாகத்திற்கான அரச ஏஜன்டுகளாக செயற்படும் இவர்கள் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் பிரச்சாரத்திலும் ஈடுபடுமாறு கோரப்படுவதன் மூலம் இராணுவத்தின் ஏஜன்டுகளாகவும் மாற்றப்படும் ஒரு நிலைமை தோன்றுகிறது. அரசாங்க அதிபர்கள் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் ஏஜன்டுகளாக மாறும் பட்சத்தில், அவர்களது சிவில் நிர்வாகத் தன்மை சந்தேகத்துக்குரிய ஒன்றாக மாறும் ஆபத்து உருவாவதுடன் அவர்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் ஒன்றாகவும் இது மாறிவிடும்.

யுத்தம் நியாயமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், குறிக்கோள்களுடன் நடப்பதாகவும் இருக்கும் ஒன்றாக அமையுமானால், இராணுவத்தில் ஆட்கள் சேர்வதற்கு இவ்வளவு கிடப்பட வேண்டிய எந்த தேவையும் இராணுவத்திற்கும் இருக்காது.

இங்கு நடக்கிற யுத்தம் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம், அநியாயமாக ஒருபிரிவு மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள யுத்தம், ஒரு சில இனவாத அரசியல்வாதிகளது இனவெறிக்காக நடாத்தப்படும் அர்த்தமற்ற யுத்தம்.

இதற்காக தம்மையும் தமது பிள்ளைகளையும் எவ்வளவு காலம் தான் பரிகொடுக்க மக்கள் தயாராக இருப்பர்? சமாதானத்தை எதிர்பார்க்கிற மக்கள், படையில் சேர ஆர்வம் காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பது எப்படி?

அரசாங்க அதிபர்களும், இராணுவமும் விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய கேள்வி

## வன்னிப் போக்குவரத்து:

## பாதுகாப்பின் பேரால் மீறப்படும் அடிப்படை உரிமைகள்!

வன்னிப்பகுதிக்கும் வவுனியா மன்னார் உட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையேயான பொதுமக்கள் போக்குவரத்தில் புதிய நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே, இந்தக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் உள்ள குடிசனக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரிகள், வன்னிப் பகுதிகளில் இருந்து வந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் வவுனியாவில் தங்கியிருந்ததாகவும், அவர்களைத் தமது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடாகவே, வன்னிப்பகுதியில் இருந்து பொதுமக்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வருவதற்கு கடந்த மூன்று வாரங்களாக அனுமதிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

ஆயினும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்கள் தவிர, நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்ல வேண்டியவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்ற பின்னரே, அங்கு செல்ல முடியும் என்ற நடைமுறையும் இப்போது கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது என்ன காரணத்திற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது தெரியவில்லை. பொதுவான பாதுகாப்பு நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப்பகுதியில் உள்ள மக்கள் தமது பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்காக வவுனியா மன்னார் போன்ற இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வரவேண்டிய கட்டாயத் தேவை உடையவர்களாகவே இருக்கின்றார்கள். அரச அலுவல்கள். வங்கி அலுவல்கள், வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு, உயர் கல்வி வாய்ப்புகளுக்காக என்று பல்வேறு தேவைகளுக்காக அவர்கள் இப்பகுதிகளுக்குள் வரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

அத்துடன், வன்னிப்பகுதி என்பது இந்த நாட்டின் ஒரு பகுதியே தவிர, வேற்றுநாட்டின் ஒரு பகுதியல்ல. ஏனென்றால், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், அவர்களுடைய உற்றார், உறவினர், நண்பர்கள், வேண்டியவர்கள் என பல்வேறுபட்டவர்களும் இருக்கின்றார்கள்.


குடும்ப வைபவங்கள், குடும்பங்களில் நிலவுகின்ற துக்ககரமான சம்பவங்கள் என்பவற்றில் கலந்துகொள்வதற்காக, இரண்டு பிரதேசங்களிலும் உள்ளவர்கள் பரஸ்பரம் சென்று பங்குபற்ற வேண்டிய சமூகத் தேவைகளும் இருக்கின்றன. இவற்றுக்காகவும் வன்னியில் உள்ளவர்கள். இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும், இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ளவர்கள் வன்னிப்பகுதிகளுக்கும் சென்று வரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

பகுதிக்கும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கும் இடையிலான பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையானது, ஓர் அடிப்படை வாழ்க்கைத் தேவை என்றுகூடக் கூறலாம். இத்தகைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாதவாறு இராணுவத்தினரின் பிரயாணக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் தடையாக இருக்கின்றன.

பொதுவான ஒரு தடையாக மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்டவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படும் அளவிற்கு இந்தத் தடைகள் அவர்களுடைய வாழ்க்கையோட்டத்தில் குறுக்கீடு செய்கின்றது. ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், இரத்த உறவுக்காரர்கள், மணம் முடித்த வகைகளிலான உறவினர்கள், என்பதோடு, சிலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களான இரத்த உறவினர்களும் இந்த இரு பிரதேசங்களிலும் வாழ்கின்ற

19 ⇦

## தோழர் சண் மறைந்து பெப்ரவரி 8ம் திகதியுடன் ஏழாண்டுகள் ஓடிவிட்டன



இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடி தலைவர்களில் ஒருவரும் உறுதி குலையாத போராளியுமான தோழர் சண்முகதாசன் அவர்கள் தனது இறுதிக்காலம் வரை தான் கொண்ட கொள்கைகளின் மீதும் விடாப்பிடியான பற்றுறுதியுடன் செயற்பட்டார். அறுபதுகளில் உலக கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட தத்துவார்த்த போராட்டத்தில் சண் மார்க்சிய, லெனினிய, மாசேதுங் சிந்தனைகளின் அடிப்படையில் செயற்பட்டதுடன் இலங்கையின் புதிய கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கலுக்கும் காரணமாக இருந்தார்.

40களில் தனது பல்கலைக்கழகப் படிப்பை முடித்துவிட்டு கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக சேர்ந்து கொண்டார். இலங்கையின் தொழிலாளர்களது உறுதிமிக்க தலைவராக பல்வேறு தொழிற்சங்க வெகுஜனப் போராட்டங்களை தலைமை தாங்கி நடாத்தினார்.

இலங்கையில் குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் இடதுசாரி இயக்கம் வேரூன்றவும், இடதுசாரி சிந்தனைகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வளரவும் முக்கிய காரணமாக இருந்தார் தோழர் சண்.

கொள்கையில் உறுதி, ஆழமான புலமை, எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அக்கறையும் கொண்ட ஒரு தலைவர் தோழர் சண். அவரது இந்த இயல்பு தான், அவரை ஒரு சக்திமிக்க தலைவராகவும், அதேவேளை தவறுகளை சுயவிமர்சனத்துக்குள்ளாக்கும் பண்புமிக்கவராகவும் இணைத்தது எனலாம். இறுதிக் காலங்களில் கம்யூனிச இயக்கம் இனப்பிரச்சினை தொடர்பாக விட்ட தவறுகளை உணர்ந்து கொண்ட அவர் அவைபற்றி வெளிப்படையாக பேசவும் எழுதவும் செய்தார்.

தோழர் சண் உருவாக்கிய சிந்தனையின் தாக்கம் இன்றும் எம் நாட்டு இடதுசாரி, விடுதலை அரசியலில் வழிகாட்டும் ஆசானாய் செயற்பட்டு வருகின்றது எனலாம்.

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடிகளின் ஒருவரான

**தோழர் நா. சண்முகதாசன் அவர்களின்**

7வது நினைவுக்

# கருத்தரங்கு

13. 02. 2000 ஞாயிறு பி. ப. 04.30 மணி
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனக்
கேட்போர் கூடம்
(58, தர்மராம மாவத்தை, வெள்ளவத்தை)

தலைமை

**பேராசிரியர் சி. சிவசேகரம்**

கருத்துரை வழங்குவோர்

- *விக்டர் ஐவன் (ஆசிரியர் "ராவய")*
- *தி. சச்சிதானந்தன் (சட்டத்தரணி)*
- *பற்றிக் பெர்ணான்டோ (தேசிய ஜனநாயக இயக்கம்)*
- *பேராசிரியர் சோ. சந்திரசேகரம் (கொழும்பு பல்கலைக்கழகம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*மார்க்சிச கற்கைக்கான சண்முகதாசன் நிலையம்*

அழைப்பாளர்கள்
இ. தம்பையா
செ. சிவஞானம்
வி. தனபாலசிங்கம்